# பண்பாடும் பெண்



- நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் -

ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Presented by :

Mrs. NOORUL AIN NAJMUL HUSSAIN
DISTRICT PRESS OFFICER - COLOMBO
(GOVT. - INFORMATION DEPT)
NO. 3, MEDIA [illegible] COMPLEX
BATTARAMULLA
Phone : 27[illegible]3261

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பரணீதரன்



# பண்பாடும் பெண்





நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்

ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PANN PADUM PENN

(A Collection of articles on women's affairs)

Author :- Mrs. Noorul Ain Najmul Hussain

Published by :- M.F. Mohamed
President,
Sri Lanka Muslims Front,
253, Layards Broadway,
Colombo - 14.

Printed at :- Top Prints - Colombo -12

Cover designed by :- Rasheed M. Riyal

First Edition :- 16th MARCH, 1997

© Reserved

PRICE: 60/-

Presented by :

Mrs. NOORUL AIN NAJMUL HUSSAIN
DISTRICT PRESS OFFICER - COLOMBO
(GOVT. - INFORMATION DEPT)
NO. 3, MEDIA HOUSING COMPLEX
BATTARAMULLA
Phone : 2788281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னைப் பெற்றெடுத்து தம் கண்ணெனக் காத்து, பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் கல்வியை, கருத்தாயூட்டி, தம் பசி பொறுத்து என் பசியைப் போக்கி கடுகளவேனும் குறைவிலா அன்பையும் அமுதாய்ப் பொழிந்து சமூகத்தில் நல்லதொரு பிரஜையாய் நான் வாழ வழியமைத்து இன்றும் என் முன்னேற்றங்களைக் கண்டு பெரிதுவக்கும் என் நெஞ்சில் நிறைந்த என்னுயிர் பெற்றோர்.





அல் ஹாஜ் மஹ்மூத் முஹம்மத் ரஷீத்
ஜனாபா உம்மு சல்மா ரஷீத் ஆகிய
இருவருக்கும் இந்நூல் - என் இதயத்தின்
சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of Felicitation

I have great pleasure in releasing this Message of Felicitation on the occasion of the publication of the collection of articles on women's affairs under the title of 'PANN PADUM PENN' (THE SINGING WOMAN).The Publication task is undertaken by the Sri Lanka Muslims Front, an Organisation with the avowed objective of social reformation through social welfare activities. The President of the Front, Mr. M.F. Mohamed is a young and energetic social worker whose dreams of a morally and intellectually enlightened society should prove to be no utopia.

The author of the articles is none other than Mrs. Noorul Ain Najmul Hussain of the Government Information Department and a sub editor of the former Tamil daily "Dinapathi. Her Husband Mr. Najmul Hussain too is a well - known poet who has published his literary works.

I fully appreciate the gesture of support extended by the Sri Lanka Muslims Front for the publication of this work of art in keeping its policy to render all possible assistance to young writers and artistes.

Hon . Nimal Siripala De Silva MP
Minister of Housing, Construction and Public Utilities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இலங்கை வாழ் முஸ்லிம் சமுதாயத்தில் பெண் எழுத்தாளர்கள் மிக மிகக் குறைவு. அதனால் ஒரு நல்ல எழுத்தாளராக முகிழ்க்கக் கூடியவர் என்ற அறிகுறி தோன்றும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களை நான் விசேஷ கவனமெடுத்து, ஊக்கமளித்து வளர்ப்பது உண்டு.

இந்த வகையில் என்னிடம் வந்து சேர்ந்தவர்தான் என் மகளுக்கு சமமான நூருல் அயின். பத்தாண்டு காலம் அவர் தினபதி - சிந்தாமணி பண்ணையிலே பயிற்சி பெற்றார். ஆரம்பத்தில் நிருபராகவும், பின்னர் ஓர் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார். சிந்தாமணியிலும், தினபதி இஸ்லாமிய பூங்காவிலும் நிறைய எழுதினார். பத்தாண்டு பயிற்சி என்பது சாதாரணமல்ல, பத்திரிகைத் துறையில் ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரியின் தரத்தை அவர் பெற்றுவிட்டார்.

பத்திரிகையில் பணிபுரியும் போதே அவர் திருமணம் செய்து கொண்டார். எனது இனிய நண்பர் நஜ்முல் ஹுசைன் என்ற புதுக் கவிஞர் அவருக்கு மணாளனாக வாய்த்தது மிகவும் பொருத்தமாகிவிட்டது. மனம் ஒன்றிய தம்பதியினராக இருவரும் சேர்ந்து இலக்கியத் தொண்டாற்றி வருகிறார்கள்.

நூருல் அயின் முஸ்லிம் சமுதாயத்தில் ஒரு சிறந்த எழுத்தாளராக இன்று விளங்குகிறார். அத்தோடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஓர் உத்தியோகத்தராகவும் செயல்படுகிறார். அவர் தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் இலக்கியம் படைக்கிறார். அவருடைய முன்னேற்றம் பாராட்டத்தக்கதாகும்.

எதைப்பற்றி எழுதுவது என்ற சஞ்சலமே இல்லாதவர் நூருல் அயின். எந்தத் தலைப்பிலும் எழுத வல்லவர் அவர். சமுதாயப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு சிறு சிறு கட்டுரைகளாக எழுதி விடுவார். சிந்தாமணியில் எழுதி இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளின் தலைப்புக்களைப் பார்த்தால் விஷயங்களை எவ்வாறு சாமர்த்தியமாக தேர்ந்தெடுத்துள்ளார் என்பது புலனாகும். அத்தோடு- மறுமலர்ச்சி கருத்துக்களைத் துணிவாக எடுத்துச் சொல்லும் பண்பும் இவருக்குண்டு.

உதாரணத்துக்கு, இத்தொகுதியில் உள்ள 'சமூக சட்ட திட்டங்கள் ஆண்களுக்கு பக்க பலம் - பெண்களுக்கு பாதகம்' - 'தம்பதியர் நலமுடன் வாழ தனிக்குடித்தனம் சிறந்த வழி' போன்ற கட்டுரைகளை சான்றாகக் கொள்ளலாம்.

சமுதாயப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு அழகான கட்டுரைகளாக எழுதி விடுவார் நூருல் அயின். எழுத்து நடையும் மிகமிக இலகுவானது. தெளிவான அமைப்பு. தினபதி - சிந்தாமணியின் எளிமையான வசன நடை இவரது எழுத்துக்களில் ஒளி வீசும். அதனால் இவர் எழுதுவதைப் படிப்பதும் மனதில் இருத்திக் கொள்வதும் வாசகருக்கு பஞ்சு மிட்டாய் சாப்பிடுவது போன்ற ஒரு சுவையையும் திருப்தியையும் ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIII

பிரமுகர்களைப் பேட்டி காண்பதிலும், அவற்றைச் சுவைபட எழுதுவதிலும் நூருல் அயினுக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. குடும்பப்பாங்கான பேட்டிகளை அவர் சுவாரஸ்யம் குன்றாமல் எழுதுவார். இந்த வகையில் அவருக்கு சிங்கள மொழி அறிவும், தமிழ் ஞானமும் நன்கு பயன்படுகின்றன.

தினபதி - சிந்தாமணியில் அவ்வப்போது வெளிவந்த கட்டுரைகள் சிலவற்றையும் வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான கட்டுரைகள் சிலவற்றையும் திரட்டி ஒரு நூலாகப் பிரசுரம் செய்கிறார் நூருல் அயின். இது அவருடைய முதல் முயற்சி. இந்த நூல் சிறப்பாக அமைய வேண்டும் என்றும், பெரும்பாலான வாசகர்களால் வரவேற்கப்பட வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

**எஸ்.டி. சிவநாயகம்.**

(முன்னாள் தினபதி, சிந்தாமணி பிரதம ஆசிரியர்)

பிரதம ஆசிரியர் - சூடாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IX
# வாழ்த்துரை

நூருல் அயின் - இவர் இலங்கை வானொலியின் நீண்டகால அபிமானி. அதிலும் முஸ்லிம் சேவையில் முஸ்லிம் பெண்கள் எழுத்தாளர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர். பாடசாலை மாணவியாக இருந்த காலத்திலேயே அவரை எனக்கு நன்கு தெரியும். இவரது சிறிய தந்தையான மர்ஹூம் எம்.எம். பாயிஸ் எனது உற்ற நண்பர். அவர் கல்வி அதிகாரியாகவும், பணிப்பாளராகவும் கடமை புரிந்த காலத்தில் எமது முஸ்லிம் சேவையில் 'அறிவுப் பூங்கா' என்ற போட்டி நிகழ்ச்சியை நடத்தி வந்தார். எமது முஸ்லிம் சேவையில் ஒரு போட்டி நிகழ்ச்சியை முதன் முதலில் ஆரம்பித்த பெருமை அன்னாருக்குண்டு. மர்ஹூம் பாயிஸைப் போலவே அவரது மகள் நூருல் அயினும் சிறுவயது முதல் ரஷீத் நூருல் அயின் என்ற பெயரில் எமது முஸ்லிம் சேவைக்கு எழுதி வந்தார்.

முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் முக்கியமான நிகழ்ச்சிகளில் எல்லாம் இவர் ஆக்கம் படைத்து குரலும் கொடுத்திருக்கிறார். 1975ம் ஆண்டளவில் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சிக்கு 'ஸஹாபாப் பெண்மணிகளின் சரித்திரப் பின்னணி' என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை எழுதி வந்தார். 1977ம் ஆண்டு முதல் இன்று வரை சுமார் 18 வருட காலமாக 'மாதர் மஜ்லிஸ்' நிகழ்ச்சிக்கான பிரதி தயாரிப்பாளராக தொடர்ந்து எழுதி வருகிறார்.

சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் போன்றவற்றை பல கோணங்களில் ஆராய்ந்து ஆக்கங்களை எழுதியுள்ளார். அது மாத்திரமின்றி பெண்கள் சம்பந்தமான கலந்துரையாடல்கள் விசேட கவியரங்குகள், பெருநாள் சிறப்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்கும் தனது ஆக்கப் பங்களிப்பினைச் செய்துள்ளார். எனவே முஸ்லிம் சேவையில் இவரது பங்களிப்பினை எம்மால் என்றும் எளிதில் மறந்து விட முடியாது.

நூருல் அயின் பத்திரிகைத் துறையினிலும் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டவர். தினபதி, சிந்தாமணி ஆசிரிய பீடத்தில் நீண்ட காலம் பணிபுரிந்தவர். இன்றும் அத்துறையினில் மிகுந்த ஆரவத்துடன் ஈடுபட்டு வருகிறார்.

அத்துடன் இவர் நல்ல முற்போக்குச் சிந்தனையைக் கொண்டவர். எந்தத் தலைப்பிலும் எளிதில் எழுதுபவர். அதிலும் சுவையாக எழுதுவதில் வல்லவர். துணிச்சல் மிக்கது இவரது மனம் மட்டுமல்ல - பேனா முனையும்தான். இவர் கவிதை, கட்டுரை, சிறுகதை, உரையாடல் போன்ற எதை எழுதினாலும் அதில் பெண்களின் முன்னேற்றத்திற்கான 'கோஷம்' தொக்கி நிற்கும்.

'நூருல்' என்ற ஒளி 'நஜ்முல்' என்ற நட்சத்திரத்துடன் இல்லறத்தில் சங்கமமானதும் இவர் இலக்கிய உலகில் சோர்வடையாது ஊன்றிக் கால் பதிக்க நல்ல சகுனமாய் அமைந்தது என்றே கூற வேண்டும். இவரது கணவரான எழுத்தாளர் கவிஞர் நஜ்முல் ஹுசைனும் ஏற்கனவே 'பனித் தீ' என்ற கவிதை நூலைத் தந்த நூலாசிரியர்தான். அவரும் எனக்கு நீண்ட நாள் பரிச்சயமானவரே. இன்று அவரது மனைவியும் 'பண்பாடும் பெண்' என்ற இந்நூலைத் தந்து அந்தப் பட்டியலில் இணைவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் குலத்துக்காக 'பண்பாடும் இந்தப் பெண்' மேலும் பல்லாண்டு காலம் இலக்கியம் படைக்க வேண்டும். முஸ்லிம் பெண் எழுத்தாளர் வரிசையில் ஜோதியாக 'ஒளி'யாக பிரகாசிக்கும் இந்த 'நூருல்' அயினுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் மென்மேலும் சிந்தனை வளத்தையும் ஒளிமயமான எதிர்காலத்தையும் வழங்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

**பத்ருல் மில்லத் அல் ஹாஜ் மௌலவி *Z.L.M.* முஹம்மத்.**

பணிப்பாளர்,
முஸ்லிம் சேவை,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணி இன்று தன்னை ஒரு படி மேலே எடுத்துச் செல்கிறது. ஒரு எழுத்தாளரின் ஆக்கத்திற்கு ஊக்கமளிக்கும் முகமாக இந்நூலினை உங்கள் கைகளில் தவழவிடுகிறது.

சமுதாய குறைபாடுகளைக் களைந்தெறியும் ஆற்றல் எழுத்துக்கு உண்டு. ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணியின் குறிக்கோளில் தலையாயது சமுதாய குறைபாட்டினை களைந்தெறிவதே.

அதனால் தான் இவ்வெழுத்து முயற்சிக்கு உறுதுணையாக இருப்பதையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்.

"பண்பாடும் பெண்" என்ற இந்நூலினை எழுதியிருக்கும் திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் மிகுந்த ஆற்றல் உள்ளவர். தற்போது அரசாங்க தகவல் திணைக்களத்தில் பணிபுரியும் அவர் சிறந்த எழுத்தாளர்; பத்திரிகையாளர்.

தினபதி - சிந்தாமணி பத்திரிகையின் உதவி ஆசிரியராக சுமார் 10 ஆண்டுகள் கடமை புரிந்தவர். தற்போது அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் "திங்கள்" தமிழ் சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும், "தெச(த்)திய" சிங்கள சஞ்சிகையின் சிறப்பு எழுத்தாளராகவும் பணிபுரிகிறார். அத்துடன் "ஜனனி" என்ற ஜனரஞ்சக சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகிக்கிறார்.

சமூகப் பிரச்சினைகள் குறித்து அவர் எழுதியுள்ள பல நூறு கட்டுரைகள் தேசிய பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. அவற்றில் பெண்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும், பெண்களுக்கு அறிவுரை கூறும் சில கட்டுரைகளின் தொகுப்பே "பண்பாடும் பெண்" என்ற இந்நூல்.

இந்நூலை வாசிப்பதன் மூலம் பெண்கள் தமது குடும்ப வாழ்வில் கணவன், பிள்ளைகள், உற்றார் உறவினர்களுடன் சிறப்புற வாழ்வதற்குரிய வழிமுறைகளையும், ஆண்கள், பெண்களை தமது கண்களாய் மதிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கொள்வர் என்றும் நம்புகிறோம்.

எமது இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்கிய மாண்புமிகு வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சர் திரு. நிமல் ஸ்ரீபால டி சில்வா அவர்களுக்கு எமது முன்னணி கடமைப்பட்டுள்ளது.

அவ்வாறே இந்நூலுக்கு சிறப்பான ஓர் அணிந்துரையை தந்திருக்கும் மதிப்பிற்குரிய திரு எஸ்.டி. சிவநாயகம் (முன்னாள் பிரதம ஆசிரியர் தினபதி, சிந்தாமணி, பிரதம ஆசிரியர்-- சூடாமணி) அவர்களுக்கும் அழகுற அட்டைப் படத்தை அமைத்த உடுதெனிய ரஷீத் எம். ரியால் அவர்களுக்கும் இந்நூலை வெளிக்கொணர்வதில் எம்முடன் ஒத்துழைத்த சகலருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எழுத்தாளரின் எழுத்து முயற்சிக்கு ஊக்கமளிக்கும் முகமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணி இந்நூலினை தங்களது கைகளில் வழங்கியுள்ளது. எமது இம் முயற்சிக்கு துணை நிற்கும் பொறுப்பு வாசகர்களாகிய உங்களைச் சார்ந்தது. அப்பணியினை தாங்கள் செவ்வனே செய்வீர்கள் என நாம் நம்புகிறோம்.

**எம். எப். முஹம்மத்**

தலைவர்

**ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இடரொழித்து மறையளித்த
இறைவனுக்கே புகழனைத்தும்!

வீட்டிலே ஆங்காங்கே குவிந்து கிடக்கும் எனது பத்திரிகைப் படைப்புக்களை பார்க்கும் போதெல்லாம் "இவற்றை பத்திரப்படுத்தி ஒழுங்காக எடுத்து வைக்க எமது வீட்டில் இடமில்லையே" என்று ஏங்கித் தவித்த நாட்கள். வீடு ஒழுகியதால் மழை நீர் பட்டு என் பத்திரிகைப் படைப்புக்கள் கறையான் கடிக்கு இலக்காகி, என் மனதில் கறைபடிந்த கனத்த நாட்கள் எத்தனை? எத்தனையோ?

இத்தகைய ஒரு படைப்பாளியின் இதயச் சுமையை ஓரளவுக்கேனும் இறக்கி வைத்த அந்த பரந்த உள்ளங்களுக்கு - ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணிக்கு நன்றி சொல்லி நகர்த்துகிறேன் என் பேனா முனையை.

நான் ஆக்கங்கள் படைப்பதற்காக எனக்கு நல்ல கற்பனை வளத்தையும் மொழித்திறனையும் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வை முதற்கண் துதிக்கிறேன்.

அல் ஹம்துலில்லாஹ்!

அடுத்து என்னைப் பெற்று வளர்த்து, பேணிப் பாதுகாத்து இன்னும் உயிருக்குயிராய் என்னை நேசிக்கும் அந்தப் பாச நெஞ்சங்களான என் பெற்றோரை இங்கே நான் நன்றிப் பெருக்குடன் நோக்குகிறேன்.

பத்திரிகை உலகில் நான் கால்பதிக்க வழிகோலிய, என் முன்னேற்றங்களின் முதுகெலும்பாகத் திகழும் என் பாசமிகுந்த சோதரர் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் என்றும் என் நன்றிக்குரியவர்.

அடுத்து தினபதி, சிந்தாமணி பத்திரிகை அலுவலகத்தில் நான் கடமையேற்ற நாள் முதல் அவ்வலுவலகம் மூடப்படும்வரை சுமார் 10 ஆண்டுகாலமாக என்னைப் பத்திரமாகப் பக்குவமாக பார்த்து பராமரித்து ஒரு தந்தையைப் போல என்னை ஆதரித்து, பத்திரிகையுலகில் நான் வளர நல் உரமும் உற்சாகமும் ஊட்டிய உயர்திரு. எஸ்.டி. சிவநாயகம் அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவள். என் எழுத்துக்களை செப்பனிட்ட செம்மலும் அவரே. திருமணத்தின் பின்னரும் என் இலக்கியப் பயணம் தடையின்றி தொடர வேண்டும் என என் கணவருக்கு ஆசியுரையுடன் அன்புக் கட்டளையும் இட்ட அந்த பெருந்தகையை நான் பெரிதும் மதிக்கிறேன்.

வீட்டு வேலைகளின் மத்தியிலும் இலக்கிய பணிகளை விட்டுவிடாது பற்றிக் கொள்ள எனக்கு பக்க பலமாக இருப்பவர்தான் என்னுயிர் கணவர் என் நஜ்முல் ஹுசைன் அவர்கள். எனது முன்னேற்றங்களுக்கு ஏணிப்படிப்போல் நிற்கும் ஏந்தலும் அவரே! அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாதல்லவா? இங்கே எனக்கு இல்லறத்திலும், இலக்கியத்திலும் அச்சாணியாகத் திகழும் என் அன்புள்ளத்தை நான் உவகையுடன் நினைக்கிறேன்.

பண்பாடும் பெண் என்ற எனது இந்நூலுக்கு பெருமனதுடன் ஆசியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிய மாண்புமிகு வீடமைப்பு, நிர்மாணத்துறை பொது வசதிகள் அமைச்சர் திரு. நிமல் சிறிபால டீ. சில்வா அவர்கள் என் மதிப்புக்குரியவர். பல பொறுப்புகளுக்கு மத்தியிலும் என்னையும் பரிவோடு நோக்கி இந்நூலுக்கு நல்லதோர் ஆசியுரையை வழங்கிய மாண்புமிகு அமைச்சருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

அவ்வாறே வாழ்த்துரை வழங்கிய வானொலி முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் "பத்ருல் மில்லத்" அல்ஹாஜ் மௌலவி இஸட். எல்.எம். முஹம்மத் அவர்கள் என் அன்புக்கும் பண்புக்கும் உரித்தானவர். முஸ்லிம் சேவையில் எனது பங்களிப்பினை மதித்து, எனது நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய பணிப்பாளர் அவர்களுக்கும் எனது ஆழிய நன்றிகள்.

நான் முற்றிலும் எதிர்பாராத வேளையில் என் ஆக்கங்களை நூலுருவாக்க வேண்டும் என்ற பேரவாவில் எம்மில்லம் தேடி வந்த நல்ல உள்ளமான ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணியின் தலைவர் ஜனாப் எம்.எப். முஹம்மத் அவர்களுக்கும் அவரது துணைவியார் ஜனாபா பாத்திமா சப்ரினா பிஸ்லி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது நூலின் பிரசுரத்துக்கான சகல செலவினங்களையும் பொறுப்பேற்று தமது சொந்த வேலையாகவே இதைக் கருதி இந்நூலை இன்று உங்கள் கரம் தவழ வழி சமைத்த ஸ்ரீ லங்கா முஸ்லிம்கள் முன்னணி என்றும் முன்னணியில் திகழ வேண்டும் என ஆசிக்கிறேன்.

எனது ஆக்கங்கள் நூலுப்பெற வேண்டும் என்று முதன் முதலில் அவாக் கொண்ட ஒரு அன்பு நெஞ்சத்தையும் இங்கு நினைவு கூறுவது என் கடமை என கருதுகிறேன். உடுகொட ருக்கஹவிலயைச் சேர்ந்த மௌலவி எம்.ஆர்.எம். சுலைமான் அவர்கள் எனது ஆக்கங்களை ஒன்று திரட்டி, தென்னிந்தியாவில் பிரசுரித்து நூலுருவாக்க மிகவும் பிரயத்தனம் கொண்டார். சந்தர்ப்பம் சாதகமாகாததினால் அந்த அரிய வாய்ப்பை நான் இழந்துவிட்டேன். எனினும் நானும் ஒரு நூல் வெளியிட வேண்டும் என்ற அந்த எண்ணத்தை உருவாக்கிய அந்தப் பெருந்தகையை இங்கு நினைவு கூர்வது பொருத்தம் தானே?

இறுதியாக வானொலியிலும் பத்திரிகைகளிலும் எனது படைப்புக்களை கேட்டு ரசித்தும், சுவைத்தும் என்னைச் சதா உற்சாகப்படுத்தி வரும் என் அன்புக்கினிய வாசகர் வட்டத்தினரும், நான் தற்சமயம் கடமை புரியும் அரசாங்க தகவல் திணைக்களத்தில் எனக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் சக அன்பர்கள், சகோதரர் ஹில்மி முஹம்மத் அவர்கள், உயர் அதிகாரிகள் அனைவரும் என் நன்றிக்குரியவர்கள். என் ஆக்கங்களுக்கு இடமளித்த பத்திரிகைகள், வானொலி இவை யாவுமே என் நன்றிக்கு உரித்தான பெறுமதிமிக்க சொத்துக்கள்.

பெண்களுக்கென்று சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனியான பல பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தினசரி வெளிவந்த வண்ணமுள்ளன. ஆனால் தமிழ் மொழியில் இத்தகைய சஞ்சிகைகள் - பத்திரிகைகள் வெளிவருவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகமிகக் குறைவு. எனவே தான் பெண்களுக்கென்று தனியான ஒரு நூலை எழுதி வெளியிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அந்த ஆசையின் வெளிப்பாடே இந்தப் "பண்பாடும் பெண்"

பெண்கள் நல்ல பண்பாடுகளுடன் வாழ வேண்டும் என்பதை மையமாகக் கொண்டே நான் இந்நூலை உருவாக்கினேன். இல்லாள் என்றும் நல்லாள் ஆக வேண்டும். அதற்கு இந்நூல் ஒரு நல்லேடாகத் திகழ வேண்டும் என்பதே என் வேணவா.

பூவையர்க்கோர் பூஞ்சரமாக இன்று நான் இந்நூலை உங்கள் முன் சமர்ப பிக்கின்றேன். இந்நூல் பெண்களை மட்டுமல்ல ஆண் - பெண் இருபாலாரது உள்ளங்களையும் ஊடுருவிச் செல்ல வேண்டும். அதன் மூலம் புண்பட்ட பல நெஞ்சங்கள் நல்ல பண்பட வேண்டும், பண்பாடுடன் வாழ வேண்டும் என்பதும் என் நப்பாசை? என் ஆசை நிறைவேறுமா?

இந்தப் "பண்பாடும் பெண்" உங்கள் உள்ளங்களில் ஏதாவது ஒரு தாக் கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றே விரும்புகிறேன்.

ஆமாம்! "பண்பாடும் பெண்" உங்கள் மனதில் ஏற்படுத்திய தாக்கமென்ன? அடியேன் யான் அறிய விரும்புகிறேன். தெரியப்படுத்துவீரகளா அன்பு நெஞ்சங்களே?

அந்த எதிர்பார்ப்புடன் அல்லாஹ் நாடினால் மற்றுமொரு நூலில் சந்திக் கிறேன். இன்ஷா அல்லாஹ். நன்றி கலந்த வாழ்த்துக்களுடன் விடை பெறுகிறேன்.

**80 / 6, சில்வர் ஸ்மித் லேன்,** **உங்கள் அன்பின்**

கொழும்பு - - 12. **நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**

**08 - 03 - 1995.** **(நூலாசிரியை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தினபதி
* சிந்தாமணி
* தினகரன்
* வீரகேசரி
* ஜும்ஆ
* உதயம்
* முஸ்லிம்
* ஹிஜ்ரா
* முஸ்லிம் ரைம்ஸ்
* தூது
* இலட்சிய இளைஞன்
* கர்பலா
* நிதாவுல் இஸ்லாம்
* அரங்கம்
* குன்றின் ஒளி
* கண்டி முஸ்லிம் மஜ்லிஸ் மலர்
* பிறிய நிலா
* பூபாளம்
* ஜனனி
* தவஸ (දවස)
* ரிவிரச (රිවිරස)
* தொரதுரு (දොරටුරු)
* தெசதிய (දෙසතිය)
* லங்காதீப (ලංකා දීප)
* இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
* இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

என் எழுத்துப் பூக்களை வாடா மலராக்கிய இந்த வண்ணச் சோலைகளுக்கு என் நன்றிப்பூக்கள் - நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் எழுத்துப் பயிருக்கு உரமூட்டிய இந்த உத்தமர்களுக்கு நன்றிப் புஷ்பங்கள்

* என்னை ஈன்றெடுத்த என்னுயிர் பெற்றோர்
* எனக்குக் கல்விக் கண்களை திறந்திட்ட கனவான்கள்
* என் அறிவுப் பசிக்கு ஆகாரமிட்ட ஆசிரியர்கள்
* என் கற்பனைக்கு களமளித்த பத்திரிகைகள்
* என் சிந்தனைச் சிதறல்களுக்கு சாமரம் வீசிய சஞ்சிகைகள்
* பத்திரிகைத் துறையில் என்னைப் பண்படவைத்த உயர்திரு எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.
* எனது முன்னேற்றப் பாதையில் என்னோடு நிழல்போல் தொடரும் என்னுயிர் கணவர்.
* எனது முன்னேற்றத்தின் முதுகெலும்பான அன்புச் சகோதரர் சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸும் ஏனைய உடன் பிறப்புக்களும்.
* எனது முன்னேற்றம் கண்டு மகிழும் அருமை மாமனார் கே.கே.எம். மொஹிதீன் அவர்கள்.
* என் மேல் பாசமழை பொழிந்த எனது சிறிய தந்தையும், கல்விப் பணிப்பாளருமான மர்ஹூம் எம்.எம். பாயிஸ் அவர்கள், எனது அருமைப்பாட்டனார் மர்ஹூம் உ. முகம்மது ஹுசைன் அவர்கள்.
* வானொலி முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அல் ஹாஜ் இஸட்.எல்.எம். முஹம்மத் அவர்கள்
* வானொலியில் முதல் வழிகாட்டியான அல் ஹாஜா மௌலவியா மலீஹா சுபைர்.
* முன்னாள் மாதர் மஜ்லிஸ் தயாரிப்பாளர் ஜனாபா ஜே. ஆயிஷா
* இந்நாள் மாதர் மஜ்லிஸ் தயாரிப்பாளரும் அறிவிப்பாளருமான ஜனாபா புர்கான் பீ. இப்திகார்.
* ரூபவாஹினி முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ரஷீத் எம் ஹபீல்
* இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையினர், தமிழ் சேவையினர்,
* ஜனனி பத்திரிகையின் பிரசுரகர்த்தா திரு. எஸ்.எச். தர்மப்பிரிய.
* பண்பாடும் பெண்ணை நூலுருவாக்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம்களின் முன்னணியின் தலைவர் ஜனாப் எம்.எப். முஹம்மத்.
* சிறப்புற அட்டைப் படத்தினை வரைந்த ரஷீத் எம். ரியால்
* பல வழிகளிலும் எனக்கு ஒத்தாசையும், நல்லாசியும், வழங்கும் அன்புள்ளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. பிறமதத்தவர்மீது | ... | 19 |
| 2. தரகர்மார்களின் தில்லு முல்லுகள் | ... | 21 |
| 3. போஷாக்கின்மையைப் போக்க | ... | 23 |
| 4. உலக ரீதியில் பெண்கள் | ... | 26 |
| 5. பெண்களுக்கு அதிகளவு புரதச்சத்து | ... | 29 |
| 6. மனதைக் கவரும் பேச்சுதான் | ... | 31 |
| 7. தெளிவான பாதை காட்டிய | ... | 32 |
| 8. மலையக மாதரின் வாழ்வு | ... | 34 |
| 9. சமூக சட்டதிட்டங்கள் | ... | 36 |
| 10. நங்கையருக்கேற்ற நவீன | ... | 38 |
| 11 பெண்களுக்கு தக்க பாதுகாப்பு | ... | 39 |
| 12. சிக்கனத்தைக் கடைப்பிடித்து | ... | 41 |
| 13. அலங்கார மோகத்தினால் | ... | 43 |
| 14. சவூதி செல்லும் நங்கையரே | ... | 45 |
| 15. பண்பாட்டுப் பாசறைகளாக | ... | 47 |
| 16. குழந்தைகள் கல்வியை | ... | 49 |
| 17. உறங்கும் மாதர் சங்கங்கள் | ... | 52 |
| 18. பிள்ளைகளுக்கு முன்னால் | ... | 54 |
| 19. தாய்மார் நியாயத் தராசாக | ... | 56 |
| 20. உழைக்கும் இல்லாள் | ... | 58 |
| 21. நகங்களைப் பேணுங்கள் | ... | 60 |
| 22. பெருநாள் தினத்தன்று | ... | 62 |
| 23. இல்லறச் சோலையில் | ... | 64 |
| 24. கட்டுப்பாடுகளை | ... | 66 |
| 25. கல்வியை வலியுறுத்திய பெருமானார் (ஸல்) | ... | 68 |
| 26. பெண்ணை ஒரு இயந்திரமாக | ... | 70 |
| 27. அதிக கவலைகளால் | ... | 72 |
| 28. அரிவையருக்கு ஆலோசனை | ... | 74 |
| 29. சுத்தத்தை நித்தமும் | ... | 75 |
| 30. திருமணம் இன்று மலர்ந்து | ... | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# பிறமதத்தவர் மீது பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்பட விடாதீர்!

"ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே, வேற்றுமையை வளர்ப்ப தனாலே விளையும் தீமையே" என்கிறார் ஒரு கவிஞர்

ஆம்! வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்வதில் தான் எத்துணை நன்மை பொதிந்து கிடக்கின்றது. இந்த ஒற்றுமை பல்வேறு வடிவங்களில் உண்டு. வீட்டில் குடும்பங்களுக்கு இடையே ஒற்றுமை அயலாருடன் ஒற்றுமை, அன்பர்களுக்கிடையே ஒற்றுமை இப்படி பல்வேறு கோணத்தில் நாம் ஒற்றுமையைக் காணலாம்.

இன்று அவசியமும் அவசரமுமானது இனங்களுக்கிடையிலான ஒற்றுமை என்றால் அது மிகையாகாது. இந்த இனங்களுக்கிடையிலான ஒற்றமையில் இல்லாளின் பங்கு இன்றியமையாதது.

"குடி உயர்ந்தால்தான் கோல் உயரும்" என்பார்கள். அவ்வாறே வீட்டில் ஒற்றுமை நிலவினால் தான் நாட்டில் ஒற்றுமை நிலவும்.

ஒரு இல்லத்தரசியானவள் தனது பிள்ளைகளின் மனதில் ஏனைய இனத்தவரைப் பற்றியும் மதிப்புடன் எண்ணும் பரந்த மனப்பான்மையை உண்டாக்கி விட வேண்டும்.

பிறமதத்தவர்களைப் பற்றி தமக்கு எதுவும் தெரியாவிட்டாலும் அவர்களைப் பற்றிய வெறுப்பு தமது குழந்தைகளின் உள்ளத்தில் இடம் பெற அனுமதிக்கக் கூடாது.

இத்தகைய வெறுப்பு எதிர்காலத்தில் சமூகத்துக்கே கெடுதலை உண்டாக்கி விடலாம்.

எந்தவொரு விடயத்தையும் பாரபட்சமற்ற முறையில் சீர் தூக்கிப் பார்க்கும் சக்தி எதிர்கால சந்ததியினரிடையே வளர வேண்டுமாயின் அவர்களுடைய மனம் எந்த இனத்தார் மீதும் துவேஷமற்றதாக இருக்குமாறு கவனிக்க வேண்டும்.

நாம் வாழ்வது சகல இன மக்களும் வாழும் ஒரு நாட்டிலாகும். இங்கு தமிழ், சிங்களம், முஸ்லிம், பறங்கியர் ஆகிய சகல இன மக்களும் வாழ்கின்றனர்.

வீட்டிலோ, வீதியிலோ பாடசாலையிலோ அல்லது பொது இடங்களிலோ தனியாக ஒரு மதத்தினரை நாம் காண்பதரிது.

நாம் அனைவரும் "மனித இனம்" என்ற ஒரே தோரணையில் ஒன்று படுவதே சிறப்பு. வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்வதில் தான் உயர்விருக்கிறது.

கறுப்பர் - வெள்ளயர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், சிங்களவர், தமிழர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் - கிறிஸ்தவர்கள் இப்படி எங்களை பிரித்துக் கொண்டு பிரிந்து வாழ்ந்தால் வீட்டிலும் ஐக்கியமில்லை. நாட்டிலும் அமைதியில்லை.

பல இன மக்கள் வாழும் இந்நாட்டில் நாம் ஒரு இனத்தவர்களை பகைத்துக் கொள்வது முறையல்ல. அது ஆரோக்கியமான செயலுமல்ல.

எல்லா மதங்களும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் தான் வலியுறுத்துகின்றன. சகல மத போதகர்களும் ஒற்றுமையாக வாழ்வதைத்தான் வலியுறுத்திச் சென்றார்கள்.

ஒவ்வொரு தாய்மாரும் குறிப்பாகப் பெண்கள் குலம் இதனை நன்கு உணர வேண்டும். எங்கும் எப்போதும், எவரையும் சகோதரர்களாகவே கருத வேண்டும்.

ஒன்றுபடாமை, ஒற்றுமையின்மையினாலேயே இன்று நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் சகலரும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட வேண்டும்.

எமது வீட்டுக்குப் பக்கத்தில் வேறு இனத்தவர் வேற்று மதத்தவர் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் தாய்மார், அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது. அவர்கள் எந்த இனத்தவராக, மதத்தவராக இருந்தாலும் எமது அயலவர்தானே என்று கருத வேண்டும்.

ஆகவே அயலவரை நேசிக்க வேண்டும். எமது இன்ப, துன்பங்களில் அவர்களையும் பங்கேற்கச் செய்ய வேண்டும். அன்பளிப்புக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். இதனால் இரு இனத்தவர்களிடையேயும் பரஸ்பர அன்பு நிலவும்.

அடுத்த வீட்டுப் பாத்திமா, முன் வீட்டு முத்துலட்சுமி, மேல் வீட்டு மாலினி, அயல் வீட்டு ஸ்டெல்லா எல்லோருடனும் போய் விளையாடுங்கள் ஆனால் சண்டை போடக் கூடாது சரியா?" இப்படியாக தாய் தன் பிள்ளைகளுக்கு இன ஒற்றுமையை வளரச் செய்யலாம்.

தமது பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ளும் தாய்மாரின் கரங்களில் தான் நமது நாட்டின் எதிர்காலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இனரீதியில் ஒற்றுமைப்பட்ட நாட்டை கட்டி எழுப்புதல் அவர்களது கடமையாகும்.

**சிந்தாமணி 08. 05. 88.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரகர்மார்களின் தில்லுமுல்லுகள் தணிய வேண்டும்

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்பது ஆன்றோர் வாக்கு, "திருமணங்கள் ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்பது புதுமொழி. இவை இரண்டுக்கும் நடுவே "திருமணங்கள் புரோக்கர்மார்களினால் நிச்சயிக்கப்படுகின்றன" என்பது இடைமொழியாகும்.

ஆம்! புரோக்கமார்களினால் பல திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இன்றைய திருமணத் தரகர் தொழிலும் பல தில்லுமுல்லுகள் இடம் பெறுவதைத்தான் எம்மால் ஜீரணிக்க முடியாதுள்ளது. எங்கோ ஒரு மூலையில் பிறந்து வளர்ந்த ஒருவரைத் தேடிப்பிடித்து அறிமுகம் செய்து ஒரு திருமணச் சம்மதத்தை நடத்தி முடிப்பது என்பது இலேசான காரியமல்ல. நேர்மையான தரகர்கள் தமது மனசாட்சிக்கு விரோதமில்லாதவாறு ஒரு சம்பந்தத்தை மிகவும் கச்சிதமாக பேசி முடிப்பர். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமது சுயலாபம் கருதியே அனேக தரகர்கள் செயல்படுகின்றனர். முன்பின் தெரியாத ஒருவரை தமக்கு நன்கு தெரியும் என பறைசாற்றி எப்படியோ விடயத்தைச் சாதித்து விடுகின்றனர். இதனால் ஏற்படும் விபரீதங்களோ அனந்தம்.

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். உயிர் உள்ளவரை கணவன் - மனைவி இருவரும் கருத் தொருமித்து வாழ வேண்டும் என்பதே திருமணத்தின் தொனிப்பொருளாகும். ஆனால் இவற்றைப்பற்றியெல்லாம் ஆழமாக - அகலமாக சிந்தித்து செயலாற்றுபவர்கள் - எத்தனை பேர்? ஏதோ இந்தக் கலியாணத்தைப் பேசி முடித்துவிட்டால் இரண்டு பக்கத்தாலும் பெரியதொரு பணத்தைச் சுளையாக கண்ணை மூடிக் கொண்டே எடுத்து விடலாம். இதுவே ஒவ்வொரு தரகரினதும் வேணவாவாகும். பணத்துக்கு ஆசைப்பட்டு, சுயலாபத்துக்காக இயங்கும் தரகர்மாரைத்தான் இன்று நாம் தினசரி சந்திக்கின்றோம்.

"ஆமா நான் ஏன்ட புள்ளைய அவனுக்கு எவ்வளவுக்கும் கொடுக்க மாட்டேன். இந்தப் பாழாய்போன புரோக்கர்ட பேச்ச நம்பினதாலத்தான் ஏன்ட மகளுக்கு அவசரப்பட்டு கல்யாணம் செஞ்சோம். இப்ப என்ர மகள் தண்ட உடமையெல்லாம் இழந்துட்டு வாயும் வயிறுமா - கண்ணீரும் கம்பலையுமாக இருக்கா. இப்படி தொழில் இல்லாத குடிகார மாப்புள்ளக்கு குமருகள கொடுப்பதைவிட அவர்கள ஆற்றுல - குளத்துல தள்ளிவிடுறது எவ்வளவோ மேல்"

இப்படியாக எத்தனையோ தாய்மார் தரகர்களின் ஏமாற்றுப் பேச்சை நம்பி ஏக்கப் பெருமூச்சு விடுவதும் காதுகளில் விழாமல் இல்லை. குடிகார மாப்பிள்ளையை மட்டுமல்ல அதைவிட மோசமான மாப்பிள்ளையையும் பேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள் இன்றைய கைதேர்ந்த புரோக்கர்மார். ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடி என்று ஆங்கில மொழி ஒன்றுண்டு. இங்கே ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைப் பண்ணிவிடுவோம் என்பதையே புரோக்கர்மார் தமது தாரக மந்திரமாகக் கொண்டுள்ளனர். கல்யாண விசயத்தில் பொய் சொல்வதில் மன்னர்களாக திகழ்கிறார்கள்.

ஒரு கல்யாண விடயத்தில் - ஒரு பெண்ணின் வாழ்வோடு விளையாடுவது - நெருப்போடு விளையாடுவதற்கு சமமானது. இந்த நெருப்பு எப்போது எந்த நேரத்தில் தன்னைச் சுடும் என்பது எவருக்கும் தெரியாது. ஒரு குமரைக் கரை சேர்ப்பது - ஒரு குமருக்கு வாழ்வளிப்பது - ஒரு பள்ளிவாசலைக் கட்டுவதைப் போன்ற புனித பணியாகும். அவளது இவ்வாழ்க்கையோடு விளையாடுவது பள்ளிவாசலை இடிப்பதற்குச் சமமாகும். இதனை ஒவ்வொரு தரகரும் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

தமக்கு ஏதோ "சம்திங்" கிடைக்கும் என்பதற்காக ஒரு பெண்ணை அல்லது ஒரு ஆணை பலிக் கடாவாக்குவது எவ்வளவு பெரிய குற்றமாகும். இத்தகைய உழைப்பில் எவ்வித பரகத்தும் (பொலிவும்) கிடைக்கப்போவதில்லை. மாறாக எல்லாப் பாவங்களையும் மொத்தமாக வாங்கிக் கட்டிக் கொண்ட நிலைதான் புரோக்கர்மாருக்கு ஏற்படும். எனவே புரோக்கர்மார் இந்த விடயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பல பொய்களைச் சொல்லி பல திருமணங்களைச் செய்து வைப்பதை விட, உண்மையைச் சொல்லி ஒரேயொரு திருமணத்தைச் செய்து வைப்பது எவ்வளவோ ஏற்றமான காரியமாகும் என்பதை ஒவ்வொரு தரகரும் உணர வேண்டும்.

பொய் சொல்லி வியாபாரம் செய்வதில் கிடைக்கும் கொஞ்சக் காசை விட, நாளை மஹ்ஷரில் அல்லாஹ்வுத்தாஆலாவிடம் இதற்கெல்லாம் எப்படிப் பதில் சொல்வது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். பொய் சொல்லி சம்பாதிக்கும் ஆயிரம் ரூபாவைவிட, உண்மையைக் கூறி நியாயமான முறையில் சம்பாதிக்கும் பத்து ரூபா "பரகத்" நிறைந்தது.

எனவே புரோக்கர்மார் இனிமேலாவது தமது தில்லுமுல்லுகளை கைவிட வேண்டும். அல்லாஹ்வுக்குப் பயந்து, தமது அமல்களை தொழிலைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். உண்மையைப் பேசி ஒரு திருமணத்தை முடித்து வைப்பதும் ஒரு த..வா பணியாகும். ஆதலால் புரோக்கர்மார் இப்புனித பணியை மாசுமருவின்றி செய்தால் இம்மை, மறுமை இருலோக வாழ்விலும் ஈடேற்றம் பெறலாம்.

மாதர் மஜ்லிஸ்,

முஸ்லிம் சேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

# போஷாக்கின்மையை போக்க திடசங்கற்பம்

## சர்வதேச குழந்தைகள் வாரத்தின் குறிக்கோள்

"எமது குழந்தைகள் உள்ளங்களின் கனிகள்"!

எமது நெஞ்சங்களின் உறுதி பெற்ற தூண்கள்!

நாம் அவர்களை சுமக்கும் பூமி, நிழல் கொடுக்கும் வானம்!

இவ்வாறு குழந்தைகளைப் பற்றி பெருமையடித்துக் கொள்கிறார்கள் அறிஞர்கள்.

"குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்கிறார் திருவள்ளுவர்.

ஆம்! இவ்வாறெல்லாம் போற்றப்படும் குழந்தைகள், இரக்கமற்ற ஒவ்வொரு இதயத்திலும் கருணையை தோற்றச் செய்யும் கருவிகளாகும்.

அதனால் தான், இவ்வாரம் 24ம் திகதி முதல் 30ம் திகதிவரை "சர்வதேச குழந்தைகள் வாரம்" கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் சர்வதேச குழந்தைகள் வாரத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவ, மாணவியர் மத்தியில் பல கொண்டாட்டங்கள், போட்டிகள், கலை நிகழச்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாண்டில் சர்வதேச குழந்தைகள் தினத்தின் முக்கிய குறிக்கோள், போஷாக்கின்மையால் வாடும் குழந்தைகளின் துயர்துடைப்பதாகும்.

உலகின் பெரும்பாலான சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்புற்றுள்ளனர்.

சிறுவர் தினத்தை கொண்டாடும் இதேவேளை, நாம் போஷாக்கின்மை பற்றியும் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும்.

போர், பூகம்பம், வெள்ளப்பெருக்கு, சூறாவளி ஆகிய திடீர் விபத்துக்களில் உயிரிழக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையைவிட, போஷாக்கின்மையால் மரணிப்போரின் தொகையே கூடுதலாகும். இவ்வாறு மரணிப்பவர்களில் பெரும்பான்மையானோர் வளர்முக நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களே.

## 40 ஆயிரம் பேர் தினமும் மரணம்

இந்த போஷாக்கின்மை என்னும் "ஆட்கொல்லி" நோய், தற்சமயம் நாட்டுக்கு நாடு சென்று, தினமும் பல சிறுவர்களைப் பலி எடுக்கின்றது.

போஷாக்கு இன்மையால் இறக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையை 2.000 ஆம் ஆண்டளவில் பத்து லட்சத்து அறுநூறாக அதிகரிக்கும் என ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் சுமார் 40 ஆயிரம் சிறுவர்கள் போஷாக்கின்மையால் இறக்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது.

இதே வேளை உணவுப் பற்றாக்குறை, அசுத்த நீர், சூழல், சுகாதார வசதிகளின்மை போன்ற காரணங்களினால் 16 வயது வரையிலான பெருந்தொகையான சிறுவர்கள் தொற்று நோய்களினால் பாதிக்கப்படுகின்றனர். இத்தொகை வருடத்துக்கு, பத்து லட்சத்து ஐந்தாக அதிகரிக்கின்றது.

நவீன விஞ்ஞானத்தின் பயனாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில மருந்து வில்லைகள் மூலம் இந்நோய்களைக் குணப்படுத்த முடியும். தினமும் 13 ஆயிரம் குழந்தைகளின் உயிரை இதனால் காப்பாற்ற முடிகின்றது என பிரித்தானிய மருத்துவ சங்கம் கூறுகிறது.

## தொற்று நோய் தரும் அபாயம்.

வளர்முக நாடுகளில் ஆங்காங்கே தொற்று நோயால் பாதிக்கப்படுவோரில் பலர். 6வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட சிறார்களே.

மேற்படி நோய்களை போக்கக் கூடிய மருந்துகள் அந்நாடுகளில் இருந்த போதிலும், அவை ஒழுங்காகப் பாவிக்கப்படாதமையே இந்த சிறுவர்களின் மரணத்துக்கு காரணமாகும்.

தொற்று நோயால் பாதிப்புறும் சிறுவர்களுக்கு சிகிச்சை அளித்து மருந்து கொடுத்தால், வருடத்துக்கு 10 லட்சத்து 50 ஆயிரம் சிறுவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும் என வைத்திய நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தொற்று நோயால் பாதிக்கப்படும் சிறுவர்களுள் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் காப்பாற்றப்படுகிறார்கள். இதன்படி பிரஸ்தாப குழந்தைகளின் இறப்பு வீதம் குறையுமானால், இரண்டாயிரம் ஆண்டளவில் உலகிலே சுகசீவிகள் பெருகி இருப்பதைக் காணலாம்.

## ஆதரவு வேண்டும்

அயல் வீடுகளில் ஆதரவின்றி இருக்கும் அனாதைச் செல்வங்களை நாம் அன்புச் செல்வங்களாக மதிக்க வேண்டும்.

வீதிகளில் அனாதரவாகக் கிடக்கும் இளம் சிறார்களை கண்டால் எமது இதயம் இளக வேண்டும். அவர்களுக்காக இரக்கப்பட்டு, எம்மால் இயன்றளவு உதவ வேண்டும்.

இந்தக் குழந்தைகளின் கண்ணீரில் வரும் சோகக் கதைகளைக் கேட்டதும் எம் உள்ளத்தே பாசம் ஊற்றெடுக்க வேண்டும் நெஞ்சில் வஞ்சமில்லா அச் செல்வங்களைக் கொஞ்சி விளையாடும் பெற்றோராக நாம் மாற வேண்டும்.

இதுவே; உலக சிறுவர் தினத்தில் நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய திடசங்கற்பமாகும்.

சிறுவர் சுகவாழ்வு குறித்து வெறும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதோடு நின்றுவிடாது செயலில் காட்டி முடிந்தளவு உதவ வேண்டும்.

அனாதைச்சிறுவர்களுக்கு உணவு, உடை, கல்வி, சுகாதார வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொடுப்பதன் மூலம், நாம் அவர்களுக்கு ஆதரவு நல்கலாம்.

சிறுவர் நல அமைப்புகள். இன்று நம் மத்தியிலே பல உ.ள. அவைகள் தமது நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் வேண்டும்.

சர்வதேச சிறுவர் நலன் நிதியம் சிறுவர்களுக்காக வருடாந்தம் ஆறு கோடி ரூபாவை செலவழிக்கின்றது. இது ஒரு பெரிய தொகை எனக் கருத முடியாது.

யுத்த ஆயுதங்களுக்காக பல கோடி டாலர்களை ஒவ்வொரு நாடும் செலவழிக்கின்றது. இதனோடு ஒப்பிடும்போது சிறுவர்களுக்காக ஒதுக்கிய நிதி சிறிதளவே.

"ஒரு இண்டர் கொன்டினண்டல்" ஏவுகணையை உருவாக்க செலவு செய்யப்படும் பணம் 20 கோடி மரங்களை நடப்போதுமானது. 10 லட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் நீர்ப்பாசனம் செய்யவும் போதுமானது. 5 கோடி குழந்தைகளுக்கு உணவளிக்கவும் முடியும்" இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்த கூற்றில் தான் எத்தனை உண்மை பொதிந்துள்ளது.

உலகின் 140 நாடுகளில், சிறுவர் தினக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்த 140 நாடுகளும் ஒன்றிணைந்து போஷாக்கின்மையால் வாடும் சிறுவர்களுக்காக உதவினால் முழு உலகத்துக்குமே அது பெரும் சேவையாக இருக்கும்.

உலக சிறுவர் வாரத்தை கொண்டாடிக் கொண்டிருக்கும் நாம், மேற்படி நல்ல சிந்தனைகளை நடைமுறைப்படுத்த முயல வேண்டும்.

தினபதி : 26. 10. 83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக ரீதியில் பெண்கள் உயர்வடைய வாய்ப்பு

**சர்வதேச மகளிர் தினம்**

**அதனையே வலியுறுத்துகிறது**

உலகில் வாழும் பெண்கள் அனைவருக்கும் இன்று ஓர் நன்னாள்.

ஆம், மார்ச் 8 ஆம் திகதியாகிய இன்று சர்வதேச மகளிர் தினமாகும்.

இன்றைய தினத்தை உலகளாவிய ரீதியில் மகளிர் அமைப்புக்கள் வெகு சிறப்பாக கொண்டாடுகின்றன.

1910 ஆம் ஆண்டில் இரண்டாவது சமூக ஜனநாயக மாநாட்டில் உரை நிகழ்த்திய ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சியின் தலைவிகளுள் ஒருவரான திருமதி கிலாரா ஸெட்கின், வருடத்தில் மார்ச் 8ம் திகதியை "சர்வதேச மகளிர் தினமாக பிரகடனப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். அதற்கிணங்கவே ஐக்கிய நாடுகள் சபை மார்ச் 8ம் திகதியை சர்வதேச மகளிர் தினமாக பிரகடனப்படுத்தியது.

அன்று முதல் வருடந்தோறும் மார்ச் 8 ஆம் திகதியை அனைத்துலகப் பெண்களும் கொண்டாடுகின்றனர்.

"ஒரு சமுதாயத்தின் பெருமை அந்த சமூகம் பெண்களுக்கு அளித்துள்ள இடத்திலும் மதிப்பிலும் நிர்ணயிக்கப்படுகின்றது." என்கிறார் ஷார்ல்ஸ் பூரி.

பெண்கள் சமுதாயத்தின் கண்கள்.

எனவே அவர்களை கண்களைப் போல பேண வேண்டும் என்பதை அனைத்துலக நாடுகளும் உணரத் தலைப்பட்டு விட்டன.

இதனால் தான் போலும் பல நாட்டு அரசுகள் பெண்களுக்கான சலுகைகளை பெற்றுக் கொடுப்பதில் இன்று ஆர்வம் செலுத்துகின்றன.

அன்று அடுக்களை மட்டுமே தஞ்சம் என்றிருந்த பெண் சமூகம் இன்று பல்வேறு துறைகளிலும் தமது பங்களிப்பினை செவ்வனே செய்து, தமது முத்திரையைப் பதித்துள்ளது.

சமையல்காரிகளாக, சமூக சேவகிகளாக தமது பணியை ஆரம்பித்தனர் பெண்கள்.

படிப்படியாக ஆசிரியர், தாதிமார், டாக்டர்கள், சட்டத்தரணிகள், நீதிபதி, நிபுணர், நிர்வாகி, பணிப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட அமைச்சர் என்று பெண்களின் பதவி உயர்வுகளும் பல படிக்கட்டுக்களை தாண்டின.

ஒரு நாட்டிலே, ஆக உயர்ந்த பதவியாக கணிக்கப்படுவது ஜனாதிபதி பதவியே.

இந்த ஜனாதிபதி பதவியைக் கூட பெண்கள் வகிக்கிறார்கள் என்றால் பெண்களின் வளர்ச்சியில் பெண்ணுலக மறுமலர்ச்சியில் வேறு உதாரணங்கள் தேவை தானா? ஆர்ஜன்டினாவில் உலகிலேயே முதல் பெண் ஜனாதிபதி, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அக்குவினோ போன்றோர் இதற்கு சான்று.

நிர்வாகத்துறையில் ஆண்களை விட பெண்களே சிறந்த பணியாற்றுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பல ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவை பெண்களின் திறமைகளுக்கு கிடைத்த பரிசுகளே, பெண்களின் அரசியல் சாணக்கியத்துக்கான எடுத்துக் காட்டுக்களாகும்.

1960ஆம் ஆண்டில் பெண்ணுலக அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார் திருமதி சிறிமா பண்டாரநாயக்க. இவர் 44 வயதில் உலகிலேயே முதலாவது பெண் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டது இந்த ஆண்டில்தான். அதனையடுத்து 1965ஆம் ஆண்டில் இந்தியாவின் பிரதமராக திருமதி இந்திரா காந்தி பதவியேற்றார். அச்சமயம் அவருக்கு வயது 49. 1969ஆம் ஆண்டில் இஸ்ரேல் பிரதமராக திருமதி கோல்டா மேயர் தனது 71ஆம் வயதில் நியமிக்கப்பட்டார். 1979ஆம் ஆண்டில் "இரும்புச் சீமாட்டி" என அனைவராலும் அழைக்கப்படும் திருமதி மார்கிரட் தாட்சர் பிரதமரானார்.

இந்த அரசியல் புத்தகத்தில் புதியதொரு அத்தியாயத்தை புரட்டுமுகமாக 1988 நவம்பர் மாதம் பாகிஸ்தான் பிரதமராக திருமதி பெனாஸிர் பூட்டோ என்ற முஸ்லிம் பெண் பிரதமராக பதவியேற்றார். 35 வயது மதிக்கத்தக்க இவர், உலகிலேயே இளம் வயதில் பிரதமரான ஒரு பெண்மணியாகவும் முதலாவது முஸ்லிம் பெண் பிரதமர் என்ற சிறப்புப் பட்டத்தையும் தட்டிக் கொண்டார். இப்படியாக பெண்களின் அரசியல் பிரவேசம் துரித வேகமடைகிறது.

வானிலே பறக்கும் விமான மோட்டிகளாக, கடலிலே மிதக்கும் கப்பலோட்டிகளாக விண்வெளி வீராங்கனைகளாகவும் வியக்கத்தக்க பல சாதனைகளை படைத்து விட்டனர் பெண்கள்.

சர்வதேச மட்டத்திலான பெண்களின் விவகாரங்கள் அப்படியிருக்க நாம் இலங்கை பெண்களைப் பற்றி நோக்குவோம். இலங்கையில் நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் கூட இம்முறை சுமார் 11 பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் இணை அமைச்சர்களாக நியமனம் பெற்றுள்ளனர். ஒருவர் சுகாதார, மகளிர் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையின் பெண்கள் வரலாற்றில் இவையும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களேயாகும்.

இலங்கையில் பெண்களின் விவகாரங்களை கவனிப்பதற்கென முதன் முதலாக தனியாக மகளிர் விவகார அமைச்சினை தோற்றுவித்த பெருமை முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைச் சாரும்.

தொழில் புரியும் பெண்களுக்கு பிரசவ கால விடுமுறை வழங்குவதில் உலக நாடுகள் பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றன. இலங்கையில் கூட தொழில் புரியும் பெண்களுக்கு மூன்று மாத பிரசவ விடுமுறை வழங்கும் திட்டம் சமீப காலமாக செயல்படுத்தப்படுகின்றது. அதிலும் தனியார் துறையில் கடமை புரியும் ஊழியர்களே இச்சலுகையைப் பெற்றனர்.

ஆனால்...... இம்முறை சர்வதேச மகளிர் தினப் பரிசாக ஊழியர்களுக்கு மூன்று மாத கால பிரசவ விடுமுறையை வழங்குவது என்றும், சர்வதேச மகளிர் தினமாகிய (மார்ச் 8) இன்று முதல் இத்திட்டத்தை செயல்படுத்துவது என்றும் கடந்தவார அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அவ்வாறே "இத்தா" அனுஷ்டிக்கும் முஸ்லிம் பெண்களுக்கு நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமும் 10 நாட்களும் சம்பளத்துடன் கூடிய விடுமுறையை வழங்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இவை யாவும் பெண்களுக்கு அரசாங்கம் அளித்த சலுகைகளாகும்.

இத்தகைய சலுகைகள் எதிர் காலத்திலும் தொடர வேண்டும் என்பதே பெண்களின் பேரவா!

படித்த பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்கள், தொழில் புரியும் பெண்களுக்கும், மற்றும் ஏனைய பெண்களுக்கும் பாதுகாப்பு உத்தரவாதங்கள் போன்ற துறைகளிலும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இன்னும் பல உள்ளன.

இலங்கை நாடாளுமன்றத்தில் முஸ்லிம் பெண்மணி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படாதமை நீண்ட நாளைய குறையாகும்.

இந்தக் குறையும் எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படலாம் என்று எதிர் பார்க்கலாம் அல்லவா? சர்வதேச மகளிர் தினத்தில் பெண்களினதும் ஏகோபித்த குரலாக இது அமையட்டும்!!!

**தினபதி 08. 03. 89**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு அதிகளவு புரதச்சத்து அவசியம்

உயிர்ச்சத்துக்கள் இன்றி உலகில் எவரும் உயிர் வாழ முடியாது. அவ்வாறே புரதச் சத்தும் மனிதரின் வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

குறிப்பாக கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் புரதச்சத்து இன்றியமையாததாகும்.

மனித உடலில் உள்ள சகல கலன்களும் புரதச் சத்தை உள்ளடக்கியே அமைக்கப்பட்டுள்ளன.

புரதச்சத்து இன்றி இளம் கலன்கள் வளர்ச்சியடைய முடியாது; முதிர்ச்சி அடைந்த கலன்கள் தமது கட்டமைப்பை பராமரிக்க முடியாது. எனவே பெண்கள், ஆண்கள், குழந்தைகள் ஆகியோர் தத்தமது உடல் நலனைப் பேண வேண்டுமாயின், சுகவாழ்வு பெற வேண்டுமாயின் அன்றாட உணவில் கட்டாயமாக புரதச்சத்தைச் சேர்ந்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

குழந்தைப் பருவத்தில் புரதச் சத்துக் போதாமை காரணமாக "க்வொசியாக்கோர்" என்னும் நோய்குழந்தைக்கு ஏற்படுகிறது. உடல் வளர்ச்சிக் குறைவு, தசைநார்கள் செயலிழத்தல், மானசீக அக்கறை இன்மை, உடல் வீக்கம், ஈரலில் ஏற்படும் பாதிப்புக்கள் என்பன இந்நோய்க்கு அறிகுறிகளாகும்.

தாய்ப்பாலூட்டுவது நிறுத்தப்பட்டு புரதச்சத்து குறைவான உணவு வகைகள் குழந்தை களுக்கு வழங்கப்படுவதனாலேயே இந்த நோய் ஏற்படுகிறது.

வயது வந்தோரிடையும் புரதச்சத்து குறையும் போது உடல் இயங்கும் ஆற்றல் குறைகிறது. வேலை செய்யும் ஆர்வமும் குறைகிறது. பல்வேறு நோய்களுக்கு ஆளாக வேண்டியும் நேரிடுகிறது. புரதச்சத்து பற்றாக்குறையினால் சில சமயங்களில் மரணமும் சம்பவிப்பதுண்டு.

சம்பிரதாய பூர்வமாக குடும்பங்களில் தாயை விட தந்தைக்கே விசேட சலுகைகள் அளிக்கப்படுகின்றன. உழைப்பவருக்குத் தான் உடல் பலம் பெற விட்டமின் தேவை என்ற நோக்கில் இறைச்சி, மீன், முட்டை போன்ற சத்துணவுகள் ஆண்களுக்கே அதிகமாக பரிமாறப்படுகின்றன.

ஆனால் ஆண்களை விட பெண்களுக்கே, அதிக புரதச் சத்து தேவை என்பதை ஏனோ அவர்கள் அறிவதில்லை.

"உடலை வருத்தி உழைப்போருக்கு முட்டை, இறைச்சி போன்றவை அவசியம். அவர்களுக்கே அதிகளவு புரதச்சத்து தேவைப்படுகிறது." என்ற கருத்தை ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பிரபல இரசாயன விஞ்ஞானி லை.ஃ.பெக் என்பவர் தெரிவித்தார்.

ஆனால் இந்த கருத்தில் எவ்வித அர்த்தமுமில்லை என்பது இப்போதைய ஆராய்ச்சியாளர்களின் தீர்ப்பாகும்.

தாயானவர் கருவுற்று முதல் குழந்தைக்குப் பாலூட்டுவதை நிறுத்தும் வரை புரதச்சத்து நிறைய உட்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தான் ஆணைவிட பெண்ணுக்கே அதிகளவு புரதச்சத்து தேவை என்று இன்றைய விஞ்ஞானிகள், டாக்டர்கள் வலியுறுத்துகின்றனர்.

இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளில் இன்று புரதச்சத்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இலங்கையில் சுமார் பத்து இலட்சம் குழந்தைகள் நோய்வாய்ப்படுகின்றன என்றும் பலர் இறந்துள்ளனர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பெண்களின் சராசரி நிறை ஆண்களை விட குறைவாக இருப்பதால் அவர்களுக்கு சராசரியாக தினசரி ஒரு அவுன்ஸ் புரதச் சத்து போதுமானது.

பெண் கருவுற்றிருக்கும் போதும், குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதும் கால கட்டத்திலும் சராசரி அளவை விட கூடுதலாக புரதச் சத்தை உட்கொள்ள வேண்டும் கர்ப்பிணிகள் பெறும் உணவு வயிற்றில் வளரும் சிசுவினதும் கர்ப்ப முற்றிருக்கும் தாயினதும் சுகாதாரத்தை தீர்மானிக்கின்றது.

சராசரியாக நாளொன்றிற்கு 850 மில்லி லீற்றர் பால், பாலூட்டும் அன்னையருக்கு சுரக்கிறது. இதன் மூலம் 10 கிறாம் புரதச்சத்தை அவள் சராசரி உற்பத்தி செய்கிறாள். எனவே இத்தாயின் சராசரி தேவைகளுக்கு குறைந்த பட்சம் 10 கிறாம் புரதச்சத்தேனும் உணவாக உட்கொள்ள வேண்டுமல்லவா?

**சிந்தாமணி 27. 11. 83**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதைக் கவரும் பேச்சுதான் மங்கையருக்கு அழகு தரும்

பேச்சு இன்றைய உலகின் மூச்சாகி சமூக வாழ்க்கையை இயக்குகின்றது. மக்கள் கூடும் இடங்கள் தோறும் பேச்சும் சொற்பொழிவும் இல்லாமல் இல்லை.

அறிவிருந்தும் வேண்டிய போது அதனை விளக்கி பேசுந்திறனில்லாதோர் இன்றைய உலகில் ஆற்றல் அற்றவராகவே கருதப்படுகின்றனர். பேச்சிலும் மனதைக் கவரும் தன்மையுடைய பேச்சே மற்றையோரின் மனதைப் பெரிதும் கவர்ந்ததாகிறது.

சிறந்த பேச்சு ஓர் உயர்ந்த கலையாகும். கலைகள் யாவும் உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சியால் பரிணமிப்பன. நமது பேச்சு கலையாக மிளிர்வதற்கு அப்பேச்சு உணர்ச்சியால் உந்தப்படுதல் வேண்டும்.

குறிப்பாக பெண்கள் வீட்டிலே பேசும் போதும் சரி, வீதிகளில் பேசும் போதிலும் சரி அவர்களது பேச்சு மிகவும் அமைதியாக இருக்க வேண்டும். எந்நேரமும் ஒரே "வள வள" வென பேசிக் கொண்டிருக்கும் பெண்களை வாயாடி என்றே பலரும் அழைப்பர். அது மட்டுமல்ல, அதிக பேச்சினால் அசம்பாவிதங்கள் விளைவதும் உண்டு.

வீண் பேச்சில் வல்லவராகத் திகழும் பெண்மணிகள் தமது பேச்சினை பயனுள்ளதாக்க வேண்டும்.

வீண் பேச்சுக்களைப் பேசி வம்பு இழுப்பதை தவிர்த்து அழகிய பேச்சுக்களை பேசி அனைவருடனும் அன்புடன் பழக முற்படுவதே சிறப்பாகும். "பல்லக்கேறுவதும் நாவாலே, பல் உடைவதும் நாவாலே!" என்பார்கள். சிறந்த பேச்சுக்களினால்தான் ஒருவரின் புகழ் ஓங்குகிறது என்று கூடச் சொல்லலாம்.

இன்சொல் பேசுபவர்களுடன் தான் துள்ளித் திரியும் சின்னஞ் சிறார்கள் அன்பாக இருப்பார்கள். கடும் சொற்களை உதிப்பவர்களின் அருகில் செல்வதற்கும் அவர்கள் அச்சமுறுவர்.

எனவே நாம் ஒவ்வொருவரும் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லும் இன் சொல்லாகவே இருக்க வேண்டும். எமது வாய் வன் சொற்களை உதிர்ப்பதால் வரும் விளைவுகள் வழி அனந்தம் என்பதையும் நாம் உணர வேண்டும்.

**சிந்தாமணி 16.10.83**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவான பாதை காட்டிய உலக மகாகவி இக்பால்

எமது உடலில் எந்த ஒரு உறுப்புக்கு காயம் ஏற்பட்டாலும் அதற்காகக் கண்ணீர் சிந்தி அனுதாப்படுவன கண்களே! அவ்வாறே சமுதாயத்தில் எவர் கஷ்டப்பட்டாலும் துன்பமடைந்தாலும் அதற்காக கதறி அழுபவன் கவிஞனே. அனுதாபக் கவிபாடுபவனும் அவனே. ஆகையால் கவிஞன் சமுதாயத்தில் கண்ணைப் போலாவான்.

இவ்வாறு உரைத்த ஓர் உலக மகாகவியின் நினைவு தினம் இன்றாகும். ஆயிரமாயிரம் இலக்கிய நெஞ்சங்கள் இன்று நினைவு கூரும் அந்த உலக மகாகவி வேறு யாருமல்லர். அவர் தான் கவிஞர் அல்லாமா இக்பால்.

அல்லாமா இக்பால் என்றதும் இலக்கிய நெஞ்சங்களிடையே இனிய சிந்தனை மலர்கள் மொட்டவிழ்க்கும். அன்னாரின் இதயத் தடாகத்திலே பூத்த கவிமலர்கள் காலத்தால் அழியாதவை. அவை அன்றும் இன்றும் என்றும் எவருக்கும் ஏற்ற விதத்தில் பாடப்பட்டவை.

அவரது கவிதைகளில் சமூகப்பற்று, சகோதரப்பற்று, நாட்டுப் பற்று ஏன் நானிலப் பற்றே தொனிக்கின்றன என்றால் அது மிகையாகாது. இலக்கிய தாகமும், சமூகப்பணியில் வேகமும் கொண்டவர் தான் கவிஞர் இக்பால்.

"இன்று நாளை என்னும் அளவுகோலால் வாழ்க்கையை அளக்காதே! வாழ்க்கை அற்பமானது. தொடர்ச்சியான சுழற்சி அது. அமரத்துவ யௌவனம் அது."

"உன்னிடம் கவிதை என்னும் பொன் இருந்தால் அதை வாழ்க்கை என்னும் உரைகல்லில் தேய்த்துப்பார்."

"விதி என்னும் விலங்கை உன் கால்களில் மாட்டிக் கொள்ளாதே."

அல்லாமா இக்பாலின் கவிதைச் சோலையில் மலர்ந்த நல்மலர்கள் இந்த அரிய போதனைகள்.

"உன் மூதாதையரிடமிருந்து ஒரு வைரத்தை நீ வாரிசாகப் பெற்றாலும் அது குறித்து நீ வெட்கப்படு. ஏனெனில் நீயாகவே வைரத்தை அடைந்த இன்பத்தை அது தராது"

என்று கூறி, இளைஞர் சமுதாயத்துக்கு உழைப்பின் உயர்வை உரைக்கிறார் உலகக் கவிஞர் இக்பால்.

"உலகம் என்னும் ஓவியம் பெண்ணினால் எழில் பெறுகிறது. அவளது இன்ப இசையினால் வாழ்க்கைக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது" என்று பெண்களைப் பற்றி பெருமையாக கவிபாடுகிறார் பெருங்கவி இக்பால்.

"சமுதாயத்தின் ஜீவநாடியே! எங்களது எதிர்காலம், நாங்கள் வாழ்வதும் வீழ்வதும் உன்னிடமே உண்டு. எங்கள் சமுதாயமாம் பூங்கா, வரட்சியடைந்து வருகின்றது.

அதன் தருக்கள் வாடிவிடும் நிலையை எய்தி வருகின்றன. அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு நீர் பாய்ச்சி, மார்க்க உணர்வென்னும் ஏகத்துவ தென்றலால் அதைக் குளிரச் செய்து அந்த பூங்கா, வளமுள்ளதாய், வாழ்வுள்ளதாய் ஒளிரச் செய்ய வேண்டிய பொறுப்பு உன்னுடையது. கடமையைச் செய்ய விழித்தெழு,

இவ்வாறு பெண் குலத்துக்கு புரட்சிகரமாக அழைப்பு விடுக்கிறார் புரட்சிக் கவிஞர் இக்பால்.

"தெய்வ நியதியதைத் தன்னகத்தே கொண்டவளே! உன் பராமரிப்பு எங்கள் நடத்தையைச் சமைக்கிறது. அது எங்கள் சிந்தனையை, பேச்சை, செயல்களை உருவாக்குகிறது. சமுதாயச் செல்வத்தை பாதுகாப்பவள் நீயே! உன் கிளையிலிருந்தும் ஒரு ஹுசைன் குதித்தெழட்டும்! அவன் பூங்காவின் வசந்தத்தை மீட்டி வரட்டும்." இதுவும் கவிஞர் இக்பாலின் அறை கூவல்தான்."

இஸ்லாத்தின் பாதையில் உதிர்ந்த இலைகளையும் முறிந்த மரங்களையும் அகற்றித் தெளிவான பாதையைக் காட்டியவர் அல்லாமா இக்பால். அவர் சமுதாயத்துக்கு ஆற்றிய நற்பணிக்கு நன்றிக் கடன் என்றுமுண்டு.

முரண்பட்ட எண்ணங்களும் மூடத்தனமான நாஸ்திக வாதமும் பரவுகின்ற இக்கால கட்டத்தில் இக்பால் எமக்கு தெளிந்த நற்பாதையைக் காட்டியவராவார். அறிவுவாதப் பிடிக்குள் அகப்பட்டுச் சீரழியாமல் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பால் வழிபட்டு சுய நம்பிக்கையுடன் வாழ வழி வகுத்தவர் இக்பால்.

தூங்கிக் கிடந்த நம் சமூகத்தை தட்டி எழுப்பிய அந்த உலகக் கவிஞர் இன்று நம்மிடையே இல்லை. ஆனால் அன்று அவர் எமக்காகப் பாடிய ஏற்றமிகு கவிதைகள் சாகா வரம் பெற்றவை. அக்கவிதைகள் எம்மை என்றும் உற்சாகப் படுத்திக் கொண்டே இருக்கின்றன.

தினபதி 04. 09. 86.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மாதரின் வாழ்வு

எமது நாட்டில் தேயிலை உற்பத்தியில் மலையகப் பெண்களே முக்கிய பங்கை வகிக்கின்றனர்.

தேயிலை கொழுந்து பறிப்பவர்களில் 93% சதவீதமானோர் மாதரே. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களிலும் 50% சதவீதமானோர் பெண்களே!

கொழுந்து பறிப்பதுடன் நின்றுவிடாது தேயிலைச் செடிகளை நடுதல், களைபிடுங்குதல் ஆகிய பணிகளையும் பெண்களே ஆற்றுகின்றனர். இது வரவேற்கக் கூடியதே.

வேலை செய்யும் நாட்களைக் கொண்டே மலையகத்தில் தொழில் புரியும் பெண்களுக்கு சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது. லீவும் அவ்வாறே வழங்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அவர்களுக்கு போதுமானதாக இல்லை.

பொருளாதார நெருக்கடியான இன்றைய சூழ்நிலையில் அவர்களின் வருமான பற்றாக்குறை எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை எவருமே மறுக்க முடியாது.

அது மட்டுமல்ல, இலங்கையின் தேசிய மட்டத்துடன் ஒப்பிடும் போது தோட்டங்களின் சுகாதார நிலைமை பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. இதனால் தோட்டத் தொழிலாளர்களிடையே குறிப்பாக பெண்கள் மத்தியில் போஷாக்கின்மையால் இரத்தச் சோகை போன்ற நோய்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

இங்கு ஆஸ்பத்திரிக்குப் பதிலாக மருந்துச்சாலைகளே உள. பயிற்சிபெற்ற தாதிமாரோ திறமையான வைத்தியர்களோ இல்லை.

அத்துடன் போதுமான பிரசவ வைத்தியசாலைகளும் கிடையாது. சுமார் 10X 12 சதுர அடி பரப்பிலான லயன் அறைகளிலேயே பெண்கள் குழந்தைகளைப் பிரசவிக்கிறார்கள். இவ்வறைகளில் கட்டில்களோ அல்லது வேறு தளபாடங்களோ இல்லை. வசதியான பிரசவ வைத்தியசாலைக்குச் செல்வதாயின் அங்கிருந்து பல மைல்களுக்கப்பால் தான் செல்ல வேண்டும்.

அதற்கோ பிரயாண வசதிகள் கிடையாது. சில சமயங்களில் அதிக பிரசவ வேதனைக்குள்ளாகும் பெண்கள் டிராக்டரில் கொண்டு செல்லப்படுவர். டிராக்டரில் கர்ப்பிணிகளுக்கு வசதி ஏது?

இதனால் நடுவழியில் ஒரு சிலரின் உயிர் பிரிந்த பரிதாப சம்பவங்களும் மலையகத்தில் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு தோட்டப் பகுதி தாய்மாருக்கு விசேட நேரம் ஒதுக்கப்படுவதில்லை.

குழந்தைகளுக்கு பாலூட்ட வேண்டிய நேரத்தில், மலைச்சாரலில் இருந்து இறங்கி பிள்ளை மடுவிற்கு ஓட்டமும் நடையுமாக பதைபதைப்புடன் வர வேண்டிய நிலையே இன்றைய மலையகத் தாய்மாருக்கு ஏற்பட்டிருக்கிறது.

**இயந்திர வாழ்க்கை**

குழந்தைகளுக்கு பால் ஊட்டினாலோ, அதன் வயிறு நிறைந்ததோ இல்லையோ இதையெல்லாம் கவனிக்க அவளுக்கு அவகாசம் இல்லை. ஏதோ அதையும் ஒரு கடமையாக எண்ணும் அவள் மீண்டும் மலைச்சாரலை நோக்கி இயந்திர கதியில் ஓடுகிறாள்.

தோட்ட வேலைகளுடன் தம்மை அடக்கி ஆளும் கும்பல்களுடன் போராடிவிட்டு வீடு திரும்பும் தோட்டப் பெண்கள் வீட்டுக் காரியங்களை மிகுந்த சிரமத்துடனேயே ஆற்ற வேண்டியிருக்கிறது. இந்நிலையில் குழந்தைகளைப் பராமரிக்க அவர்களுக்கு நேரம் தானேது?

குழந்தைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள போதிய தண்ணீர் வசதி கூட அவர்களுக்கு இல்லை.

இத்தகைய வசதியீனங்களின் மத்தியில் தோட்டப் புறங்களில் குடும்ப நலத்திட்டங்கள் வெற்றி பெறுவது சாத்தியமில்லை அல்லவா?

மலையகத்தில் மறுமலர்ச்சி முன்னேற்றம் என்பதெல்லாம் இன்று ஏட்டளவிலும், சொல்லலவிலும் மட்டுமே. செயலளவில் எதுவுமே நிகழ்ந்ததாக தெரியவில்லை.

இந்நிலையில் மலையக மாதரின் வாழ்வு மலர்வது எப்போது?

இன்று, நேற்றல்ல. எத்தனையோ ஆண்டுகளாகத் துன்பப் போராட்டங்களிலேயே அமுந்திக் கொண்டிருக்கும் மலையக மாதரின் நிலை எப்போது தான் மாறுமோ?

**சிந்தாமணி 20. 03. 83.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சட்ட திட்டங்கள் ஆண்களுக்கு பக்கபலம்

## பெண்களுக்கு பாதகமாக அவை அமைந்து விடுகின்றன.

"கற்பு" என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானது. ஆனால் பெண்கள் தான் கற்பு நெறி தவறக் கூடாது என்று சமூகம் வலியுறுத்துகின்றது.

ஆண்களுக்கு கற்பைப் பற்றிய கரிசனையே இல்லை. இது சமூகத்தின் தவறான கண்ணோட்டமாகும்.

மனித இனம் என்ற மரத்தின் பழுத்த இருவித பழங்களே ஆண்களும், பெண்களும். இவர்களுள் ஒருவர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் அதாவது ஆண்கள் உயர்ந்தவர்கள், பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனால் ஆண்கள் தங்களுக்குச் சாதகமாகவும், பெண்களுக்கு பாதகமாகவும் ஒரு சில சமூக சட்டங்களை இயற்றிக் கொள்கின்றனர். இது வருந்தத்தக்க விடயமாகும்.

இறைவனின் படைப்பின் முன் அவன் அடியானாகிய மக்கள் அனைவரும் ஒன்றுதான். எனவே ஆண், பெண் இருபாலாரில் ஒருவரை உயர்த்தியும் மற்றவரை தாழ்த்தியும் அவன் படைத்திருக்கவே மாட்டான்.

பெண் என்பவள் பலவீனமானவள். இதற்காக அவளை தாழ்ந்தவள் என்று கருத முடியாது.

பெண்களை ஆண்கள் பேண வேண்டும் என்பதற்காக கூட இறைவன் அவர்களை பலவீனமானவர்களாகப் படைத்திருக்கலாம்.

ஆண்களாயினும், பெண்களாயினும் எவர் குற்றஞ் செய்தாலும் குற்றம் குற்றம் தான். ஆண் செய்தால் குற்றமல்ல, பெண் செய்தால்தான் குற்றம் என்பது அநீதியாகும்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் அமைந்திருப்பது ஒரே வித ஆன்மாதான். ஆன்மா உறையும் தற்காலிக விடுதியே உடலாகும்.

எனவே உடலில் இருக்கும் ஒருசில வேறுபாடுகளைக் கொண்டு ஆன்மாவிற்குள் வேற்றுமை காண்பது அறியாமையாகும்.

தீமை என்றால் அதை எவர் செய்தாலும் தீமைதான். ஆனால் மனிதர்கள் இதை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.

ஒரு தீமையை பெண் செய்தால் தான் பெரும் பாவம். ஆண் செய்தால் "அப்படி ஒன்றுமில்லை" என்று கூறுகிறார்கள்.

"ஆண்களுக்கென்ன? சேற்றைக் கண்டால் மிதிப்பார்கள். தண்ணீரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டால் கழுவுவார்கள்" என்கிறார்கள். அது மட்டுமல்ல. "ஆண் கெட்டால் சம்பவம் பெண் கெட்டால் சரித்திரம்" என்றும் கூறப்படுகிறது.

இதனை நோக்கும் போது "கற்பு" என்பது பெண்களுக்கு மட்டுந்தான் சொந்தமானது என்றே சமூகம் கருதுகிறது.

ஆண்களுக்கும் "கற்பு" உண்டு. அவர்களும் தமது கற்பைப் பேண வேண்டும் இதுவே நியதியாகும்.

ஆனால் கற்பைப் பேணாத காளையர்கள் இன்று "எயிட்ஸ்" போன்ற பயங்கரமான கொடிய நோய்களுக்கும் இலக்காகி வருகின்றமையை அன்றாட பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

ஒரு பெண்ணின் தூய்மையை கெடுக்கும் எந்தத் தீமையும் அதனை புரியும் ஆணின் தூய்மையையும் கெடுக்கத்தான் செய்யும்.

கறுப்புநிற மையை தெளித்தால் பெண்ணின் வெள்ளையுடையில் மட்டுமல்ல, ஆணின் வெள்ளையுடையிலும் கறை படியத்தான் செய்யும்.

பெண்ணின் உடையில் பட்டது தான் கறை. ஆணின் உடையில் அப்படி ஒன்றுமில்லை என்று கூற முடியுமா? ஆனால் எம்மில் பெரும்பாலானோர் அப்படித்தான் கூறி வருகின்றனர். ஏன்? சமூகம் கூட அதனைத் தான் சொல்கிறது.

"முள் வாழையிலையில் பட்டாலும், வாழை இலை முள்ளின் மீது பட்டாலும் கிழிவது வாழை இலை தான்" என்று இங்கும் பெண்களே குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.

"சாண் பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை அல்லவா?" என்று ஆண்களுக்கே புகழாரம் சூட்டப்படுகின்றது.

கற்பிழந்த பெண்களை சமூகம் காறித் துப்புகிறது. ஆனால் கற்பிழந்த ஆண்களை சமூகம் அவ்வாறு நடத்துவதில்லை. இது பெண் குலத்துக்கு இழைக்கப்படும் ஓர் அநீதியாகும்.

ஆண்களும் கற்பு நெறி தவறும் பட்சத்தில் பெண்களை மட்டும் பிழையான கண் கொண்டு நோக்குவது முறையல்ல.

தவறு செய்தவர்கள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே! ஆனால் இதில் ஒரு பக்கப் பார்வை கூடாது.

ஒழுக்கம், கற்பு என்பன ஆண்களுக்கும், பெண்களுக்கும் சொந்தமானது. இதை இரு தரப்பினரும் பேண வேண்டும்.

"சட்டத்தின் முன் சகலரும் சமம்" என்ற நியதியை சமூகம் இனியாவது உணர வேண்டும். அதன் மூலம் பெண் குலம் வாழ வேண்டும் என்பதே யாவரினதும் பேரவா!

சிந்தாமணி 14. 05. 87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நங்கையருக்கேற்ற நவீன சாதனங்கள்

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்றார் பாரதி. மங்கையராய் பிறந்திட்ட நமக்கு இயற்கைப் பண்புகளே நல்லழகுச் சாதனங்களாகும். கீழே தரப்படும் நல்லழகுக் குறிப்புகள் சற்று முரணானவை. ஆனால் கருத்திற் கொண்டாலோ நற்பயன் தருவன.

**முகப்பொழிவு (கிறீம்)**

உங்கள் முகப்பரு, முகச் சுருக்கங்களை அகற்றவும் முகத்தில் நீங்கள் பாவிக்க வேண்டிய சிறந்த கிறீம் "புன்சிரிப்பு". இதுவே தசைகளை வலுப்படுத்தி தோற்றத்தை எடுப்பாகக் காட்டவும் உதவும். இதனை நீங்கள் தினமும் பாவித்து வந்தால் உங்கள் முகம் பொலிவுடன் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

**உதட்டுச் சாயம் (லிப்ஸ்டிக்)**

சிறந்ததொரு உதட்டுச் சாயத்தை நீங்கள் தெரிந்து கொள்வது நல்லதல்லவா? அதுதான் "மௌனம்" குறிப்பாக புறம் பேசிக் கருகிப் போன உதடுகளில் இதைப் பூசிக் கொள்வது மிகவும் நல்லது.

**கண்மை (ஐப்ரோ)**

கவர்ந்திழுக்கும் வசீகர கண்மை எது தெரியுமா? அதுதான் "நாணம்" நீங்கள் எங்கிருப்பினும் உங்கள் கண் இமைகளில் இதனைப் பூசிக் கொள்ளுங்கள். தனிக் கவர்ச்சியையே அது உங்களுக்குத் தரும்.

**கரங்களுக்கு எழில் தோற்றம் (கியூ டெக்ஸ்)**

உங்கள் கரங்களுக்கு எழில் தோற்றம் தரவல்ல ஒரேயொரு அழகு சாதனம் "தருமம்" தான். எனவே இல்லாதவர்களுக்கு ஈந்து உங்கள் கரங்களுக்கு எழிலூட்டிக் கொள்ளுங்கள்.

**சிறந்த பாதணிகள் (ஹீல்ஸ்)**

உங்கள் கால்களில் நீங்கள் தினமும் அணிய வேண்டிய பாதணி "நன்னடத்தை" நீங்கள் எங்கு சென்றாலும் இதை அணிந்து சென்றால் உங்களுக்குப் புகழும், மதிப்பும் நிச்சயம் கிடைக்கும்.

அழகு சாதனங்களுக்காக ஆடம்பர பொருட்களை வாங்குவதை விட செலவே இன்றி இந்த இயற்கை அழகு சாதனங்களைப் பாவித்தால் இவ்வுலகில் இனிதே வாழலாம் அல்லவா?

சிந்தாமணி 13. 06. 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு தக்க பாதுகாப்பு தேவை

வரட்சியும், வறுமையும் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் எங்கு பார்த்தாலும் திருட்டும் வழிப்பறியும் நடந்து வருவது வழக்கமாகி விட்டது.

இச்சந்தர்ப்பத்தில் பெண்களாகிய நாம் எந்தெந்த விதத்தில் நம்மை தற்காத்துக் கொள்ளலாம் என்பது பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியம்.

ஆண்கள் இல்லாத வீடுகளில், பெண்களே வெளியே சென்று குடும்ப காரியங்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் சில சமயங்களில் ஏற்படுவதுண்டு.

காலம் எவ்வளவோ முன்னேறி இருந்த போதிலும் பெண்கள் தைரியமாக வெளியே சென்று வர இந்நாளில் முடிவதில்லை.

தனியாகச் சென்ற பெண்கள் தாக்கப்படுவதையும், நகைகள் களவாடப்படுவதையும், கடத்திச் செல்லப்படுவதையும் நாம் பத்திரிகைச் செய்திகள் வாயிலாக தினமும் அறிகிறோம்.

முரடர்கள், குடிகாரர்கள், ஆயுதம் தாங்கிய கோஷ்டிகள், கொள்ளைக்காரர்கள் போன்றோரின் முன் ஒரு சாதாரண் பெண் என்ன தான் செய்ய முடியும்?

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலை உருவாகாத வண்ணம் பெண்கள் முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வெளியில் செல்லும் பெண்களுக்கு இப்படியான ஒரு நிலை ஏற்பட்டால், முதலில் அவள் பயந்து விடக் கூடாது. மிகவும் அமைதியுடன் இருக்க வேண்டும்.

தாக்குதல்கள் திடீர் என்றும் ஏற்படலாம், பல நாட்களாக திட்டமிடப்பட்டும் ஏற்படலாம்.

ஆனால் சந்தேகப்பட வேண்டிய மனிதர்களின் நடமாட்டம் வீட்டுக்கு அருகிலோ, நாம் போகும் பாதையிலோ அடிக்கடி ஏற்பட்டால், உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இது பற்றித் தெரிவிப்பது நலம்.

தாக்குதல்கள் வருமுன் காப்பது, எதிர்த்துச் சமாளிப்பதைக் காட்டிலும் சிறந்தது.

கூடியவரை பெண்கள் இரவு வேளைகளில் வெளியே அதுவும் தனியாக செல்வதைத் தவிர்க்க வேண்டும். இல்லையேல் தகுந்த பாதுகாப்புடன் செல்ல வேண்டும்.

குறுக்கு வழியாகவும், சந்து பொந்து வழியாகவும் பெண்கள் பயணம் செய்வது கூடாது. தனிமையான வீதிகளில் நடக்கும் பொழுது வீதியின் ஓரமாக ஒட்டியபடி போகக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய கார்கள், லொறிகள் நிறுத்தப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு அருகே போக வேண்டாம்.

ஓர் இடத்துக்கோ அல்லது புதிதாக ஓர் வீட்டுக்கோ போகும் போது தனியாகச் செல்லாதீர்கள்.

உங்களை யாராவது பின் தொடர்வதை உணர்ந்தால் பயத்தை வெளியே காட்டிக் கொள்ள வேண்டாம். அறிவைப் பயன்படுத்தியே சமாளிக்க முயல வேண்டும்.

செல்லும் வழியில் கடையோ அல்லது பொது இடமோ தென்பட்டால் அதினுள் நுழைந்து விடுங்கள். பின்னர் தற்பாதுகாப்பு தேடலாம்.

இவ்வாறே, வீட்டில் இருக்கும் போது வெளியிலிருந்து கதவைத் தட்டுபவர் யார் என்று தெரிந்து கொண்ட பின்னரே கதவைத் திறக்க வேண்டும்.

புதியவர்களின் சினேகத்தைத் தவிர்க்க வேண்டும். கேட்காத உதவிகளைச் செய்ய முன்வந்தால் அதை மறுக்க வேண்டும்.

இரவில் வெளியே செல்ல வேண்டி ஏற்பட்டால் பாதுகாப்புக்காக சில விளக்குகளைப் போட்டுவிட்டுச் செல்லுங்கள்.

ஒரு பெண் தன் உடைமைகள், நகைகள் எல்லாவற்றையும் விட மிகவும் பாதுகாக்க வேண்டிய ஒன்றுதான் அவளது பெண்மை.

எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும் பெண்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்பதை நிச்சயம் நாம் உணர வேண்டும். அதைவிட்டு தைரியசாலிகள் என்று கூறிக் கொண்டு வாழ்க்கையையே நாசமாக்கி விடக் கூடாது.

சிந்தாமணி 20. 11. 83.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனத்தைக் கடைப்பிடித்து வாழ்வது தான் சிறப்பு

# ஈகைத் திருநாளில் நம் முக்கிய பணி

ரமழான் மாதத்தில் எம்மிடையே இழையோடிய நல்ல சிந்தனைகள் நல்ல நடைமுறைகள் நற்கிரியைகள் அனைத்தும் ரமழான் அல்லாத ஏனைய நாட்களிலும் தொடர வேண்டும்.

இதன் மூலமே நாம் ஒரு மாத காலமாக நோன்பிருந்ததன் பூரண பலனைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக தாய்மார் தான் ஏனையோருக்கு முன்மாதிரியாகவும் தூண்டுதலாகவும் இருக்க வேண்டும்.

தாய்மார் தம்பிள்ளைகளை நற்கிரியைகளின் பால் அடிக்கடி தூண்ட வேண்டும். இதன் மூலமே இறை பக்தியை நிறை சக்தியாகக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க முடியும்.

தாய் நன்றாக சன்மார்க்க நெறிகளை பேணுபவளாக திகழ்ந்தால்தான் அவளது பிள்ளைகளும் ஏன் கணவனும் அவளையே பின்பற்றுவர்.

ஈதுல் பித்ர் என்னும் ஈகைத் திருநாளை கொண்டாடத் தயாராகும் எமது தாய்மார்கள் பெருநாள் தினத்தில் பேண வேண்டிய நற்கடமைகள் எவை?

இன்று வாழ்க்கைச் செலவு வானை முட்டுமளவுக்கு உயர்ந்து விட்டது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மட்டுமன்றி ஆடை வகைகளின் விலைகள் கூட ஆகாயத்தை எட்டி விட்டன. இந்நிலையில் பெருநாளை எங்ஙனம் கொண்டாடுவதென்ற பெண்களின் அங்கலாய்ப்பு எமக்குப் புரிகிறது.

"உள்ளதைக் கொண்டு போதுமாக்குதலே உயரிய பெண்ணின் நற்பண்பாகும்." என்பது உத்தம நபி (ஸல்) அவர்களின் பொன்மொழியாகும்.

ஆகவே, பெண்கள் பெருநாள் தினத்தைக் கூட தமது விரலுக்கேற்ற வீக்கம் என்று சொல்வது போல தம்மால் முடிந்தவரை சிக்கனமாகவே கொண்டாட தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் எப்பொழுதும் எம்மை விட உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்களைப் பற்றி நினைக்கக் கூடாது. எம்மை விட சற்று கீழ் மட்டத்தில் இருப்பவர்களை நோக்கினால் தான் அல்லாஹ் எமக்குத் தந்துள்ள நற்பாக்கியங்களை நாம் உணர முடியும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூட இதனையே வலியுறுத்தியுள்ளார்கள்.

பெருநாளைக்கென்று ஆடைகள் தைப்பதிலும் அறுசுவை உணவுகளைப் படைப்பதிலும் பெண்கள் செலுத்தும் அக்கறையோ அலாதியானது. ஆனால் பெரும்பாலான பெண்கள் பெருநாள் தொழுகையில் இவ்வாறு அக்கறை காட்டாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைக்குரிய விடயமே.

ஒவ்வொரு பெண்ணும் வீட்டில் எவ்வாறு வேலைகள் இருந்த போதிலும் அந்த வேலைகளுக்கெல்லாம் மேலாக வல்ல அல்லாஹ்வுக்காக இரண்டு ரக்அத் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவது மிகவும் சிறப்பம்சமாகும்.

பெருநாள் தொழுகைக்குச் செல்லும் போது ஒரு ஊரில் உள்ள சகல பெண்களையும் ஒரே பார்வையில் சந்திக்கும் அரிய வாய்ப்பும் ஏற்படுகின்றது.

இதனால் அனைத்து பெண்களும் ஒருவருக்கொருவர் ஸலாம் கூறி "முஸாபஹா" செய்து எமது பெருநாள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பேற்படுகிறது. அது மட்டுமன்றி பழைய கோபதாபங்கள் மறைந்து பாசமும் நேசமும் பரிணமிக்கவும் வழிகோலும் அல்லவா?

ஆகவே பெருநாள் தொழுகையை பெண்கள் தவறவிடக் கூடாது.

பசியாளிக்கு உணவளித்தல், அன்பளிப்புக்களைப் பரிமாறிக் கொள்ளல் அயலாரை நேசித்தல் போன்ற நல்ல பழக்கங்கள் பெருநாள் தினத்திலும் கூடுதலாக பேணப்பட வேண்டும்.

"ஈத் முபாரக்"

சிந்தாமணி 22. 04. 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்கார மோகத்தினால் அரிவையர் தரம் குன்றும்!

பெண்களுக்கு கூந்தல் அலங்காரம் என்றால் கூறத் தேவையில்லை. அதிலே அவர்களுக்கு அலாதி பிரியம். கூந்தல் அலங்காரம் என்றாலே அரிவையருக்கு ஒரே குஷிதானே?

இந்நிலையில் திருமண வீட்டுக்குப் போவதென்றால் இன்னும் கேட்கவா வேண்டும்.

தலைவாரி பலவிதமான கொண்டை போட்டு வரும் காரிகையர்களை கல்யாண வீட்டில் தாராளமாகவே கண்டு கொள்ளலாம்.

இரவு 6.00 மணிக்கு திருமண வீட்டுக்கு போவதானால் பிற்பகல் 3.00 மணிக்கே பெண்களின் கொண்டை போடும் படலம் ஆரம்பமாகிவிடும்.

கிராமப் புறப்பகுதிகளை விட கொழும்பு போன்ற பகுதிகளில் இத்தகைய செயல்பாடுகளை சற்று கூடுதலாக காணலாம்.

தன் கூந்தலை அழகாக வைக்க வேண்டும் என்பதற்காக பலவிதமான ஷெம்பு வகைகளையும் கூந்தலுக்குப் பூசும் மாதர்களும் நம் மத்தியில் உள்ளனர்.

அவ்வாறே கூந்தலை அலங்கரிப்பதற்காக பலரக அழகு சாதனங்களையும் பூக்களையும் பூவையர் பயன்படுத்துகின்றனர்.

இவற்றை வாங்குவதில் பெண்கள் எப்போதும் பின்வாங்குவதில்லை. அலங்கார விடயத்தில் பெண்கள் பெரும்பாலானோர் எப்போதும் முன்னணியில் திகழ்கின்றனர்.

இப்போதைய நாகரிக பெண்களில் ஒருசிலர் தமது கூந்தலுக்கும் கொண்டைக்கும் சூடும் சில அழகு சாதனங்கள் அழகுக்குப் பதிலாக அலங்கோலத்தைத் தோற்றுவிக்கின்றன.

ஒரு சிலரின் கூந்தலையும் நாகரிகப் பிசாசு சூறையாடி விட்டமை கவலைக்குரிய விடயமே. இலங்கையரின் கூந்தல் விவகாரமே இவை.

இனி உலக நாடுகளிடையே இந்த கூந்தல் (கொண்டை) விவகாரங்களை சற்று நோக்கினால் அங்கும் சிந்தனைக்கு விருந்தூட்டும் சில விந்தைத் தகவல்களையே அறிய முடிகிறது.

முற்கால பிரிட்டிஷ் பெண்களும் பிரெஞ்சுப் பெண்களும் மிக உயரமாக கொண்டை போட்டுக் கொள்வதையே "பெஷனாக" கொண்டிருந்தனர்.

வயர்களைக் கொண்டும் ஒட்டு முடிகளைக் கொண்டும் உயரமாக சுமார் மூன்று அடி உயரத்துக்குக் கூட இவர்கள் கொண்டை போட்டுக் கொள்வது வழக்கம்.

இந்தக் கொண்டை யானை, குதிரை போன்ற மிருகங்களைப் போலவும் மலர்த் தோட்டங்களைப் போலவும் கடலில் மிதக்கும் கப்பல் போலவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியளித்தாக கூறப்படுகிறது.

ஒரு முறை இவ்வாறு கொண்டை அலங்காரம் செய்து கொள்பவர்கள் பல மாதங்கள் வரை அதை கலைப்பதில்லையாம். படுக்கைக்குச் செல்லும் போது கூட அவர்கள் அந்த கொண்டையைக் கலைக்காது கொண்டையுடனேயே தூங்கி விடுவர்.

இதில் மற்றுமொரு வேடிக்கை என்னவென்றால் இவர்கள் கூந்தலை (கொண்டை) நீண்ட நாட்களுக்கு கலைக்காமல் இருப்பதால் அவர்களுக்குத் தெரியாமலே எலிகள் அவர்களது கொண்டைக்குள் கூடுகட்ட ஆரம்பித்து விடுமாம். இதனை உணர்ந்த பின்னரே பிரிட்டிஷ் பெண்கள் இந்தக் கூந்தல் அலங்காரத்தை கைவிட்டனராம்.

இதே வேளை வெட்டி வீசும் தலைமயிரைக் கொண்டு வருமானம் பெறும் ஒரு வழிமுறையைக் கண்டு பிடித்துள்ளனர் வெளிநாட்டு நிபுணர்கள்.

இத்தகைய முடிகளை (மயிர்களை)க் கொண்டு பயிர்களுக்கு உகந்த பசளை வகைகளை தயாரிக்க முடியும் என்றும் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இது மட்டுமா? அமெரிக்காவிலுள்ள இளைஞர்கள் பெண்களின் தலைமுடியினால் தயாரிக்கப்பட்ட "டைகளை" விரும்பி அணிகின்றனராம்.

இவ்வாறு பெண்களின் கூந்தலைப் பற்றி ஆராய்ந்தால் மேலும் பல சுவையான தகவல்களை நாம் பெறலாம்.

**சிந்தாமணி 07. 08. 88.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி செல்லும் நங்கையரே சிந்தித்துச் செயலாற்றுங்கள்

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்லும் பெண்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் தினமும் அறியக் கூடியதாக இருக்கிறது.

இன்று எவர் வாயிலும் அன்றாடம் அடிபடும் சொல் இதுதான். பள்ளிச் செல்லும் சிறுவர் முதல் பல் விழுந்த கிழவர் வரை தெரிந்த விடயமும் இதுவே.

யாரையாவது ஒரு சிறுவனைக் கூப்பிட்டு, அவன் அம்மாவைப் பற்றிக் கேட்டால், "எங்கட அம்மா சவூதி போயிட்டாங்க" என்று பளிச்சென்று சொல்லி விடுவான்.

அரபு நாடுகளுக்குச் செல்வதால் பல நன்மைகள் உண்டு என்று பலர் கருதினாலும், தீமைகள் ஏராளம் விளைகின்றன என்ற கசப்பான உண்மையையும் நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

தன்னைப் பெற்றெடுத்த பெற்றோரையும் தான் பெற்றெடுத்த பச்சிளங் குழந்தைகளையும் தன்னந்தனியே விட்டு விட்டு சவூதிக்குச் செல்லும் சகோதரிகள் சற்று சிந்தித்து செயலாற்றுவது அவசியம்.

ஒரு சேயின் வளர்ச்சியில் தாயின் பங்கு எவ்வளவோ முக்கியமானது. அன்னையின் அரவணைப்பில்லாத வாழ்க்கை "உப்பில்லாத பண்டத்தைப் போன்றது" என்பார்கள். உண்மைதான் "தாயற்ற பிள்ளை சீரற்றுப் போகும்" என்றும் கூறுவதுண்டு.

தாயைப் பிரிந்து பிள்ளைகள் இங்கு எதிர் நோக்கும் இன்னல்கள் ஏராளம். தாய் அங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகள் தாராளம்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது ஆண் சகோதரர்களை ஊக்குவிக்க வந்த ஓர் ஆன்றோர் வாக்கு. ஆண்கள் எங்கு சென்றும் சம்பாதிக்கலாம், பொருளீட்டலாம். அது பற்றி எவ்வித ஆட்சேபணையோ, பிரச்சினையோ எழவே போவதில்லை.

ஆனால் பெண்களைப் பொறுத்தவரை, ஆழமாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டியது அவசியமாகிறது.

வெளிநாட்டு மோகங் கொண்ட எமது தாய்மார் தமது பொறுப்புக்களை உணராது, தமது பிள்ளைகளின் வளர்ச்சியில் தம் பங்கினை அறியாது,பெற்ற பிள்ளைகளை பொறுப்பில்லாது விட்டுவிட்டு வெளிநாட்டில் வேலை பெற்றுச் செல்வது வருந்தத்தக்க விடயமாகும்.

இவர்கள் தங்களது பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்தை தாமே குழிதோண்டி புதைத்து விடுகிறார்கள் என்றுதான் கூற வேண்டும்.

முறையாக பாடசாலைக்குச் செல்வதில் இருந்து, நற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கவழக்கங்களை மேற்கொள்வதிலும் பிள்ளைகள் அசட்டையாக இருப்பது வேதனை தருவதாகும். இதனால் அவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் உயரிய அந்தஸ்தை பெறும் வாய்ப்பையும் அவர்கள் இழக்க நேரிடுகிறது.

இத்தனைக்கும் மூல காரணம் யார்? தட்டிக் கேட்கவும் கட்டிக் காக்கவும் ஒரு பிள்ளையின் தாய் அவன் அருகில் இல்லையெனில் இந்நிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்நிலை முற்றாக மாற வேண்டும். தம் பிள்ளைகளின் மீது பிரியமுள்ள தாய்மார் இனியாவது சிந்தித்துச் செயலாற்ற முனைய வேண்டும். இதுவே வேண்டற்பாலது.

**சிந்தாமணி 27. 05.83**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுப் பாசறைகளாக பெண்கள் மாற வேண்டும்

இன்றைய நவநாகரிக யுகம் மனித இனத்தை மகத்தான சுபாவத்திலிருந்து மிருகத்தையும் விட, மிக மோசமான சுபாவங்களின் பால் இழுத்துச் செல்கின்றது. இக்காலக் கொடுமைக்குள் அகப்பட்டுக் கொள்பவர்கள் அனேகமாக பெண்களாகவே இருக்கிறார்கள்.

"பெண்கள் சமுதாயத்தின் கண்கள்" என்னும் கருத்தில் கண்ணோட்டம் செலுத்துகையில் ஓர் உண்மை உள்ளிருந்து வெளிவருகின்றது.

மனித உடம்பில் விழி ஒரு முக்கிய உறுப்பாகும். அதில் பாதிப்பு ஏற்பட்டால் முழு உலகமுமே இருள்மயமாகி விடுகின்றது. இவ்வாறே சமுதாயம் என்னும் உடம்பின் விழியாக பெண்கள் திகழ்கிறார்கள்.

ஆகவே, பெண்கள் அவர்களுக்கு இருக்க வேண்டிய பக்குவம், பண்பாடு, பத்தினித்தனம், பலமான இறையச்சம் பயன்பெறும் செயல்திட்டங்கள் போன்ற உயரிய இலட்சணங்களுடன் வாழ வேண்டும். இவை பெண்களை பண்பாட்டுப் பாசறைகளாக மாற்றவல்ல சாதனங்களாகும்.

ஒரு சமுதாய மேம்பாட்டிற்கும் அதன் முன்னேற்றத்திற்கும், முழுமையான வெற்றிக்கும் பெண்கள் ஓர் அங்கமாகி பயனுறும் விதத்தில் பணிபுரிய தயாராக வேண்டும்.

பெண்கள் தமது கண்ணியம், கடமையுணர்வு, கட்டுப்பாடான வாழ்க்கை அமைப்பு போன்றவைகளை மீறி செயல்படத் துணியும் போது ஒரு சமுதாய அமைப்பில் தூய்மை, துணிவு, வீரம், ஊக்கம், உறுதி, உயர்வு, ஒற்றுமை போன்ற இன்னோரன்ன இலட்சியங்களில் வெற்றி காண முடியாது. மாறாக தோல்வியும், துன்பமும், தொல்லைகளும் தொடர்கின்ற நிலைதான் உருவாகும்.

சத்திய சன்மார்க்க மரபை நெறிப்படுத்தும் சிறப்பான அல்குர் ஆனில் "விசுவாசிகளே! நீங்கள் தொழுகையை முடித்துக் கொண்டால், உங்கள் எல்லா நிலையிலும் அல்லாஹ்வை திக்ரு செய்து கொண்டே இருங்கள். விரோதிகளின் எதிர்ப்பிலிருந்து நீங்கள் அச்சமற்றவர்களாகி விட்டால் (முறைப்படி) தொழுங்கள். நிச்சயமாக தொழுகை குறிப்பிட்ட நேரங்களில் நிறைவேற்ற வேண்டிய கடமையாகவே விசுவாசிகளின்மீது விதியாக்கப்பட்டுள்ளது." (அன்னிஸா - 103)

இந்த இறைமறை போதனை மூலம் புண்பட்ட நெஞ்சங்களுக்கு பண்பாட்டு வழியை அல்லாஹு"த்தாலா தெளிவாகத் தந்துள்ளான்.

ஆகவே, அகிலத்தில் தலைவிரித்தாடும் அவலங்களுக்கு எமது முஸ்லிம் சமுதாயத்து பெண்கள் அடவுப் பொருளாக ஆகிவிடக் கூடாது.

பெண்களை பண்பாட்டுப் பாசறைகளாக ஆக்கி வைத்த பெருமைக்குரிய எம் பயகம்பர் நபி நாதர் (ஸல்) அவர்கள், பெண்களைப் பற்றி குறிப்பிடுகையில் "பெண்கள் மலரைப் போன்று மென்மையானவர்கள்" என்றும் "பெண்கள் ஆதம் (அலை) அவர்களின் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவர்கள். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை மெதுவாக அணுகுங்கள்" எனவும் ஆண்களுக்கு அறிவுரை பகர்ந்து பெண்களுக்கு பெருமதிப்பளித்தார்கள். "உத்தம பத்தினி யார்?" என ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வினவினார். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளிக்கையில், அவளுடைய கணவர் அவளைப் பார்த்தால் அவரை அவள் சந்தோஷப்படுத்துவாள். அவர், அவளை ஏவினால் அவருக்கே கீழ்படிந்து நடப்பாள். அவருக்கு பொருத்தமில்லாத விஷயத்தில் தன்னாலும் சொத்தாலும் மாறு செய்யமாட்டாள். இவளே உத்தம பத்தினிப் பெண்" என்றார்கள். (ஆதாரம் - பைஹகி)

உயர்ந்த பண்புகளை நெறிப்படுத்தி, நிலையில்லாத உலகை விட்டும் நீங்க வேண்டிய நாம், குறிப்பாக முஸ்லிம் பெண்கள், தம்மை அலங்கரிப்பதிலும், ஆடலிலும் பாடலிலும், ஆடம்பரத்திலும் வாழ்நாளைக் கழிப்பது முறையற்ற செயலாகும்.

"நபியே! இறையச்சமுள்ள பெண்களுக்கு நீர் கூறும், அவர்கள் தங்களது பார்வையை கீழ் நோக்கி வைத்து, தங்களது கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும், அன்றி தாங்கள் பெரும்பாலும் வெளியில் தெரியக் கூடியவைகளை தவிர தங்கள் அழகையும், ஆபரணங்களையும், வெளிக்காட்டக் கூடாது. அவற்றை மறைத்துக் கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பகங்களை மறைத்துக் கொள்ளவும்." இவ்வாறு அல்லாஹ்வின் அருள்மறையாம் அல் குர்ஆன் அரிவையருக்கு அறிவுரை பகர்கின்றது.

உலகிலே உள்ள படைப்பினங்களில் மனித இனம் மிக உன்னதமான படைப்பாகும். இந்த உயரிய படைப்பாகிய நாம் சிறந்த பண்புகளை மேற்கொண்டொழுகி, எமது தகுதிகளை மேம்படுத்திக் கொள்வது எமது தலையாய கடமையாகும்.

**வல்ல அல்லாஹ் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக! ஆமீன்.**

**இலங்கை விவசாயக் கல்லூரி குண்டசாலை.**

**கண்டி முஸ்லிம் மஜ்லிஸ் மலர் 1985.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் கல்வியை நாம் கவனிப்பது நன்று

**அத்திவாரம் முறையாக அமையின்**
**சிறந்தவர்களாக அவர்கள் மிளிர்வர்**

படித்த, படிப்பில் உயர்ந்த பண்பான சமூகம் ஒன்றே எமக்குத் தேவை. முறையாகப் படித்து உயர்ந்த சமூகத்தின் மதிப்பை எவராலும் அளவிட முடியாது.

பிறந்தது முதல் இறக்கும் வரை நாம் படித்துக் கொண்டேயிருக்கிறோம். இதில் முக்கியமானது சிறு பிராயத்தில் நாம் கற்கும் கல்வியாகும்.

இளமையில் கல்வி - சிலையில் எழுத்து என்பார்கள். இந்த இளம் பராயத்தில் பெறும் கல்வியானது, ஒருவரை சிறந்த நபராக சமூகத்தில் அடையாளம் காட்டுகிறது.

எதிர்காலத்தில் சிறந்த உதாரண புருஷர்களாகத் திகழ வேண்டுமானால், பிள்ளைகளுக்கு, சிறு பராயத்தில் முறையான ஒரு அத்திவாரமிடல் அவசியமாகும்.

கல்வியானது குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு இன்றியமையாதது. குழந்தைகளின் ஒளிமயமான எதிர்கால வாழ்வுக்கு கல்வியெனும் விளக்கு கட்டாயம் தேவை.

குழந்தை பாடசாலைக்குச் செல்லும் முன்னரே, வீட்டுச் சூழலில் பலவகையான படிப்பினைகளை கற்றுக் கொள்கிறது.

எழுத்துக்களை படிப்பதற்கு முன்னர் புத்தகங்களில் உள்ள ஓவியங்களையும் படங்களையும் விரும்பிப் பார்ப்பதில் தனது கவனத்தைச் செலுத்துகிறது.

வாசிக்கும் பழக்கம் வந்ததும் கைக்குக் கிடைக்கும் புத்தகங்கள் அனைத்தையும் படிக்கத் துடிக்கிறது அக்குழந்தை.

இத்தகைய பருவத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளின் கரங்களில் சிறந்த நூல்களையே சமர்ப்பிக்க வேண்டும்.

இன்று எமது கல்வித் திட்டத்தில் வீர புருஷர்களின் வரலாறுகள் படிப்படியாக அருகி வருகின்றன. இதனால் நாட்டின் பின்னணியாயுள்ள வரலாறுகள் குறித்து பிள்ளைகள் குறைந்த அளவிற்றான் கற்றுக் கொள்கிறார்கள்.

எமது மூதாதையரின் வரலாறுகளை பிள்ளைகளும் அறிந்து கொள்ள அவகாசம் அளிப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கட்டாய கடமையாகும்.

அவ்வாறே இன்று பாடசாலைகளில் சமய பாடங்களும் ஏனோ தானோ என்றே போதிக்கப்படுகின்றன. இறை பக்தியை நிறை சக்தியாகக் கொண்டு வாழும் சமுதாயமே சீர் பெறும்.

ஆகவே சமயச் சார்பான பாடங்களுக்கு புத்தூக்கம் அளிக்க வேண்டும். சமய பாடப்புத்தகங்களில் தவறுகளை தோற்றுவித்து குழந்தைகளின் மனதில் சமயங்களைப் பற்றி மாசு படிய விடக் கூடாது.

இத்தகைய தவறுகளிழைக்கும் கும்பல்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க வேண்டும்.

இதனால் வளரும் சமுதாயம் வளம் பெறும். புத்தகங்கள் காலம் என்னும் கடலின் நடுவில் கட்டப்பட்ட கலங்கரை விளக்கங்களாகும். புத்தகம் வாசிப்பதை பிள்ளைகளிடையே ஊக்குவிக்க வேண்டும்.

நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும், சமயத்துக்காகவும் தொண்டாற்றிய வீரபுருஷர்களைப் பற்றி பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் இத்தகைய பின்னணிகளை உள்ளடக்கிய வரலாற்று நூல்களை வாங்கி பிள்ளைகளின் கைகளில் ஒப்படைக்க வேண்டும்.

பிள்ளைகளின் நலன் கருதி வெளிநாடுகளைப் பற்றிய புத்தகங்களை மொழி பெயர்ப்புச் செய்வதாயின், அவை எளிய நடையில் சிறார்களுக்கு விளங்கும் படியாக எழுதப்பட வேண்டும்.

படித்த பண்பான ஒரு மக்கள் சமுதாயம் எமக்கு தேவையாயின் சிறு வயதிலிருந்தே சிறார்களுக்கு அதற்கான வித்தை விதைக்க வேண்டும் என்று மனோதத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"பிள்ளைகள் எவரும் விரும்பும் புஷ்பங்களாவர்" மலரும் இந்தப் புஷ்பங்கள் மாசு படிந்து விடக் கூடாது. மாசு படிந்து மடியவும் கூடாது. எதிர் காலத்தில் மனோகரமான சுகந்தத்தைத் தரக் கூடிய புஷ்பங்களாக இவை மலர வேண்டும்.

குழந்தைகளின் மனம் வெளிப்புறச் சூழலில் மாசுபடலாம். மலரில் படிந்த மாசை அகற்றலாம். ஆனால் குழந்தையின் மனதில் படியும் மாசுகளை அகற்றுவது சுலபமான காரியமல்ல.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

பிள்ளைகளைக் கெட்ட வழிகளில் இழுத்துச் செல்லக் கூடிய புத்தகங்கள், சஞ்சிகைகள், நாவலகள் மற்றும் நவீன பல , சாதனங்கள் இன்று எங்கும் மலிந்துவிட்டன.

இந்த நெருக்கடி மிக்க யுகத்தில் சிறந்த ஒரு மனிதப் புனிதரை உருவாக்குவதென்பது இலேசான காரியமல்ல. பெற்றோரின் தீவிர கண்காணிப்பினாலும் அன்பான அரவணைப்பினாலும் மட்டுமே குழந்தைகளை நல் வழியில் நடத்திச் செல்ல முடியும்.

"ஆயிரம் நாக்கள் தரக் கூடிய கருத்துக்களை ஒரேயொரு புத்தகத்தை ஆழ்ந்து படிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்." என்கிறார் ஆஸ்போர்ன் என்ற அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் தோன்றியது முதல் இன்று வரை வாழ்ந்த மக்களைப் பற்றியும், அவர்களின் மாண்புகளைப் பற்றியும், அவர்கள் செய்த ஆராய்ச்சிகள், பெற்ற ஆற்றல்கள், அனுபவங்கள் பற்றியும் சிறந்த நூல்களின் மூலம் நாம் அறிய முடிகின்றது.

இதனாலேயே "நல்ல நூலுக்காக செலவிடும் பணத்தை செலவுகளில் எல்லாம் மேலான செலவாகக் கருதிக் கொள்ள வேண்டும்" என்கிறார் கார்லைல்.

வாசிப்பு ஒரு மனிதனை பூரண மனிதனாக்குகிறது. வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்கவே அரசாங்கம் நாடு முழுவதிலும் வாசிகசாலைகளை அமைத்து வாசகர்களை ஊக்குவிக்கிறது.

எனவே பயனுள்ள நூல்களை எமது குழந்தைகள் படிக்க உதவ வேண்டும். இதனால் படித்த பண்பான சமூகம் ஒன்று உருவாகும் என்பது நிச்சயமே!

தினபதி 23.01.88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்கும் மாதர் சங்கங்கள் உடன் விழிப்படைய வேண்டும்

ஒரு நகரத்தின் அல்லது கிராமத்தின் வளர்ச்சி அவ்வப்பகுதியில் இயங்கும் சங்கங்களிடையே தங்கியுள்ளது.

ஒருவர் தனியாக செய்து முடிக்க இயலாத ஒரு வேலையை ஒன்று சேர்ந்தால் செய்து முடிக்கலாம். இதனைத்தான் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்று சொல்வார்கள்.

"ஒற்றுமை என்னும் கயிற்றை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் வழி கெடமாட்டீர்கள்" என பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆம், இந்த ஒற்றுமைக்கு வித்திடுபவை சங்கங்கள்தான். இன்று இலங்கையில் பல்வேறு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

குறிப்பாக, ஆண்கள் மத்தியில் இயங்கும் வாலிபர் சங்கங்கள் ஏதோ அவ்வப்போது சில சமூகப் பணிகளை செய்து சமூகத்தின் கண்ணிலிருந்து ஒருவாறு தப்பித்துக் கொள்கின்றன.

ஆனால் மாதர்களிடையே இயங்கும் மாதர் சங்கங்கள்தான் மறுமலர்ச்சி பெற்றதாக தெரியவில்லை. பெண்கள் இன்று எவ்வளவோ முன்னேறி விட்டனர். அறிவிலும் அந்தஸ்திலும், நிர்வாகத்திலும் துணிச்சலிலும் வீரத்திலும் இப்படி சகல துறைகளிலும் பெண்கள் இமயத்தை மிஞ்சும் அளவுக்கு உயர்ந்து விட்டனர். ஆனால் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் மாதர் சங்கங்கள் மந்த நிலையில்; உறக்க நிலையில் இருப்பது வருந்தத்தக்கது.

சகல துறைகளிலும் சாதனை புரிந்து வரும் சகோதரிகள் தமது (மாதர்) சங்கங்கள் மூலமும் தம்பங்களிப்பை வெளிப்படுத்த வேண்டும். இதனால் சமூகம், குறிப்பாக மாதர் சமூகம் மறுமலர்ச்சி பெறுமல்லவா!

இன்று நம்நாட்டில் 'சேவா வனிதா' பிரிவு என்ற பெயரில் மாதர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவை அவ்வப்போது ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபடுகின்றன.

அவ்வாறே நகரங்களிலும், கிராமங்களிலும் இயங்கும் மாதர் சங்கங்கள் அந்தந்த பகுதி பெண்களுக்கு அரிய சேவையாற்ற முன்வர வேண்டும்.

இன்று நம்நாட்டில் கிராமங்களிலும் நகரங்களிலும் எண்ணற்ற பல மாதர் சங்கங்கள் உள்ளன. ஆனால் அவை பெயரளவில் மட்டுமே இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான பணிகள் ஆற்றியதாகத் தெரியவில்லை.

வருடம் ஒருமுறை சாப்பாடு வைபவங்களை நடத்துவதற்கென்று ஒரு சில சங்கங்கள் உள்ளன. சாப்பாடு வைபவங்களை ஏற்பாடு செய்வது தான் (சகோதரிகளின்) சங்கங்களது சாதனையா? இல்லை.

தாம் வாழும் கிராமத்தை தமது சமூகத்தை குறிப்பாக பெண் இனத்தை முன்னேற்ற வகை செய்வதே மாதர் சங்கங்களின் மகத்தான சேவையாகும்.

சிறுவர்களுக்கான பாலர் பாடசாலைகளை ஆரம்பிப்பது பெண்களுக்கு சமையல் வகுப்புக்கள், தையல் வகுப்புக்கள் போன்றவற்றை நடத்துவது,

படிப்பை முடித்துவிட்டு வீட்டிலிருக்கும் இளம் யுவதிகளுக்கு வீட்டுத் தோட்டம், கோழி வளர்ப்பு போன்ற சுயதொழில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவது,

வயது வந்தும் வாழ வகையற்றிருக்கும் வறிய யுவதிகளுக்கு வாழ் வகை செய்வது-

இவ்வாறான பல சீர்திருத்த நடவடிக்கைகளில் மாதர் சங்கங்கள் ஈடுபட வேண்டும்.

மனிதனுக்கு சேவை செய்வதே, மனிதனின் தலையாய கடமையாகும். ஆகையால் சேவை செய்வதை சிறந்ததொரு பண்பாகக் கொள்ள வேண்டும்.

மற்றவர்களுக்கு சேவை செய்யும் நற்பண்பு நம்மிடையே மலர வேண்டும். பெண்களின் சேவை சமூகத்துக்கு தேவை என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும்.

பெண், பிறவியிலேயே பிறருக்கு சேவையாற்றும் குணம் படைத்தவள். குடும்பத்தில் தாயாக, தாதியாக, சமையல் காரியாக, சலவைக்காரியாக அவள் ஆற்றும் பணி அளவிடற்கரியது.

எனவே பிறருக்கு சேவை செய்வது என்பது பெண்களுக்கு பெரிய கஷ்டமான காரியமல்ல. இது காரிகையருக்கு கைவந்த கலை.

இக்கலையில் தேர்ச்சி பெற்ற பெண்கள் தம் பணியை சரிவர செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

மாதர் சங்கங்களில் அங்கம் வகிக்கும் எமது மாதர்கள் இதனை நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

உறக்க நிலையில் இருக்கும் எமது மாதர் சங்கங்கள் உடனடியாக விழிப்படைய வேண்டும். அதனால் மாதர் சமூகம் மறுமலர்ச்சியடைய வேண்டும். இதன் மூலம் சமூகம் மட்டுமல்ல, நாடும், நாமும் நற்பயனடைவோமல்லவா?

சிந்தாமணி **13/07/86**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு முன்னால் இரகசியம் பேசுவதா?

"ஷப்னா அடிபடாம போங்க முன்னுக்கு. பெரியவங்க பேசுற எடத்துல சின்னப் புள்ளங்களுக்கு என்ன வேல. போங்க ஷப்னா, போங்க அடிபடாம போங்க. அங்கால? அந்த உம்மாவுக்கு கோபம் வந்துவிட்டது போலும் அதனால்தான் தன் பிள்ளையை விரட்டுகிறாள். பிள்ளை அங்கிருந்து நகர்கிறது. பூரண விருப்பத்தோடு அல்ல. இங்கிருந்தால் தாயிடமிருந்து தனக்கு அடிவரும் என்றஞ்சியே பிள்ளை அங்கிருந்து வெளியேறுகிறது. அங்கிருந்து அகலும் அப்பிள்ளை அடுத்து என்ன செய்யப் போகிறது? "உம்மா எனய போக சொல்லிட்டு என்ன கதைக்கப் போறாங்களோ? என்ற அங்கலாய்ப்பு அப்பிள்ளையை ஆட்டிப்படைக்கிறது. எனவே அப்பிள்ளை அறையின் ஜன்னலினூடாக அல்லது கதவுக்குப் பின்னால் மறைவாக நின்று உம்மாவுக்கு தெரியாமல் அவர்கள் என்ன கதைக்கிறார்கள் என்று ஒற்றுக் கேட்கும். அது ஏன் அப்படிச் செய்கின்றது? பிடிவாதத்தினாலா? அல்லது பொடு போக்கினாலா? நீங்கள் அப்படி நினைத்தால் அது தவறு,

பெரியவர்கள் எம்மிடம் எதை மறைக்கிறார்கள் என்பதை அறிய அப்பிள்ளையின் மனம் துடிக்கிறது. எங்களிடம் ஏன் அதை மறைக்கிறார்கள். எங்களுக்கு அந்தக் கதை ஏன் சரியில்லை? அந்தக் கதையில் அப்படி என்ன ரகசியம் இருக்கிறது போன்ற வினாக்கள் அந்தப் பிஞ்சு மனதில் துள்ளிக் குதிக்கின்றன. இந்த வினாக்களுக்கு விடை அது ரகசியமாகவாவது பெரியவர்களின் பேச்சை ஒற்றுக் கேட்க முயல்கிறது. பிள்ளையின் மனதில் தோன்றிய கவலைகளுக்கு விடை தேடும் வேட்கையிலே தம்மை ஈடுபடுத்த துணிகின்றது.

உண்மையிலேயே இங்கே தவறு இழைத்தவர் யார் தாயா? சேயா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். அப்போது உங்கள் மனச்சாட்சியே உங்களை உறுத்தச் செய்யும். நீங்கள்தான் குற்றவாளி என்று, அந்தப் பிள்ளையின் பிஞ்சு உள்ளத்தில் ஒரு சுவனத்தை உண்டு பண்ணியதே நீங்கள் தானே!

நாம் பேச நினைப்பதையெல்லாம் பிள்ளைகளின் முன் பேசிவிட வேண்டும் என்பதல்ல. நீங்கள் உங்கள் வயதுக்கேற்றவர்களுடன் ஊர்வம்பு அலசிக் கொள்ளலாம். அல்லது சீரியஸாக ஏதும் பேசிக் கொண்டிருக்கலாம். உங்கள் பிள்ளைகள் இதனைக் கேட்டுக் கொண்டிருப்பது உசிதமல்ல.

பெரியவர்கள் பேசுவதை பிள்ளைகள் கேட்பது உசிதமல்ல என்று நீங்கள் கருதுவதாயின் பிள்ளையை தமது பக்கத்தில் வைத்துக் கொண்டு நீங்கள் ஏன் அந்தப் பெரிய பேச்சை ஆரம்பிக்கிறீர்கள்? பிள்ளையைப் பற்றி யோசிக்காது பேச்சை ஆரம்பித்துவிட்டு இடையில் அவர்களை விரட்டுவது முறையாகுமா? அது சின்னப் பிள்ளைக்கு பொருத்தமில்லாத பேச்சாக இருந்தால் பிள்ளையின் முன்னிலையில் நீங்கள் அப்பேச்சை ஆரம்பிக்காமல் இருந்திருக்கலாம்.

சும்மா இருந்த பிள்ளையின் மனக்கதவை திறந்ததே நீங்கள்தானே? அவர்களுக்கு ஒரு எதிர்பார்ப்பை சலனத்தை உண்டு பண்ணியதே நீங்கள்தானே? ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான இடம், பொருத்தமான சந்தர்ப்பம் என்றிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சற்று சிந்தித்து செயல்பட்டு அப்பிள்ளை அப்பால் சென்றதும் உங்களது கதையை ஆரம்பித்திருந்தால் பிரச்சினை ஏதும் எழுந்திருக்காதே. நீங்கள் பேச்சை ஆரம்பித்து விட்டு பிள்ளையை விரட்டுவது முறையல்லவே. நீங்கள் செய்த தவறுக்கு பிள்ளையை தண்டிப்பது சரியாகுமா?

சின்னஞ்சிறுசுகள் தடைகளை விரும்புவதில்லை. அந்தத் தடைகளை எல்லாம் முறியடித்துக் கொண்டு முன்னுக்கு வரவே அவர்கள் விரும்புவதுண்டு. அவர்களது நிலையில் அது நியாயமான செயற்பாடாகும். செய்ய வேண்டாம் என்று சொல்வதை செய்யவே அவர்கள் விரும்புவதுண்டு. சின்னப் பிள்ளைகளின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு வேண்டும். அவற்றை பின்னர் என பின்போட முடியாது. பெரியவர்களாகிய எங்களது பிரச்சினைகளில் பெரும்பாலானவை காலத்தால் தீர்க்கப்படுகின்றன. ஆனால் பிள்ளைகளின் பிரச்சினைகளை காலத்திடம் சுமத்தி விடுவது அழகல்ல. அதனால் விளையும் விபரீதங்கள் அனந்தம்.

நீங்கள் பிள்ளைக்கு மறைத்த பேச்சை அது எப்படியோ மறைந்திருந்து கேட்டுக் கொள்ளும். அந்தப் பேச்சானது பிள்ளையின் மனதில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவும் கூடும். எனவே தாய்மார்களே இத்தகைய சிறிய பொடுபோக்கான செயல்களில் கள்ளங்கபடமற்ற உங்களின் பிள்ளைகளின் மனதில் மாசுபடிய வகை செய்து விடாதீர்கள். எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில் பிள்ளையை வெளியே போ என விரட்டுவதை விட அத்தோடு அப்பேச்சை நிறுத்தி விடுவதே மேல். பெரியவர்களாகிய நாங்கள் தினமும் பிள்ளைகளுடன் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இன்றைய பிள்ளைகள் புத்திசாலிகள் என்பதை மனதில் நிறுத்தி செயற்பட வேண்டும். இதன் மூலம் சிறுவர்களை நல்ல பாதையில் நம்மால் வழிநடத்திச் செல்ல முடியும்.

பிள்ளைகளின் தவறை திருத்துவதற்கு முற்பட முன்னர் பெரியவர்களாகிய நாம் எமது தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலமே சிறுவர் மனதை எம்மால் வெல்ல முடியும்.

மாதர் மஜ்லிஸ்
முஸ்லிம் சேவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுக்கு அன்பு செலுத்துவதில்

# தாய்மார் நியாயத் தராசாக செயல்பட வேண்டும்

இந்த புள்ள இப்ப கணக்குக்கு மிச்சம். மத்த புள்ளங்க வளுற மாதிரியில்ல இது வளருது? இந்த புள்ளங்க உலகத்துக்கும் பாரம்! எங்களுக்கு பாரம்! இப்பிடியாகக் கொத்த புள்ளங்க ஓலகத்துல இல்லாட்டி எவ்வளவோ மேல்!

தனது ஏனைய பிள்ளைகளின் முன்னிலையில் வேறு சிலரும் பக்கத்திலிருக்க ஒரு தாய் தமது மகளுக்கு ஏசிய ஏச்சு தான் மேலே கூறப்பட்டது.

தமது பிள்ளைகள் குற்றம் புரிந்தால் அவர்களை ஏசுவதற்கு தண்டிப்பதற்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் கனி இருக்க காய் பறிப்பதை போல ஒரு தாய் தன் மகளுக்கு இப்படிப் பேசுவது அழகல்ல. தனது மகளின் குற்றத்தை இப்படி ஏனையோருக்கு சுட்டிக் காட்டுவதும் முறையல்ல. இவ்வாறு ஒரு தாய் ஏசுவதும் பேசுவதும் பிள்ளை மேலும் கெட இடமளிப்பதாக இருக்கும். எனவே தாயனவள் இது விடயத்தில் மிகவும் நுணுக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

மக்களின் சொர்க்கம் மாதாவின் பாதத்தடியில் என்று மொழிந்துள்ளார்கள் மாதர்களுக்கு உரிமையளித்த மாநபி (ஸல்) அவர்கள்! இத்தகைய மேன்மையான தாய்மார் எம்மிடையேயும் இல்லாமலில்லை. எனவே வெளிஉலகில் பாரிய பொறுப்புகளுக்கு மத்தியில் நடமாடும் தாய்மார் தமது நல்ல குணங்களை நழுவ விடக்கூடாது. தாய் என்ற அந்தஸ்திலேயே தாயானவள் இருந்தால் அந்த ஸ்தானத்துக்கு என்றுமே மதிப்புத்தான்.

எனவே என் அருமை தாய்க்குலமே! உங்கள் தங்கக் குலத்துக்கு பங்கம் ஏற்படாதிருக்கட்டும். உங்களுக்கும் ஒரு பிள்ளை அல்லது பல பிள்ளைகள் இருக்கலாம். அந்த பிள்ளைகள் அனைத்தையும் ஒரே கண் கொண்டு நோக்குங்கள். அவர்கள் எல்லோரது அத்தியாவசிய தேவைகளையும் சமமாகவே ஒரே முறையில் பூர்த்தி செய்யுங்கள்.

ஒரு பிள்ளையை ஒரு கண்கொண்டும், மற்ற பிள்ளையை வேறு கண்கொண்டும் நோக்காதீர்கள். இவ்வாறு நீங்கள் செயல்பட்டால் அதாவது ஒரு பிள்ளையுடன் அதிக அன்பு வைத்து மறு பிள்ளையை நீங்கள் புறக்கணித்தால் அப்பிள்ளை மானசீகமாக பாதிக்கப்படுகின்றது.

எங்கட உம்மா எனையோட இரக்கமில்ல. அதனால்தான் நான் கேக்கிற ஒன்றையும் உம்மா எனக்கு தாரதில்லை. பாயிகாட உம்மா என்டா அவங்கட மகளோட நல்ல இரக்கம். மிச்சம் இரக்கம்.

இந்த அலறல் அந்த பிள்ளையின் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழும் ஏக்கத்தின் எதிரொலியாகும். இத்தகைய தாக்கங்கள் பிள்ளையின் மனதில் துளிர்விடாமல் இருக்க செயல்படுவதே ஒரு தாயின் உயரிய பண்பாகும்.

தாய்மார்களே! உங்களது பிள்ளைகளின் முன்னிலையில் ஒரு பிள்ளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் கட்டித் தழுவி அரவணைத்து முத்தமிடாதீர்கள். ஒரு பிள்ளையை மட்டும் புகழ்ந்து வர்ணிக்காதீர்கள்.

சிபாமா நீ மட்டும் தான் என்ட புள்ள. நான் உனக்கு டொபி வாங்கி தாரேன். சப்பாத்து வாங்கி தாரேன். மாலை வாங்கி தாரேன்.

இப்படியாக வர்ணனை பாடும் ஒரு சில தாய்மாரும் எம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். தாய் தன் பிள்ளைக்கு இப்படி எல்லாம் புகழாரம் பாடுவதில் பிழையில்லை. ஆனால் தனது அடுத்த குழந்தை இந்த புகழாரத்தினால் புண்படக்கூடாது. அந்த பிஞ்சு மனதில் கவலை தஞ்சமடையக் கூடாது. எனவே தன் வயிற்றில் சுமந்து தான் பெற்றெடுத்த எல்லாக் குழந்தைகளையும் ஒரே மாதிரித்தான் நினைக்க வேண்டும்.

ஒரு பிள்ளை தன் தாயிடம் எதிர்பார்க்கும் அன்பை வேறு எவரிடமிருந்தும் பெறமுடியாது. எனவே அந்த பெறுமதிமிக்க அன்பை செலுத்துவதில் தாயானவள் பாரபட்சம் காட்டக் கூடாது. தன்னோடு சுவாரஸ்யமாக பழகும் தாம் பெற்ற பிள்ளைகளுக்கு பரஸ்பர அன்பை பஞ்சமின்றி பகர வேண்டும்.

அவ்வாறே மற்றப் பிள்ளைகளின் முன்னிலையில் தனது பிள்ளையை ஏசக் கூடாது. தாயின் சொந்த பந்தம் அவளது எல்லாப் பிரச்சினைகளுக்கும் உரித்தானதே. எல்லா உயிரினங்களும் அந்த தாயிடமிருந்து இதனையே எதிர்பார்க்கின்றது. எனவே குழந்தை தவறிழைத்தால் அதை அன்பாக அணுகி திருத்த வேண்டும். அன்பு என்னும் ஆயுதத்தை பயன்படுத்தியே குழந்தையை தண்டிக்க வேண்டும். அன்பினால் சிங்கத்தின் மீசையை கூட பிடிக்க முடியும் என்பார்கள். அவ்வாறே பழகும் விதத்தில் பழகிப் பார்த்தால் மிருகம் கூட நண்பனே என்று ஒரு கவிஞன் கூறுகிறான்.

எனவே தாய்மார் தமது சேய்களை அன்புடன் வழிநடத்த வேண்டும். அன்பு மொழி பேசி, ஆசை வார்த்தைகளை அள்ளி வீசி தன் குழந்தையை தண்டித்தால் நிச்சயமாக குழந்தை தனது தவறை உணர்ந்து திருந்தி வாழ முற்படும். மாறாக வன்சொல்லுடன் பிள்ளையை தண்டித்தால் அது தாயுடனே வம்புக்கு வரவும் தயங்க மாட்டாது.

இதனால் தாய்மார்களே! நீங்கள் கருணையுள்ளம் கொண்ட இரக்க சிந்தை கொண்ட தாய்மாரேயானால் மேற்கூறியவாறு உங்கள் பிள்ளைகளை ஒரே கண்ணோட்டத்தில் நோக்குங்கள். நியாயத் தராசாக செயல்படுங்கள்.

மாதர் மஜ்லிஸ்

முஸ்லிம் சேவை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைக்கும் இல்லாள் உள்ளம் மகிழ வழி என்ன?

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?" என்ற காலம் மலையேறிவிட்டது. அன்று அடுக்களையே தஞ்சம் என்று அகப்பை பிடித்த வளைகரங்கள் இன்று பேனாவோடும் பெரும் பதவிகளோடும் விளையாடுகின்றன.

ஆம்! பெண்கள் இன்று முன்னேறி விட்டனர். எல்லாத் துறைகளிலும் ஆண்களுடன் சரிநிகர் சமனாக நின்று பணிபுரியும் பெண்களைத்தான் இன்று நாம் எங்கும் காண்கிறோம். சாதாரண தொழிலாளியிலிருந்து அரசியல் தலைவர்கள் வரை பதவி பெற்றிருக்கிறாள் இன்றைய பெண். உலகில் படித்துப் பட்டம் பெற்று பல பதவிகளையும் வகிக்கும் பெண்களுக்கு ஆண்களின் பங்களிப்பு அவசியம் தேவை.

பொருளாதார நெருக்கடி உயர்ந்து கொண்டே போகின்ற இன்றைய கால கட்டத்தில குடும்ப நிருவாகத்திற்கு கணவனின் ஊதியம் போதாதிருக்கின்றது. இதனால் மனைவியும் தொழில் புரிவது அவசியமாகின்றது.

குடும்பச் சுமையைக் குறைப்பதற்காக வேலைக்குப் போகும் பெண்ணுக்கு வீடு திரும்பியதும் வீட்டு வேலைகள், குழந்தை பராமரிப்பு என்பன அன்றாட கடமையாகவே இருக்கின்றன.

குழந்தைகள் இல்லாத குடும்பமானாலும் கூட மனைவியானவள் கணவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்யத் தவறுவதில்லை. சமைக்கிறாள், அலுவலகத்திற்கு செல்கிறாள்.

ஆனால் ஆண்களோ வேலைக்குப் போய் வந்ததோடு தங்கள் கடமை முடிந்து விட்டதாகக் கருதுகிறார்கள். இது தவறு.

இச்சந்தர்ப்பத்தில் குடும்பத்தில் பிரச்சினை எழுகிறது. இயற்கையிலேயே பலவீனமானவர்கள் பெண்கள். ஆண்களைப் போன்ற உடல் வலிமை அவர்களுக்கில்லை. அவர்களும் பஸ்ஸுக்காக காத்துக் கிடந்து வேலைக்குச் சென்று மறுபடியும் வீடு வந்து சேர வேண்டியுள்ளது. வீட்டுக்கு வந்தால் அவளுக்கு ஓய்வாக இருக்க நேரமிருக்கிறதா? இல்லை!

ஒரு பெண்ணானவள் ஒவ்வொரு முறையும் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் போது அவளுடைய உடல் ஆரோக்கியம் குறைகிறது. அதே நேரத்தில் அவளது பொறுப்புக்கள் கூடுகின்றன.

மிதமிஞ்சிய வேலைப்பளுவினால் உடல் பலவீனம் அடையும் பெண்கள் வயது ஏற ஏறத் தங்களால் வீட்டு வேலைகளைத் தனியாகக் கவனிக்க முடியாமல் அலுப்பும் சலிப்பும் அடைகின்றனர்.

இது படிப்படியாக வளர்ந்து அவர்களிடம் ஒரு விரக்தியை ஏற்படுத்தி விடுகிறது. தான் மட்டும் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்? கணவனும் சேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபடட்டுமே என்ற மனப்பான்மையே எழுகின்றது.

இந்தப் பிரச்சினை இங்கு மட்டுமல்ல அநேகமாக எல்லா நாடுகளிலும் இருக்கும் ஒன்றுதான். வெளிநாடுகளில் இடம் பெறும் பல விவாகரத்துக்களுக்கும் இது போன்ற பிரச்சினைகள் தாம் முக்கிய காரணங்களாகின்றன.

அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மன், சுவீடன் போன்ற நாடுகளில் தம் கணவர் குடும்பப் பொறுப்பில் பங்கு கொள்வதில்லை என்பதற்காகத் தோன்றிய பிரச்சினைகள் முற்றி அவை நீதிமன்றம் வரை வந்துவிடுகின்றன. அந்த நாடுகளில் நடத்தப்பட்ட மதிப்பீடுகளின் படி கணவன் மனைவி இருவரும் சேரந்து வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்ளும் குடும்பங்களில் 99 சதவீதம் விவாகரத்து கோரப்படுவதில்லை என்ற உண்மை புலனாகியுள்ளது.

அநேகமாக விசாரணைக்கு வரும் விவாகரத்து வழக்குகளில் பெரும்பாலானவை கணவன்மாருக்குக் குடும்ப நலனில் அக்கறை செலுத்தாமை, வீட்டு வேலைகளை செய்ய மனைவி ஒத்துழைப்பு நல்காமை போன்ற காரணங்களே கூறப்படுகின்றன.

இன்று மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களும் கலாசாரமும் பரவலாக நம் பண்பாடோடு கலந்து கொண்டிருக்கின்றன.

இவ்வேளையில் விவாகரத்து என்னும் பயங்கர பூதம் நம்மத்தியில் தலைகாட்ட விடாது கணவன் மனைவியின் குணத்தைத் தெரிந்து ஒருவருக்கொருவர் உதவி செய்வதைத் தாழ்வாகக் கருதாமல் இல்லறம் என்ற வண்டியை இனிதாக செலுத்த எல்லோரும் முன்வர வேண்டும்.

"வேலைக்குச் சென்று வீடு திரும்பும் போது மேசையில் காப்பி இருக்க வேண்டும்" எனக் கட்டளையிடும் கணவன்மார் தன்னைவிடப் பாடுபடும் தன் மனைவியரைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அவளும் ஒரு ஜீவன்? அவள் வெறும் வேலை செய்யும் இயந்திரம் அல்ல என்பதை உணரந்து மனைவியின் சகல வேலைகளிலும் கணவர் தன்னால் முடிந்தவரை ஒத்துழைப்பு நல்கினால் மணவாழ்வில் மகிழ்ச்சிக்குப் பஞ்சமே ஏற்படாது.

சிந்தாமணி 07 . 03. 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகங்களைப் பேணுங்கள் நலமுடன் வாழ்வீர்கள்

விரல்களுக்கு நகங்கள் அழகைக் கொடுக்கின்றன. கவர்ச்சியையும் கொடுக்கின்றன.

இதனால் பெண்கள் விரல் நகங்களை நீளமாக வளர்த்தும் கச்சிதமாக வெட்டியும் அழகுப் படுத்திக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் விரல் நகங்களுக்கு பொலிஷ் போட்டு வண்ண வண்ண நிறங்களில் கியூடெக்ஸ் பூசிக் கொள்வார்கள். முஸ்லிம் மாதரோ மருதாணி இட்டுத் தங்கள் நகங்களை அழகு படுத்திக் கொள்கிறார்கள்.

சாதாரணமாக நகம் இளஞ்சிவப்பு கலந்த வெள்ளை நிறமானது. விரல்களின் நகங்கள் நோயின் காரணமாகவே சில மாற்றங்களை அடைகின்றன. இதனை மருத்துவ நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

உடலில் ஏற்படும் நோய்களை அடையாளம் காட்ட நம் நகங்கள் உதவுகின்றன. பீடிக்கும் நோய்களையும், அதன் பின்னர் நோய்களின் சுவடுகளையும் நம் நகங்கள் பிரதிபலிப்பதுண்டு.

நமது கைவிரல் நகங்களும், கால் விரல் நகங்களும் நமக்கு எத்தனையோ ரகசியங்களை எடுத்து இயம்புகின்றன.

நகங்கள் உடலின் மாற்று உருவங்கள் எனலாம்.

உடலில் அவ்வப்போது ஏற்படும் கோளாறுகளை நகங்கள் காட்டிக் கொடுத்து விடுகின்றன. நகங்களில் உண்டாகும் புள்ளிகள், கோடுகள், பள்ளங்கள், நிறமாற்றங்கள் என்பவற்றைக் கொண்டு நமது உடல் ஆரோக்கியத்தையும், உடல் நலக்கேட்டையும் அறியலாம்.

பொதுவாக நமது நகங்கள் வாரத்திற்கு ஒரு மில்லி மீட்டர் வீதம் வளர்கின்றன. பெண்களை விட ஆண்களுக்குத் தான் நகம் மிக வேகமாக வளர்கின்றது. இதன் வளர்ச்சி குன்றினால் உடம்பில் ஏதோ ஒரு நோய் இருக்கிறது என்றுதான் கருத்தாகும்.

நகத்தில் குறுக்குவரிகள் விழுந்திருந்தால் மலேரியா, டைபோயிட் காய்ச்சல், தட்டம்மை நோய் என்பன ஏற்படும் என்று அர்த்தமாம்.

சரும நோய்த் தொல்லைகள் இருந்தால் நகம் கொம்பு போல வளைந்து கடினமாக இருக்கும்.

நகத்தின் முனை சற்று வளைந்திருந்தால் காச நோய்க்கு அறிகுறி என்றும் சொல்வதுண்டு.

இரத்த ஓட்டம் பலவீனமடைந்திருந்தாலும் நகங்கள் வளைந்திருக்கும். நரம்பு நோய், இரத்தம் சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கு நகம் வெளுத்திருக்கும். அத்தோடு நகத்தில் வெள்ளைப் புள்ளிகளும் இருக்கும்.

நகத்தின் மத்தியில் குழி விழுந்திருந்தால் இரத்த சோகை நோயின் அறிகுறியாகும். பெரும்பாலும் இப்படி பெண்களுக்குத் தான் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்சியம் குறைந்தவர்களுக்கு நகங்கள் கண்ணாடி போல் பளிச் சென்று இருக்கும். இரத்தம் சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கு நகத்தில் சிவப்புப் புள்ளிகள் காணப்படும். இருதய நோய் உள்ளவர்களுக்கு நகங்களில் நீலம் படர்ந்து காணப்படும்.

நகங்கள் வெளுத்தும் நீண்டும் இருந்தால் இவர்கள் மனநோயாளராக இருப்பர். நகம் உறுதியிழந்து ஆட்டம் கண்டுவிட்டால் அது அவர்களது உடலின் ஆரோக்கியமற்ற தன்மையையே காட்டுகிறது.

நகங்களில் ஏற்படும் மாறுதல்கள் நமது உடலில் ஏற்படப் போகும் நோய்களைப் பற்றிய அறிகுறிகளாகவே இருக்கின்றன.

ஆனால் இன்றைய நாகரிக மோகத்தால் மூழ்கியுள்ள பெண்கள் தங்களது அலங்கார சாதனங்களைப் பயன்படுத்தி பல நிற கியூடெக்ஸ் வகைகளை நகங்களுக்குப் பூசிக் கொள்கிறார்கள்.

இதனால் மேற்கூறிய நோய் அறிகுறிகளை அறிய முடியாமல் போய்விடுகின்றது. அதேவேளை மேற்படி கியூடெக்ஸ்களில் கலக்கப்படும் ரசாயனப் பொருட்களின் மூலம் பெண்களின் நகங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என அண்மையில் ஒரு ஆராய்ச்சியில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனவே அது விஷயத்தில் பெண்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கண்ட கண்ட பொலிஷ் வகைகளை உபயோகித்து நங்கையர் தமது உடலின் நலத்தை கெடுத்துக் கொள்ளக் கூடாது அல்லவா?

பெண்களில் மேலும் சிலர் தங்களது நகங்களை நீளமாக வளர்த்து வருகிறார்கள். நகங்களை வளர்ப்பது நல்லதல்ல. ஆனால் அவற்றில் அழுக்கு புகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இல்லையேல் நகங்களில் சேரும் அழுக்குகள் நம் உணவோடு சேர்ந்து பல தொற்று நோய்களை உண்டாக்கிவிடும்.

நகங்களைப் பேண மறவாதீர்கள். சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். அதுவே நாம் உடல் நலம் பெற உதவும் என்பதை மறந்து விடாதீர்கள்.

சிந்தாமணி 23.01.83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருநாள் தினத்தன்று பெண்களின் பெரும்பணி

ஈகைத் திருநாளாம் "ஈதுல் பித்ர்" பெருநாள் இன்று புலர்ந்து விட்டது. புண்ணியம் பூத்துக் குலுங்கிய கண்ணியமிக்க ரமழான் எம்மை விட்டு பிரியா விடை பெற்றுக் கொண்டது.

ஒரு மாத காலமாக சன்மார்க்க பயிற்சியில் சலிக்காது எம்மை ஈடுபடுத்திய சங்கைமிகு ரமழானை நாம் "ஸலாம்" கூறி வழியனுப்புவோம்.

கடந்த ஒரு மாத காலமாக இந்த புனித ரமழான் எம்மிடையே ஏற்படுத்திய ஏற்றமிகு நற்கருமங்கள் பல. நாட்கணக்கில் தொழுகையை மேற்கொள்ளாத எமது தாய்மார், சகோதரிகள், தங்கைமார் மற்றும் தம்பிமார் அனைவருக்கும் ஐவேளை தொழும்படி ஞாபகப்படுத்தியது இந்த ரமழான். ஏற்கனவே ஐவேளை தொழுகையை மேற்கொள்ளும் எம்மில் அநேகர் "சுபஹு" தொழுகையை தொழத் தவறி விடுகின்றனர். ஆனால் தப்பாமல் இதனை முப்பது நாளும் தொழ வாய்ப்பளித்தது புனித ரமழான். சுபஹு தொழுகை மட்டுமன்றி, "தஹஜ்ஜத்" தொழுகையை "தஸ்பீஹ்" தொழுகை மற்றும் "தராவீஹ்" தொழுகை போன்ற சுன்னத்தான தொழுகையிலும் ஈடுபட வழி சமைத்தது இந்த வளமான ரமழான்.

நல்லமல்களை புரிவதற்கு பயிற்சி அளித்து எம்மைப் புடம் போட்ட தங்கமாக மாற்றியமைத்தமைக்காக இன்று நாம் இந்தப் புனித "ஈதுல் பித்ர்" பெருநாளைக் கொண்டாடுகிறோம்.

இந்த பெருநாள் தினத்தில் பெண்களாகிய நாம் திடசங்கற்பம் பூண வேண்டிய பல விடயங்களுண்டு. "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை" என்பார்கள்.

ஆம்! "இல்லாள்", "இல்லத்தரசி" என்றெல்லாம் போற்றப்படும் பெண்கள் குறிப்பாக தாய்மார் இறை "பக்தி" யை நிறை "சக்தி"யாக கொண்டியங்க வேண்டும்.

சமுதாய, சன்மார்க்க நெறிமுறைகளை பேணுபவர்களாக திகழ்ந்தால் தான் அவளது பிள்ளைகளும் கணவனும் அதனையே பின்பற்றுவர். அது மாத்திரமன்றி பெண்கள் வீட்டின் நிலைக் கண்ணாடியைப் போன்றவர்கள். ஆகவே, பெண்கள் இதனை உணர்ந்து செயல்பட வேண்டும்.

புத்தாடை புனைந்து, சத்தான உணவு சமைத்து பெருநாளை பேருவகையுடன் கொண்டாடுவதுடன் பெண்கள் பணி முடிந்து விடாது.

"உம்மஹாத்துல் மூ.ஃ.மீனின்" (விசுவாசிகளின் அன்னையர்) என்று போற்றப்படும் நபிகள் நாயகத்தின் மனைவியர், "மாதர்களின் திலகம்" என்று போற்றப்படும் ஹஸரத் பாத்திமத்துஸ் ஸுஹ்றா (ரலி) மற்றும் ஸஹாபாப் பெண்மணிகள், போன்றோர் வாழ்ந்து காட்டிய வளமான வாழ்க்கை வழிமுறைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிதையர்களாகிய நாம் நலமுடன் பின்பற்ற வேண்டும்.

அயலாரை நேசிக்கும் பண்பும் அரிவையரிடம் கண்டிப்பாக வளர வேண்டும். "அயல் வீட்டார் பசித்திருக்க தாம் மட்டும் வயிறு புடைக்க உண்பவர் உண்மை மூ.ீமின் அல்லர்" என்றார்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள். ஆகவே அன்பளிப்புகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதும் சிறந்த பண்பாகும்.

பெருநாள் தினத்தில் இதர பெண்களிடையே கோபங்கள் கலைந்து சமாதானம் ஏற்பட வேண்டும். இதற்கு ஒரே வழி சகல பெண்களும் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதேயாகும். ஒரே இடத்தில் ஒன்று கூடும் "பாக்கியம்" கிடைக்கிறது. "ஈதுல் பித்ர்" தொழுகையை தொழுது முடிந்த பின்னர் சகல பெண்களும் "ஸலாம்" கொடுத்து ஒருவரையொருவர் "முஸாபஹா" செய்து கொள்ள வேண்டும். இதனால் கோபம் மறந்து குதூகலம் பிறக்கும்.

"குடி உயர கோன் உயரும்" என்பார்கள். ஆம்! பெண்கள் வீட்டில் அமைதியாக ஐக்கியமாக வாழ்ந்தால்தான் நாட்டிலும் அமைதி ஏற்பட வாய்ப்பாகும்.

தன் கணவன்மார்களையும் பிள்ளைகளையும் ஒழுங்காக சன்மார்க்க நெறியில் ஈடுபடுத்தி தானும் அவ்வழியே பயணம் சென்றால் வீட்டில் மட்டுமல்ல, நாட்டிலும் கூட சமாதானத்தென்றல் வீசிட தடையேதும் இருக்காதல்லவா?

ஆகவே சமாதான இளந்தென்றல் இனிதே வீசிட, இல்லத்தரசிகள் தங்களின் பணியை செவ்வனே செய்வதற்கு இன்றைய பெருநாள் தினத்தில் உறுதி பூணட்டும். இதுவே அனைவரினதும் பேரவா!

"ஈத் முபாரக்"

சிந்தாமணி 07.05.89

# இல்லறச் சோலையில் இளந்தென்றல் வீசிட......

இல்லறச் சோலையில் இதமாக அடியெடுத்து வைக்கும் ஒரு மனைவியால் மட்டுமே அங்கு இளந்தென்றல் வீச முடியும்.

ஒரு குடும்பத்தில் இல்லாளின் பொறுப்புக்கள் மகத்தானவை. உலகப் போக்கிலே அவர்கள் செய்யும் காரியங்கள் சமூகத்தின் ஜீவனுக்கே அவசியம் தேவைப்படுவன என்பதை ஒவ்வொரு இல்லாளும் அறிந்திருக்க வேண்டும்.

வாழ்க்கை என்பது போராட்டம். அப்போராட்டத்தை நன்நெறி மூலமே நாம் எதிர் கொள்ள வேண்டும். இல்லற வாழ்வில் நுழையும் ஒவ்வொரு பெண்ணும் அடக்கத்தின் சின்னமாக, பொறுமையின் சிகரமாக திகழ வேண்டும். வீட்டுப் பிரச்சினைகள் வீதிக்கு வராமல் கவனித்துக் கொள்ள வேண்டியது அவளது பொறுப்பாகும்.

வேலை தவிர்ந்த ஓய்வு நேரங்களில் பக்கத்து வீட்டாருடன் வம்பளந்து கொண்டிருப்பது நற்பலனை எப்போதும் தருவதில்லை. மாறாக வீண் விபரீதங்களையே அது ஏற்படுத்தும். எனவே அப்படியான செயல்களை நாம் நிச்சயம் தவிர்க்க வேண்டும்.

மாலை நேரங்களில் மனதுக்கினிய நூல்களைப் படிக்கலாம். காலை எழுந்த உடன் கனிவு தரும் வேத நூல்களை கனிந்துருகி ஓதலாம். இது இல்லத்திற்கே மெருகூட்டும் செயலாகும்.

இறைவன் நமக்கு அளவிட்டுத் தந்த செல்வமே போதுமென்ற மன நிறைவுடன் குடும்பத்தை நடத்திச் செல்வது இல்லாளின் தனிச் சிறப்பு.

தன்னைவிட தன் கணவரின் உரிமைகளை அவள் மதிக்கப்பழக வேண்டும். எக்காரணம் கொண்டும் கணவரை வெறுக்கவோ, புறக்கணிக்கவோ கூடாது. கணவரோடு எதிர்வாதம் பேசவும் கூடாது. மாறாக மனதுக்கு உகந்த விதத்தில் பணியாற்றினால் நிச்சயம் குடும்பத்தில் பிரச்சினை ஏற்படாது.

இல்லாள் இவ்வாறு நடந்தால் இல்லறச் சோலையில் இளந்தென்றல் வீச முடியும்.

கணவரின் மகிழ்ச்சியைத் தன் மகிழ்ச்சியாக கருதும் மனப் பாங்கு இல்லத்தரசிக்கு இன்றியமையாதது.

இல்லறத்தில் இணக்கமும், பாசபிணைப்பும் மலர்ந்தால் தானே நல்லறத்தின் பக்கம் மக்கள் மனமும் நகர்ந்து செல்லும்?

இல்லறச் சோலையை இன்பியல் நாடகமாக்குவது இல்லாளின் கடமையல்லவா?

தாய்க்குலத்தின் மேன்மையை தரணியில் தழைத்தோங்கச் செய்ய வேண்டியது ஒவ்வொரு இல்லாளினதும் தலையாய கடமையாகும். வாழ்க்கை ஒரு விளையாட்டுப் போன்றது. அதில் வெற்றியும் தோல்வியும் போல் இன்பமும், துன்பமும் இணைந்திருப்பது இயற்கை. இவை தவிர்க்க முடியாதவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது வந்தாலும் வரட்டும் என்ற நெஞ்சத்துடன் வாழ்க்கைப் போராட்டத்தை எதிர் கொண்டால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

புயுற் காற்றுக்குத் தலைசாய்த்து, பின்னர் காற்று ஓய்ந்ததும் தலை நிமிர்ந்து நிற்கும் நாணலைப் போன்று இல்லற வாழ்க்கையில் பகைமையையும், எளிமையையும் புன்னகையால் வென்று வாழ்க்கையை வளம் சார்ந்த மலர்ச் சோலையாக்க முயற்சிக்கவே நாம் முயல வேண்டும்.

அறத்தைப் போற்றி வளர்க்க வேண்டியவை இல்லாளின் கரங்கள். ஆத்மீகத்திலும், அறிவியலிலும் ஆணுக்கு சரி நிகர் சமமாயுள்ள பெண், தன் உடல் அமைப்பாலும் தாய்மைப் பண்பாலும் சிறப்பான பணிகளை ஆற்றுகிறாள். "மெல்லியல்" என்ற சிறப்பை பெற்ற அவள் தனது மென்மையால் கல்லைப் போன்ற இதயங்களையும் அன்பு வித்தைத் தூவி ஆலமரமாகச் செழித்தோங்கி வளர்க்கக் கூடியவளும் அவள்தான்.

வீட்டுக்கு வரும் யாசகன் கூட, "அம்மா" என்று அழைத்தே யாசகம் கேட்கிறான்.

ஒரு குடும்பத்தின் நடுநாயகமாய் விளங்கும் பெண், மார்க்க ஞானமுடையவளாகவும், சமயக்கிரியைகளை அனுசரிப்பவளாகவும் இருந்தால் தான் தன் குடும்பத்தை நேர்வழியில் இட்டுச் செல்ல முடியும்.

இல்லறச் சோலையில் இளந்தென்றல் வீசி இனிய மணம் கமழ இவை உதவும் என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை.

**சிந்தாமணி 24.03.82**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடுகளை மட்டுப்படுத்துங்கள்

கட்டுப்பாடுகளும், சட்டங்களும் மனிதனுடைய வாழ்க்கைக்கும் அவசியமானவை. வாழ்க்கை சீராக அமைவதற்கும் இவை தேவை. ஆனால் அது அளவுக்கு மீறிவிடக் கூடாது.

வாழ்க்கையில் எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் போன போக்கில் சென்று கொண்டிருந்தால், படுகுழியில் விழ வேண்டிய நிலைதான் ஏற்படும்.

நம்மைக் கண்டிப்பதற்கு யாரும் இல்லாவிடின் நாம் நெறி தவறிவிடுவது இயல்பு.

மனிதன் நன்னெறியில் வாழ வேண்டும் என்றுதான் எல்லா சமயங்களும் போதிக்கின்றன. குழந்தைகள் முதல் முதியோர் வரை யாவரும் கட்டுப்பாடுகளை மீறும் போது பாதிக்கப்படவே செய்கிறார்கள். தவறான வழிகளில் செல்கின்றார்கள்.

எனவே மனிதனுடைய வாழ்க்கைக்கு - குறிப்பாக பெண்களுக்குக் கட்டுப்பாடு கட்டாயம் தேவைதான். ஆனால் எந்த நிலையிலும் அது எல்லை மீறி விடக் கூடாது.

முதலில் குழந்தைகளை நாம் எடுத்துக் கொண்டால் அவர்கள் அறிவில் குறைந்தவர்கள்.

அவர்களுக்கு மற்றவர்களின் உதவி அவசியம் தேவைப்படுகிறது. ஆனால் குழந்தை எதைச் செய்தாலும் அவர்களிடம் அப்படி செய்யாதே, இப்படிச் செய் என சதா தடுத்து வந்தால் குழந்தையின் உடல் உள வளர்ச்சி நாளடைவில் பாதிக்கப்படுகின்றது.

சில சமயங்களில் நேராகக் கண்டிக்கலாம். ஆனால் அநேக சமயங்களில் மறைமுகமாகத் தான் அவர்களைக் கண்டிக்க வேண்டும். அதிகமான கட்டுப்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.

ஏனெனில் வீட்டில் அதிக கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகும் பிள்ளை, வெளியில் அட்டாகாசம் புரிவதற்கு தயங்கமாட்டான்.

காரணம் தனது உணர்ச்சியை வீட்டில் வெளியிட முடியாத நிலை அவனுக்கு ஏற்படுவதுதான்.

அளவுக்கு மிஞ்சிய கட்டுப்பாடுகள் குழந்தையை மட்டுமல்ல பெரியவர்களையும் கூட இரட்டை வேடத்தில் நடிக்க வைத்துவிடும்.

உளநூல் கருத்துப்படி நோக்கினால், மிதமிஞ்சிய கட்டுப்பாடுகள் பாதகமான விளைவுகளையே தருகின்றன.

குழந்தைப் பருவம் கடந்து வாலிபப் பருவம் அடையும் போது கட்டுப்பாடுகளின் கொடுமைகளை பிள்ளை உணர்கிறான். அந்த வயதில் உடலில் மாற்றங்கள் உள்ளத்தில் ஒரு உத்வேகம் என்பன தோன்றுகின்றன.

இப்பருவத்தில் பெற்றோர், பிள்ளை செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் குறுக்கிடும் போது அந்தப் பிள்ளை பொறுப்புணர்ச்சி அற்றவனாகி விடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் தனது காரியங்களைச் செய்வதற்கு மற்றவர்களை குறிப்பாக அன்னையை நாடிய அவன் தொடர்ந்து அப்படியே இருந்து விடுகின்றான்.

மொத்தத்தில் தன்னம்பிக்கை அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு விடுகிறது. இதைவிட பாதகமான விளைவுகளுக்கும் அவன் உள்ளாக நேரிடுகிறது.

தானாகவே இயங்க வேண்டுமென எண்ணும் போது தன்னுடன் மற்றவர்களின் நிலையை ஒப்பிடும்போது அவர்களுக்குள்ள சுதந்திரம் தனக்கில்லையே என்ற ஏக்கம் ஏற்படுகிறது. இதனால் அவன் மனதில் தாழ்வு மனப்பான்மை குடிகொண்டு விடுகின்றது.

மனதில் போராட்டம் எழும் அதே வேளையில் அவனது உடல் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது.

இந்த நிலைமை குடும்ப வாழ்விலும் தொடர்ந்து வருவதுண்டு.

குடும்பத்தில் கணவன் அன்றி மனைவி விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும். இதைவிட்டு ஒருவர் மற்றவரின் ஆளுமையின் முக்கியத்துவத்தை உணராமல் எதிலும் தலையிட்டும் வீணாக கேள்விகளைக் கேட்டும் காரணமின்றி கட்டுப்பாடுகளை விதித்தும் வந்தால் குடும்பத்தில் பரஸ்பர அன்புக்கே இடமில்லாமல் போய்விடும்.

கணவன் கட்டுப்பாடு விதித்தால் தன்மீது அவருக்கு நம்பிக்கை இல்லை என்ற எண்ணம் மனைவிக்கு ஏற்படுகிறது. இதனால் குடும்பத்தில் அமைதி குன்றி பிணக்கு ஏற்பட வழி பிறக்கிறது.

கட்டுப்பாடுகள் அதிகம் இருக்கும் இடத்தில் களவும் பொய்யும் நிச்சயம் இருக்கும் என துணிந்து கூறலாம்.

மிதமிஞ்சிய கட்டுப்பாடுகளை விட அன்பான அறிவுரைகள் அதிக வலிமை வாய்ந்தவை, தவறுகளை திருத்துவதற்கு நிச்சயம் அவை உதவும்.

சிந்தாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியை வலியுறுத்திய நபிகள் நாயகம் (ஸல்)

## அன்னாரின் பிறந்த தினத்தில்

## அரிவையரின் திடசங்கற்பம் இதுவாகட்டும்.

கல்வியைத் தேடிக் கற்பது முஸ்லிம்களான ஆண், பெண் இருபாலாரதும் கடமையாகும் என்று கல்வியின் முக்கியத்துவத்தை உலகத்தோருக்கு உணர்த்தியவர் தான் காருண்ய நபி முஹம்மது (ஸல்) அவர்கள்.

அறியாமை என்னும் இருள் அகற்ற அரேபிய மண்ணிலே அறிவுச் சுடராக அருள் ஜோதியாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவதரித்தார்கள்.

அன்னாரின் அவதாரத் தினம் நாளை மலர்கிறது. அகிலம் போற்றும் அண்ணல் நபியின் அவதாரத்தினத்தை கொண்டாடும் முகமாக நாட்டின் நாலா பக்கங்களிலும் மீலாத் விழாக்கள், மௌலூது மஜ்லிஸ்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

ஆம்! பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளை கொண்டாடத் தயாராகும் இவ்வேளை அன்னார் கல்விக்கு கொடுத்த மகத்துவம் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பெண்ணுக்கு உரிமையளித்த பெருமானார் (ஸல்) பெண் கல்வியின் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள். இதனால் தான் அவர்கள் ஆண்களும் பெண்களும் அறிவை பெறுவது அவசியம் என்று கூறியிருக்கிறார்கள்.

"சீனா சென்றேனும் சீர் கல்வி தேடு" என்றும் சங்க நாதம் எழுப்பினார்கள் சங்கை நபி நாதர் அவர்கள்.

ஆசிய நாடுகளிடையே ஆகக் கூடுதலான எண்ணிக்கையில் கல்விமான் உள்ள நாடாக இலங்கை கணிக்கப்படுகிறது.

ஆனால் பாடசாலைகளில் தற்போதைய நிலை தொடருமானால் எதிர்காலத்தில் கல்விமான்களை எதிர்பார்க்க முடியாத ஒரு துரதிஷ்ட நிலை உருவாகும்.

இந்த கசப்பான உண்மையை எமது இன்றைய இளம் சந்ததிகள் உணர வேண்டும். உணராவிடில் பெற்றோர் குறிப்பாக தாய்மார் தமது பிள்ளைகளுக்கு இதனை உணர்த்த வேண்டும்.

கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அடிக்கடி விளக்க வேண்டும். அவ்வாறே பெற்றோரும் தம் பிள்ளைகளுக்கு இதனை சுட்டிக் காட்ட வேண்டும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது ஓர் பழமொழியாகும். எனவே மாணவர்கள் பருவத்தே பயிர் செய்ய வேண்டும். படிக்கும் பருவத்தை வீணாக பாழாக்கினால் பின்னர் வருந்த நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி இதயத்துக்கு பிரகாசத்தை கொடுக்கிறது. கண்களுக்கு ஒளியை அளிக்கிறது. கற்றவன் என்ற சிறப்பை தருகிறது. நல்லோர் என்ற பாராட்டை பெற்றத் தருகிறது. இம்மை மறுமை இரண்டிலும் உயர்வையே தருகிறது.

கல்வியின் உயர்வு பற்றி ரஸுலே கரீம் (ஸல்) அவர்கள் கூறிய அருள் மொழிகள் தான் இவை.

இந்த அருள் மொழிகளை நாம் அசட்டையாக கருதக் கூடாது. கல்வி என்ற இறவாச் செல்வத்தின் மூலம் தான் நாமும் நம் சமுதாயமும் நலன் பெற முடியும். எத்தகைய பிரச்சினைகளிலும் நாம் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

"தலைகுனிந்து படிப்பதெல்லாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே"

இன்று எமது இளம் சந்ததியினர் கல்வியில் காட்டும் ஆர்வம் மிகவும் குறைவாகும். இன்றைய கால கட்டத்தில் படிக்கும் மாணவர்களுக்கு எவ்வளவோ சலுகைகள் உண்டு. அவர்கள் அந்தச் சலுகைகளை துஷ்பிரயோகம் செய்கின்றனர். கல்வியில் கண்ணும் கருத்துமாக இருப்பவர் எம்மில் சிலரே உள்ளனர்.

இந்நிலை மாற வேண்டும். உலகம் உய்ய வந்த "உம்மி" நபியான உத்தம நபி (ஸல்) அவர்கள் உரைத்த பொன்மொழிக்கேற்ப எமது கண்மணிகள் கல்வியில் கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

விளையாட்டு, நாடகம், சினிமா போன்ற துறைகளில் இளைஞர்கள் இன்று தமது கூடிய கவனத்தை செலுத்தி வருகின்றனர். இத்தகைய நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுத்து முதலில் அவர்களின் கருத்தை கல்வியின் பால் திருப்பி விடுவது பெற்றோரினதும் ஆசிரியரினதும் பெரியோரினதும் சமுதாய நலன் விரும்பிகளினதும் கடமையாகும்.

பொருளாதாரம், அரசியல் சமய சமூக கலாசார பாரம்பரியங்கள் அனைத்திலும் நாம் நிறைவு பெற்றவர்களாய் வாழ அடிப்படை தேவையாக இருப்பது கல்வியே.

ஆகையால் மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வியைக் கற்க வேண்டும்.

வாழ்க்கையை வளமுள்ளதாக அமைக்க வழிவகுப்பது கல்வியே. ஆகவே எமது மாணவர் ஆர்வத்துடன் கல்வியைக் கற்று அதன் மூலம் நாமும் நம் சமூகமும் நாடும் நலம் பெற வழியமைக்க வேண்டும்.

மறைதந்த இறை தூதரான மாநபி (ஸல்) அவர்களின் மலர்ந்த தினத்தை முன்னிட்டு நாடெங்கிலும் மீலாத் விழாக்கள் நடைபெறும்.

அத்துடன் நாட்டின் சமூக நலனுக்காக உழைக்கும் சில இயக்கங்களும் மீலாத் கமிட்டிகளும் வறிய பிள்ளைகளின் நலன் கருதி உயர் கல்வி புலமைப் பரிசில்களையும் வழங்கி வருகின்றன.

மாணவர் சமூகம் இத்தகைய சலுகைகளை துஷ்பிரயோகம் செய்யாது கல்வியிலே தமது கவனத்தை செலுத்த முன்வர வேண்டும்.

நாளைய மன்னர்களாகக் கூடிய இன்றைய எமது இளம் சந்ததியினர் தமக்கு தேவையற்ற விடயங்களில் ஈடுபடாத சிறந்த கல்விமான்களாக வர முயலவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணை ஒரு இயந்திரமாக ஆண்கள் கணிக்கலாமா?

## தாய்குலத்தின் பெருமை பாதுக்காக்கப்பட வேண்டும்.

"இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும் இயற்கை மணமிருக்கும் பருவத்திலே: பெண் இல்லாமல் சுகமில்லை உலகத்திலே" என்று பெண்ணின் பெருமை பற்றி பெரிதாகப் பாடினார் பெருங்கவிஞர் ஒருவர்.

கவிஞன் பாடுவதும், கலைஞன் நாடுவதும், இளைஞன் தேடுவதும் பெண் அல்லவா? பெண் இயற்கையின் சீதனப் பரிசல்லவா? என்பதும் அதே கவிஞரின் அழகிய கூற்றுக்களே!

ஆம்! இவ்வாறு பெண்ணின் பெருமையைப் பற்றி பாடாத புலவர்களுமில்லை எழுதாத எழுத்தாளர்களுமில்லை. அவளின் அருமைகளைப் பற்றி கூறாத அறிஞர்களுமில்லை.

ஆனால் இத்தகைய பெருமைக்குரிய பெண்குலத்தின் இளம் மாதர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஏராளம்! தாராளம்!

தீர்வு காண முடியாத: தீர்வு காணப்படாத இப்பிரச்சினைகளினால் இளம் மாதர்கள் பலரது வாழ்வு மலர்ந்தும் மலராததை போல் இருக்கின்றமையை எம்மால் ஜீரணிக்க முடியாதுள்ளது.

காலமெல்லாம் கண்ணீரைத் தண்ணீராகக் குடித்துக் கொண்டிருக்கும் இந்த ஏழை மாதர்களின் வாழ்வுக்கு என்றுதான் விடிவு கிட்டுமோ?

அதுதான் இன்னும் விடை காணப்படாத வினாவாக இருக்கிறது.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி வருடம் என்னும் குழந்தையைப் பிரசவிக்கின்றன, ஆனால் வனிதையரின் வாழ்வில்தான் வசந்தம் பிறந்ததாக இல்லை.

நாட்டிலே எத்தனையோ தனவந்தர்கள் சீர்திருத்தவாதிகள் இலக்கியவாதிகள் பலர் இருக்கின்றனர். ஆனால் நல்லொழுக்கமுள்ள, பண்பான ஒரு பெண்ணை இனங்கண்டு பணமின்றி மணமுடிக்க இளகிய மனம் படைத்த எவரும் முன் வருவதாக இல்லை.

கால ஓட்டத்தில் கன்னியரின் நினைவுகள் கனவுகளாக கலைந்து போகின்றன.

இதனால் வாழ்க்கையிலேயே வெறுப்படையும் ஒரு சில கன்னியர் தமது வாழ்க்கைக்கே உலை வைக்க, தற்கொலையை நாடுவதுண்டு என ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இயற்கையிலேயே இளகிய மனம் படைத்தவர்கள்தான் பெண்கள். அத்தகைய இள மனசுக்குள் எத்தனை நாட்களுக்குத்தான் ஏக்கச் சுமைகளை சுமக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. அது அணு குண்டை போன்றது." என்பார்கள் "பொறுமை" என்னும் அணு குண்டு "கவலை" என்னும் ஆயுதத்தால் சதா தாக்கப்படும் போது அது குமுறி வெடித்து பெரும் சிதறல்களாகிறது.

கல்லுக்குள் ஈரம் போல் நெஞ்சுக்குள் பாசம் நிறைந்திருந்தால் இன்றைய இளம் யுவதிகளின் இனிய இல்லற வாழ்க்கை வெறும் சூனியமாகாதல்லவா?

அத்தகைய சீர்திருத்த செம்மல்கள் நம் மத்தியில் குறைவாகவே காணப்படுகின்றனர். இத்தகையோரை காண்பது எதிர்காலத்தில் அரிதிலும் அரிதாகி விடலாம். நிலைமை அவ்வளவுக்கு மோசமாக உள்ளது.

சமூக சீர்திருத்தவாதிகள் என தம்மை பெயர் சூட்டிக் கொள்ளும் சிலர் வெறும் சாக்கடை சல்லடைகளாகவே இருக்கின்றனர்.

"ஊருக்கடி உபதேசம் - உனக்கல்லடி" எனக் கூறிக் கொள்ளும் இவர்கள், பூக்கடை சிற்பிகளாக புனிதர்களாக மாறும் நாள் எப்போதோ,?

வெறும் நடைப்பிணமாக சதைப் பிண்டமாக காலம் கழிக்கும் எமது கன்னியர், தமக்கு என்றுதான் விமோசனம் கிடைக்குமோ என்று ஏக்க பெருமூச்சு விட்ட வண்ணம் உள்ளனர்.

இந்த அரிவையருக்கு வாழ்வழிக்கும் ஆடவரோ இன்றும் ஏலம் போகின்றனர். இன்றைய உலக சந்தையில் பொருட்களின் விலை இமயமலையைப் போல் உயர்ந்துள்ளது.

அவ்வாறே, திருமணச் சந்தையில் ஏலத்தில் விடப்பட்டிருக்கும் ஆடவரின் விலையோ லட்சக்கணக்கையும் மிஞ்சி விட்டது. இந்நிலையில் ஏழைப் பெண்மணிகளின் நிலை என்ன? ஏழைப் பெண்மணிகள் காலம் எல்லாம் கன்னியர் தானோ?

தனியாக ஒரு வீடு, வீட்டுக்குத் தேவையான பொருட்கள், பெண்ணுக்கு தகுந்த ஆடை ஆபரணங்கள், ரொக்கப் பணமாக ஒரு தொகை சீதனம் இவ்வளவும் வழங்கினால் தான் இன்று பெரும்பாலான திருமணங்கள் நிச்சயமாகின்றன.

இந்நிலையில் ஒன்றுமே இல்லாத வனிதையருக்கு இல்லற வாழ்வின் இனிய சுகந்தம் இல்லாமல் போகின்றது. இவ்வாறு, வாழ வேண்டிய வயதில் வாழா வெட்டியாக வாழும் வஞ்சியரின் வாடும் நெஞ்சங்கள் அனந்தம்!

பெண் என்பவள் வெறுமனே வேலை செய்யும் ஒரு இயந்திரமல்லள், அவளும் ஓர் உயிருள்ள ஜீவன்தான், ஆகவே, இந்தப் பெண்குலத்தின் வாழ்வில் சூழ்ந்திருக்கும் சீர்திருத்தவாதிகள், சீக்கிரம் விழித்தெழ வேண்டும்.

இருள்மயமாக இருக்கும் இளம் கன்னியரின் வாழ்வில் திருமணம் என்னும் தீபத்தை ஏற்றக் கூடிய தூய பொறுப்பு காளையர்களையே சாரும் என்பதை உணர வேண்டும்.

கன்னியரின் நினைவுகள், காலமெல்லாம் கனவுகளாகாமல், அவர்களது வாழ்வில் வசந்தம் பொங்க, நல்ல மனம் படைத்த காளையர் இன்றே தமது பணிகளைச் செய்ய முற்படுவார்களாக.

இதனால் மங்கையரின் வாழ்வு மலருமன்றோ?

சிந்தாமணி 16/11/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக கவலைகளால் ஆயுள் குறையும் அபாயம்

துன்பம் அணுகாமல் இன்பமாக வாழ வேண்டும் என விரும்பாதவர்கள் எவருமே இல்லை. அதே வேளை அனுபவிக்காதவர்களும் எவருமிலர்.

துன்பம் வந்தால் தொல்லைகளும் மனக் குழப்பங்களும் தானாகவே வந்துவிடும்.

துன்பங்களால் பெரும்பாலும் பெண்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இயற்கையிலே இளகிய மனம் படைத்த மென்மையான சுபாவம் கொண்ட பெண்களைத் துன்பம் வாட்டும் போது, அதனை அவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை.

இதனால் பெண்கள் மனப் புழுக்கம் கொள்கிறார்கள். கண் கலங்குகிறார்கள். அவர்களின் இதயமும் பலவீனமடைகிறது. "அதிகம் கவலைப்படும் பெண்கள் குறைந்த வயதிலேயே இறப்பை எதிர்நோக்குகின்றனர். அவர்களது ஆயுள் அதிகம் நீடிப்பதில்லை" என அண்மையில் வெளிநாட்டு நிபுணர்கள் எடுத்த மதிப்பீடு ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

"அதிக கவலை ஆயுளைக் குறைக்கும்" என்ற அறமொழி இதன் மூலம் நிரூபணமாகிறதல்லவா?

எனவே மென்மையான இதயம் கொண்ட பெண்கள் இயன்றளவு பொறுமையை மேற்கொள்ள வேண்டும்.

நமக்கு ஏற்படும் துன்பம் என்னும் நோயைக் குணப்படுத்த நாமே சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

இன்பத்தால் கிடைப்பது ஆணவம், துன்பத்தால் கிடைப்பது அனுபவம். முழுக்க முழுக்க இன்ப வாழ்வு வாழ்ந்தவரும் இல்லை. காலமெல்லாம் துன்பத்திலே உழன்றவரும் எவருமில்லை.

ஓர் இன்பத்தை பெற வேண்டுமானால் ஒரு துன்பத்தை நுகர வேண்டி ஏற்படுகின்றது. இந்த உண்மையை நாம் உணர வேண்டும்.

இன்பமும் துன்பமும் ஈருருளைகளாக அமைந்த மிதி வண்டியே வாழ்க்கையாகும்.

"இன்பத்தின் ஒரு கதவு மூடும் போது மற்றொரு கதவு திறக்கப்படுகிறது, ஆனால் நாம் மூடும் கதவையே பார்க்கின்றோமே ஒழிய எமக்காக திறக்கப்படும் கதவை கவனிக்கத் தவறிவிடுகிறோம்" என்கிறார் ஹெலன்கெய்லர் என்பவர்.

வீணான எதிர்ப்புக்களே நமது துன்பத்துக்கு வழிகளாக அமைந்து விடுகின்றன. இதனை எவருமே மறுக்க முடியாது.

எதிர்பார்ப்பு ஏமாற்றமாகும் போது ஒரு பெண் துன்ப எல்லையை அடைகிறாள்.

இன்பத்தை பிறரிடம் சொன்னால் அது இரட்டிப்பாகிறது. அவ்வாறே துன்பத்தை பிறரிடம் சொல்லும் போது அதில் பாதி குறைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இன்பத்தை வரவழைக்கவும் துன்பத்தை துரத்தவும் எம்மிடமே வழி இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

மேலே பார், முன்னே செல், அகலநினை, ஆழ செயல்படு, துன்பம் வருகிறதா? போகிறதா என்று பார்!" என்கிறான் அறிஞன் எமர்ஸன்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்கிறார் வள்ளுவர்.

துன்பத்தின் மறுகரை இன்பந்தான். ஆனால் இன்பத்தைப் போல் துன்பத்தையும் வரவேற்க எவராலும் முடிவதில்லை. இது மனித இதயத்தின் பலவீனம். இதற்கு பெண்கள் மட்டும் விதி விலக்கல்லதான்.

எனினும் துன்பம் வரும் போது துவண்டு விடாது இயன்ற மட்டும் எதிர் நின்று துன்பத்தை விரட்டுவதே புத்திசாலித்தனம். நல்ல குடும்பமாதருக்கும் அதுவே சிறப்பு தருவதாகும்.

"பெண்ணுக்கு அணிகலன் பொறுமையாகும்" என்று கூறியுள்ளார்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள்.

எனவே பெண்களாகிய நாம் துன்பத்தில் பொறுமை, பேச்சில் இனிமை, நடத்தையில் நேர்மை போன்ற அணிகலன்களை பெற்று நல்வலிமைமிக்க வனிதையர்களாக வாழ முற்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிவையருக்கு ஆலோசனை வழங்கும் அமரகவி இக்பால்

ஒரு சமுதாயத்தின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் பொறுப்பாக இருப்பவர்கள் பெண்கள் தான். அதனால் தான் பெண்கள் சமுதாயத்தின் கண்கள் எனப் போற்றப்படுகிறார்கள்.

"கவிஞன் பாடுவதும், கலைஞன் நாடுவதும், இளைஞன் தேடுவதும் பெண்ணல்லவா? பெண் இயற்கையின் சீதனப் பரிசல்லவா" என்று கவித்தேன் ஒழுக, பெண்ணை பெருமைப்படுத்தி பண் இசைத்தார் கவியரசர் கண்ணதாசன்.

இந்த வகையில் தான் அமர கவி இக்பாலும் பெண்களுக்கென்றே சில அறிவுரைகளை எடுத்து இயம்புகிறார்.

சமுதாயத்தின் ஆணிவேராய்த் திகழும் பெண்களின் கடமைகள் என்ன என்பதையும் சிறப்புற விளக்குகின்றார் அவர்.

பெண்கள் சீருடனும், சிறப்புடனும் வாழ்ந்தால் தான் சமுதாயம் தழைக்க முடியும். அவர்கள் சீர்கெட்டு, நேர்மை தவறி, இறை நெறி மறந்து நவநாகரிக நாரீமணிகளாக வாழ முனைந்தால் நிச்சயம் நம் சமுதாயமே தாழ்வுறும். இதனை ஆணித்தரமாக எடுத்துரைத்தார் அல்லாமா இக்பால்.

"ஆண்மைத் தந்தியில் நாதம் எழுப்புவது பெண்மையாகும். அதுவே ஆணின் மானங்காக்கும் ஆடையுமாகும்" , "உலகம் என்னும் ஓவியம் பெண்ணினால் எழில் பெறுகிறது. அவளது இன்ப இசையால் வாழ்க்கைக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது" என பெண்களைப் பற்றி பெருமையாக கவி பாடினார் பெருங்கவிஞர் இக்பால்.

கண்ணாடி உடையும், முகப்பவுடரும், உதட்டுச் சாயமும் உயரிய பெண்களை ஆக்க முடியாது. நன்னடத்தையும், நாணப் போக்குமே நல்ல நங்கையருக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுக்கும் சாதனங்களாகும் என்பது அவரது வாதமாகும்.

"சூழ்ச்சி நிறைந்த இக்காலமானது உயர்ச்சி மிகுந்த ஒழுக்கத்தை அப்படியே ஜீரணித்துக் கொண்டிருக்கின்றது. அதனால் தான் இன்றைய பெண்கள் அகப்பார்வை இழந்து தீய வழியில் நடக்கிறார்கள்.

மகளே! காலத்தின் கொள்ளைப் பிடுங்கலில் சிக்கி விடாதே! கவனமாக ஒதுங்கி வாழ்வாயாக! சமுதாயத்தின் சக்திகள், சன்மார்க்கத்தின் பக்திகள் எல்லாம் மாதர்களின் மலர்க்கரங்களிடையே மறைந்து கிடக்கின்றன. இதனை மறந்திடாதே!" என அறிவுரை நல்குகிறார் கவிஞர்.

கவிஞர் இக்பால் இன்று நம்மிடையே இல்லை. எனினும் அவர் அன்று கூறிய அறிவுரைகள் எம் நினைவில் நிலைத்து நிற்கின்றன.

இக்பால் கண்ட இலட்சிய பெண்ணாக வாழ இன்றே இதயத்திடசங்கற்பம் பூணுவோம்!

**சிந்தாமணி**
**13.03.83**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தத்தை நித்தமும் பேணுவோம்

"சுத்தம் சுகம் தரும்" என்பது பழமொழி. நம் சுகவாழ்வுக்கு அடிப்படையானது சுத்தம்தான். அசுத்தமானது நோய் பரவுவதற்கு அடிப்படையாகின்றது. சுத்தமான வாழ்க்கை நோய்களைத் தடை செய்யும். எனவே சுத்தமான வாழ்க்கை வீட்டிலும், பாடசாலையிலும் தொடங்கி பின்பு படிப்படியாக சுற்றுப் புறத்திலும் கிராமத்திலும் பேணப்பட வேண்டும்.

முதலில் நாம் சுத்தத்தை பேணுவதற்குதவியான சில வழிமுறைகளை அறிந்திருத்தல் அவசியமாகும். ஒரு வீட்டிலே சமையல் அறையானது மிகவும் பிரதானமான பகுதியாகும். அதைச் சுத்தமாக வைத்திருப்பது அத்தியாவசியமாகும். இதில் பெண்கள் ஆகக் கூடுதலான கவனமெடுக்க வேண்டும். "ஆஸ்பத்திரியில் இருக்கும் டாக்டரைவிட, சமையல் அறையில் இருக்கும் பெண் முக்கியமானவள்" என்று ஆங்கிலப் பழமொழி ஒன்று கூறுகிறது. சமையலறையில் இருக்கும் பெண்களின் பணிகளின் முக்கியத்துவம் இந்த பழமொழியின் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது.

சமையலறையில் உள்ள சட்டி, பானை, அம்மி, கத்தி, தண்ணீர் குடம், விறகு மற்றும் உபகரணங்களை அவற்றுக்குரிய இடங்களில் மூடி வைத்து சமையலறைச் சுத்தத்தைப் பேண வேண்டும். ஒரு வீட்டின் சமையலறை சுத்தத்தைக் கொண்டே அவ்வீட்டில் பெண்களின் திறமை கணிக்கப்படுகின்றது. "சா இந்த சிபா வீட்டுப் புள்ளங்க அவங்கடசமையலறையை எவ்வளவு அழகாக வைச்சிருப்பாங்க தெரியுமா? நிலத்தில் கூட சோறு போட்டுத் தின்னலாம். ஆனால்.... எங்கட புள்ளங்க என்னன்டா? மூலைக்கு மூலை குப்பையை கூட்டி ஒதுக்குவாங்க. மிளகா டின், மல்லி டின், சீனி டின், தேயிலை டின் எல்லாம் எடுத்த எடத்தில வைக்க மாட்டாங்க. மரக்கறி வகைகளை வெட்டினா அதன் கழிவுப் பொருட்களை எல்லாம் அப்படியே குவிச்சிடுவாங்க. தேத்தண்ணி ஊத்தினாக்க கூட அந்த பாத்திரங்களை உடனே கழுவ மாட்டாங்க. இதனால ஊரில இல்லாத ஈ, கொசு எல்லாம் எங்கட வீட்டிலதான் குடிகொள்ளும். எல்லாம் எங்கட வீட்டுப் பெண் புள்ளங்க துப்புரவில்லாம வேல செய்றதால வார வினைதான்"

இப்படி அங்கலாய்க்கும் தாய்மார் அனேகரை நாம் தினசரி சந்திக்கின்றோம். தாய்மாரின் இந்த அங்கலாய்ப்பு நியாயமானதுதான். சாப்பிட்டதும் சாப்பிட்ட பாத்திரங்களை உடனே கழுவிச் சுத்தம் செய்துவிட்டு சமையலறையையும் ஒழுங்காக பெருக்கி சுத்தப்படுத்துவதுதான் ஒரு பெண்ணின் கடமையாகும். ஆனால் ஒரு சில பெண்கள் இதற்கு விதிவிலக்கு. சாப்பிட்ட பாத்திரங்களை எல்லாம் அப்படியே அடுக்கி ஒதுக்கிவிட்டு "அப்புறம் கழுவுவோம்" என படுத்துறங்கி விடுவர். இப்படியானவர்களை என்னவென்று அழைப்பது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தத்தைப் பற்றி மேலோட்டமாக கதை அளப்பார்கள். ஆனால் உள்ளோட்டமாகப் பார்த்தால் அவர்கள் அசுத்தப் பேர்வழிகளாகத்தான் இருப்பார்கள். தாய்மார் சமையலறை சுத்தத்தில் அதிக கவனம் எடுக்கத் தவறினால் அது அவ்வீட்டார் அனைவரையும் குறிப்பாக அனைவரது உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் என்பது உண்மையே.

எனவே சமையலறையில் சங்கமமாகும் சகோதரிகள் எந்நேரமும் சோர்ந்திருக்காமல் சுறுசுறுப்புடன் தமது கடமைகளைச் செய்வதில் பின்நிற்கக் கூடாது. உணவைத் தயாரிப்பதற்கும், உண்பதற்கும் பயன்படுத்தப்படும் பாத்திரங்களை உடனுக்குடன் கழுவி சுத்தஞ் செய்ய வேண்டும். சமைத்த உணவு வகைகளையும், ஏனைய உணவுப் பொருட்களையும் தூசி படியாமலும், ஈ, கரப்பொத்தான், பல்லி, எலி போன்றவற்றால் அழுக்கடையாமலும் பாதுகாக்க அவற்றை மூடி வைத்தல் பிரதானமாகும்.

சமையலறையில் ஒன்று சேரும் கழிவுப் பொருட்களை அங்குமிங்குமாக ஒதுக்கிவிடாது - அவற்றை உடனே அழுக்குத் தொட்டியிலேனும் அல்லது மூடியுள்ள வேறு பாத்திரத்திலேனும் சேர்த்து மூடி வைத்து பின்னர் அவற்றை கழிவுத் தொட்டியிலிடுவதே பண்பான பழக்கமாகும் குடிக்கும் நீரைக்கூட கொதிக்க வைத்து மூடிவைத்தே அருந்த வேண்டும். பெண்கள் சமையலறையை மாத்திரமின்றி வீடு முழுவதையுமே சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதுவே ஒரு நல்ல இல்லாளுக்குரிய நல் இலட்சியமாகும்.

வீட்டின் கூரைகளில் தூசி மற்றும் சிலந்தி வலைகள் முதலியன படியாது தினந்தோறும் அல்லது வாரம் ஒரு முறையேனும் சுத்தஞ் செய்ய வேண்டும். படுக்கும் பாய், தலையணை, மெத்தை, கட்டில் போன்றவற்றை அழுக்கில்லாமலும் மூட்டைப் பூச்சி குடி கொள்ளாமலும் பேண வேண்டும். இவற்றை வாரா வாரம் வெயிலில் போட வேண்டும். வீட்டின் தரைகளில் ஏற்படும் உடைப்புகள் பழுதுகளை உடனுக்குடன் சீர்திருத்த வேண்டும். சுவர், ஜன்னல், கதவு முதலியவற்றில் ஏற்படும் வெடிப்புகள், பழுதுகளையும் உடனுக்குடன் சீர் செய்தல் வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக மலசலகூடம் அதன் சுற்றுப்புறம் போன்றவற்றை தினசரி சுத்தஞ் செய்வது மிக முக்கியமாகும். வீட்டு முற்றத்தில் இளநீர் மட்டைகள், சிரட்டை, உடைந்த டின்கள் போன்றவற்றை ஆங்காங்கே போடக்கூடாது. இவற்றில் தேங்கி நிற்கும் அழுக்கு நீரால் நுளம்பு மற்றும் நோய்க்கிருமிகள் பெருக வாய்ப்புண்டு. எனவே இவற்றை உடனுக்குடன் அகற்றிவிட வேண்டும்.

இவ்வாறு வீட்டையும் வீட்டுச் சூழலையும் நாம் ஒழுங்காக - சுத்தமாக வைத்திருந்தால், நோய் அணுகாமல் நாம் சௌபாக்கியமாக வாழலாம். எனவே தினமும் நாம் சுத்தத்தைப் பேணுவோம். சுகமாக வாழ்வோம் .

**மாதர் மஜ்லிஸ்**

**இலங்கை வானொலி முஸ்லிம் சேவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணம் இன்று மலர்ந்து நாளை வாடிவிடும் மலரல்ல

## ஆயுள் முழுவதும் இருவரும் அன்புடன் வாழ்வதே மணவாழ்வு

திருமணம் என்பது வெறும் வேடிக்கையும், விளையாட்டுமல்ல. அது ஆயிரம் காலத்துப் பயிர். ஒரு ஆணுக்கோ, பெண்ணுக்கோ திருமணத்தின் பின்னர்தான் வாழ்க்கையே ஆரம்பமாகின்றது. அதுதான் அவர்களிடையே ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்துகின்றது.

எனவே, திருமண விடயத்தில் எமது இளம் சந்ததிகள் திடீர் தீர்மானங்களை எடுக்கக்கூடாது. இன்று மணமுடித்து நாளை விவாகரத்து பெறுவதல்ல மணவாழ்க்கை.

ஆயுள் முழுவதும் ஒருவரோடுவர் அன்பு கொண்டு ஆனந்தமாக வாழ்வதே மணவாழ்க்கையாகும். இதனை அனைவரும் உணர வேண்டும்.

திருமணம் என்பது இன்று மலர்ந்து நாளை வாடி விடும் மலரல்ல. அது எம்மைப் பொறுத்து நம் வாழ்நாள் முழுவதும் வாடா மலராய் மலர்ந்து மணம் பரப்பவல்லது.

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" என்பார்கள். இவ்வளவு புனிதமான ஒரு பந்தத்தை சுலபமான ஒரு காரியமாக கருதுகின்றனர் சிலர்.

திருமணம், காதல், வாழ்க்கை ஆகிய மூன்றையும் இன்றைய இளம் சந்ததியினர் ஏதோ சர்வ சாதாரணமாக, வெறும் பொழுது போக்காக கருதுகின்றனர். திருமணத்தின் புனிதத் தன்மையை அதன் மேன்மையை புரிந்து கொள்ளாத அறிவீனர்களே இவ்வாறு அதைக் கருதுகின்றனர் எனக் கூறலாம்.

திருமணம் என்பது பலமான , வளமான ஓர் உறவாகும். உடலால், உள்ளத்தால், உதிரத்தால், உணர்வுகளால் பிணைக்கப்பட்ட இரு நெஞ்சங்களின் சங்கமமே திருமணமாகும்.

இந்த பலமான உறவில் பங்கம் ஏற்படக் கூடாது. ஆயுள் உள்ளவரை, ஆத்மா உள்ளவரை இருவரும் இணைந்திருப்பதே இதன் இலட்சணமாகும்.

ஆகவே மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் முன்னர் ஒரு முறைக்கு பலமுறை நன்கு சிந்தித்தே செயலாற்ற வேண்டும்.

வாழ்க்கையை வசந்தமாக்க வளமுள்ள சோலையாக்க நல்ல குணம் படைத்த இரு அன்புள்ளங்கள் தேவை. இதனைத்தான் ஒரு கவிஞரும் குறிப்பிடுகையில் "வண்டி உருண்டோட அச்சாணி தேவை அது போல வாழ்க்கை எனும் வண்டி ஓட இரண்டு அன்புள்ளங்கள் தேவை" என்கிறார்.

ஆம்! இரண்டு அன்புள்ளங்கள் ஐக்கியப்பட்டால் அங்கே குழப்பத்துக்கோ கலகத்திற்கோ இடமிருக்காது.

பூமாலை கழுத்திலாட, புது வாழ்வு கருத்திலாட, புன்னகை உதட்டிலாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் என்னும் பூங்காவில் அடி எடுத்து வைக்கும் மணமக்கள் இருவரும், அன்றைய மகிழ்ச்சி என்றும் நிலைக்க ஐக்கியமாக வாழ வேண்டும். இத்தருணத்தில் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற மூலமந்திரத்தையும் மறக்கக் கூடாது.

திருமணம் என்ற வண்டியின் இரு சக்கரங்களே கணவனும் மனைவியும்.

இரண்டு சக்கரங்களும் ஒரே பகுதியில் சுழன்றால் தான் வாழ்க்கைப் பயணத்தை வசந்தமாக்கலாம்.

ஆகவே, கணவனும், மனைவியும் கருத்தொருமிருத்து வாழ வேண்டும். அப்போதே மணவாழ்வில் (நறு) மணம் வீசும்.

இத்தகைய கருத்தொருமித்த நிலை எல்லோர் வாழ்விலும் கிடைத்து விடுவதில்லை. இன்றைய நாகரிக யுகத்திலே இளம் சந்ததியினர் தமது இளமைப் பருவத்திலே காதல் என்று கண்மூடித்தனமாக தம் இஷ்டப் படியே மண வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர்.

சிறிது காலத்தில் இருவரும் வீண் சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தி, தம் வாழ்வை தாமாகவே இருள் சூழ்ந்த பாலைவனமாக ஆக்கிக் கொள்கின்றனர்.

இத்தகையோரை நாம் அன்றாடம் சந்திக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலை மாறவேண்டும். கணவன் - மனைவி ஆகிய புனித பந்தத்தின் ஐக்கியம் என்றுமே குலையக் கூடாது.

இல்வாழ்க்கையில் தம் விருப்பப்படி இணைந்தது போல், இகத்தாருக்கு இனிதே வாழ்ந்து காட்ட வேண்டும். இதுவே இல்லற வாழ்வின் இளம் தம்பதிகளின் இலட்சணமாகும்.

எந்த ஒரு கணவனும் மனைவியும் இதனை மனதில் கொள்வது அவசியம். வெறும் உடல் இன்பத்துக்காக மட்டும் திருமணம் நடப்பதில்லை.

புனிதமான ஒரு இல்லறத்தை, இல்லத்தை, சமூகத்தை சந்ததியை உருவாக்கவே திருமணம் வித்திடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pen பற்றும் பெண்
# பின்பற்ற பாடுவாள் பண்

நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் என்ற பெயர் எழுத்துலகிற்கு நன்கு பரிச்சயமான பெயர்தான். 1975 முதல் செல்வி ரஷீத் நூருல் அயின் என்ற பெயரில் இலக்கிய உலகில் தடம் பதித்த இவர் மலையகத்தின் உடுதெனிய முஸ்லிம் கிராமத்தின் முஹம்மத் ரஷீத் -உம்மு சல்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார். உடுதெனிய முஸ்லிம் வித்தியாலயம், மடவளை மதீனா கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற இவர் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுசனத் தொடர்பு துறை சான்றிதழும், தொலைக்கல்வி நிறுவனத்தின் பொதுசனத் துறை டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார்.



1981ஆம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டுவரை தினபதி -சிந்தாமணி ஆசிரிய பீடத்தில் பத்திரிகையாளராகவும், உதவி ஆசிரியராகவும் கடமையாற்றிய இவர் தற்போது அரசாங்க தகவல் திணைக்களத்தில் தொடர்பியலாளராக பணிபுரிந்து வருகிறார். அங்கிருந்து வெளிவரும் "திங்கள்" தமிழ் சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும், தனது சிங்கள மொழி தேர்ச்சியின் காரணமாக தகவல் திணைக்களத்தின் சிங்கள வெளியீடுகளான "தெச(த்)திய", "தொரதுரு" ஆகியவற்றின் எழுத்தாளராகவும் முத்திரைப் பதித்து வருகிறார்; ஜனரஞ்சக "ஜனனி" சஞ்சிகையிலும் தனது திறமையைக் காட்டி வருகிறார். தற்போதைய இலங்கை தமிழ்ப் பத்திரிகைத் துறையில் அனுபவமிக்க ஒரேயொரு முஸ்லிம் பெண் பத்திரிகையாளர் என இவரை குறிப்பிடலாம்.

தமிழ்ச் சேவை மூலம் ஒலிபரப்புத் துறையில் கால்பதித்த இவர், முஸ்லிம் சேவை "மாதர் மஜ்லிஸ்" பிரதித் தயாரிப்பாளர்களில் ஒருவராக 1980ம் ஆண்டு முதல் இன்று வரை திகழ்ந்து வருகிறார். முஸ்லிம் சேவையின் கவியரங்கு, சிறுகதை, இலக்கிய மஞ்சரி, போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகளிலும், தமிழ்ச்சேவை பூவும் பொட்டும், வீட்டுக்கு வீடு, எப்.எம். சேவையின் வான் பல்கலைக்கழகம் என்பவற்றிலும் ரூபவாஹினியிலும் தனது பங்களிப்பினை நல்கியுள்ளார்.

பின்த் ஸல்மா, உடுதெனிச் செல்வி, ஷஃப்னா ஆகியவை இவரது புனைப் பெயர்கள்.

இலக்கியத் துறையில் பெரிதும் ஈடுபாடுள்ள கவிஞர் என். நஜ்முல் ஹுசைன் இவரது வாழ்க்கைத் துணைவர். ஓர் ஆணின் வெற்றியின் பின்னணியில் ஒரு பெண் இருக்கிறாள் என்பார்கள். அதனை உண்மைப்படுத்தும் பெண்ணாக நூருல் அயின் திகழ்வதோடு அவரது வெற்றியின் பின்னணியில் அவரது கணவரது ஒத்துழைப்பே இருக்கிறது என்பதுவும் மகிழத்தக்க உண்மையாகும்.

இதனால் உற்சாகத்தோடு எழுத்துப் பணியில் ஈடுபடும் இப்பண்பாடும் பெண் எமது சமுதாயத்துக்கு கிடைத்த ஒரு சொத்தாகும். அவரது எழுத்தாற்றல், புகழ் மென்மேலும் சிறக்க, குடும்ப வாழ்வு இன்னும் உயர்வுற அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்.

எம்.எப். முஹம்மத்.
பிரசுரகர்த்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org